REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2024 ஜனவரி 16 செவ்வாய்க்கிழமை

# தினகரன்
THINAKARAN தினகரன்

வரு. 92 இல. 14 | Tuesday 16, January, 2024 | 12பக்கங்கள் | 50/-




## குற்றச் செயல்களில் ஈடுபட்டு வரும் 42 ஆயிரத்து 248 பேரில் 1468 பேர் கைது

### பொலிஸ் தலைமையகம் தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

நாடளாவிய ரீதியில் குற்றச் செயல்களில் ஈடுபட்டு வரும் 42,248 சந்தேக நபர்களில், 1468 சந்தேக நபர்களை கைது செய்துள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

இவர்கள், யுக்திய சுற்றிவளைப்பில் கடந்த 24 மணித்தியாலத்துக்குள் கைதாகினர்.

போதைப்பொருள் குற்றச்சாட்டின் பேரில் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ள 4088 சந்தேக நபர்களில் 254 பேரை கைது செய்ய முடிந்துள்ளதாகவும் பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

போதைப்பொருள் குற்றங்கள் அல்லாத ஏனைய குற்றச்செயல்கள் தொடர்பில் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ள 31,417 சந்தேக நபர்களில் 942 பேர், கைதாகியுள்ளதாகவும் தலைமையகம் தெரிவித்துள்ளது.

அதைவேளை, கைவிரல் அடையாளம் மூலம் இனம் காணப்பட்டு இதுவரை 04

### காரை நகரில் தேசிய பொங்கல் நிகழ்வு



யாழ்ப்பாணம், காரைநகர் வியாவில் ஐயனார் ஆலயத்தில் தேசிய நல்லிணக்க தைப்பொங்கல் விழா நேற்று இடம்பெற்றது. நீதி அமைச்சர் விஜேயதாச ராஜபக்ஷவின் பங்குபெற்றுதலுடன் இடம்பெற்ற இப்பொங்கல் விழாவில், பொதுமக்கள் மற்றும் வெளிநாடு வாழ் உறவுகளும் இணைந்திருந்தன. *(யாழ். விசேட நிருபர்)*

## வெளிநாடுகளில் பணியாற்றும் 03 மில்லியன் பேரில், 1.2 வீதமானோரே அமைச்சில் முறைப்படி பதிவு



**லோரன்ஸ் செல்வநாயகம்**

வெளிநாட்டு வேலைவாய்ப்புகளில் ஈடுபட்டுள்ள சுமார் 3 மில்லியன் இலங்கையர்களில், வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சில், 1.2 வீதமானோரே பதிவு செய்துள்ளதாக தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

இவ்வாறு வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சில் பதிவுசெய்யாது சட்டவிரோதமாக வெளிநாடு சென்றவர்களே, வெளிநாட்டு வேலைவாய்ப்புகளின் போது, பல்வேறு பாதிப்புகளுக்கு முகங்கொடுப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

கண்டியில் மல்வத்து, அஸ்கிரிய மகாநாயக்க தேரரை சந்தித்து ஆசி பெற்றுக்கொண்ட பின்னர் ஊடகங்களுக்கு 04

# அரச கடன் முகாமைத்துவ பொறுப்பு இனி, சுயாதீன நிறுவனத்தின் கீழ்

### நிதியமைச்சின் தனியான பிரிவாக கொண்டுவரத் திட்டம்

### மத்திய வங்கிக்கு வெளியே அரச நிதிச் செயற்பாடுகளை கொண்டுவர புதிய சட்டங்கள்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

நாட்டின் நிதித்துறையில் குறிப்பிடத்தக்க மாற்றங்களை மேற்கொண்டு அரச கடன் முகாமைத்துவத்திற்கான பொறுப்பை, இலங்கை மத்திய வங்கியிடமிருந்து நீக்கி நிதியமைச்சின் தனியான சுயாதீன நிறுவனமாக ஸ்தாபிப்பதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

அரச நிதியை, மத்திய வங்கிக்கு வெளியே மிக சுயாதீனமான வகையில் முகாமைத்துவம் செய்வதற்கு இடமளிப்பதே இந்த புதிய நிறுவனம் ஸ்தாபிப்பதற்கான நோக்கமாகும்.

அந்தவகையில் நிதியமைச்சில் தற்போது புதிய நிறுவனத்தை ஸ்தாபிப்பது தொடர்பான நடவடிக்கைகளுக்கு தேவையான சட்டம் தயாரிக்கும் நடவடிக்கைகள் இடம்பெற்று வருகிறது. இது தொடர்பில் மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க தெரிவித்ததாவது: தற்போது தயாரிக்கப்பட்டுவரும் மேற்படி சட்டத்தை எதிர்வரும் மார்ச் மாதம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். அதற்கு மேலதிகமாக அந்த சட்டத்திற்கிணங்க, புதிய நிறுவனம் இந்த வருட இறுதிக்குள் நடைமுறைப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப் படுகிறது. 04



## பொருளாதார கொள்கையில் இறுக்கமான போக்கு அவசியம்

### வட மாகாண ஆளுநரிடம் IMF பிரதிநிதி

நாட்டை கட்டியெழுப்புவதற்கு தற்போதைய இறுக்கமான பொருளாதார கொள்கைகளை பின்பற்றுவது அவசியம் என, சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.

வட மாகாண ஆளுநர் பி.எஸ். எம்.சார்ள்ஸை சந்தித்து கலந்துரையாடிய சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் குழு, இதனை குறிப்பிட்டுள்ளது. 04



## மாகாண சபைகளை ஒழிப்பதற்கான தேர்தல் விஞ்ஞாபனங்கள் அவசியம்

### மக்களுக்கு சேவையாற்ற உள்ளூராட்சி மன்றங்களை பலப்படுத்துங்கள்

**லோரன்ஸ் செல்வநாயகம்**



எதிர்வரும் தேர்தலுக்காக தயாரிக்கப்படும் கொள்கை விஞ்ஞாபனத்தில், மாகாண சபை முறைகளை ஒழிப்பது முக்கிய யோசனையாக கவனத்திற் கொள்ளப்பட வேண்டுமென, பாத்பைன்டர் மன்றத்தின் ஸ்தாபகரும் முன்னாள் இந்தியாவுக்கான இலங்கைத் தூதுவருமான மிலிந்த மொரகொட சகல அரசியல் கட்சிகளிடமும் மீண்டும் வேண்டுகோள் விடுத்துள்ளார். 04



வடமாகாண ஆளுநர் அலுவலகத்தின் தைப்பொங்கல் விழாவில் சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். வடமாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம். சார்ள்ஸ் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் குழு பொங்கல் பொங்குவதில் ஈடுபட்டுள்ளதை படத்தில் காணலாம். முன்னாள் எம்.பி ஆனந்தசங்கரி உட்பட முக்கியஸ்தர்கள் பலரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டுள்ளனர்.

## க.பொ.த வினாத்தாள் வெளியான விவகாரம்

### கைதான ஆசிரியருக்கு விளக்கமறியல்

**லோரன்ஸ் செல்வநாயகம்**



2023 க.பொ.த உயர்தரப் பரீட்சையின் விவசாய விஞ்ஞான பாடத்தின் இரண்டாவது வினாத்தாள் வெளியானமை தொடர்பில், ஆசிரியர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். குற்றப்புலனாய்வு பிரிவு இவரைக் கைது செய்து, நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியது. இதையடுத்து 04

## தேசிய வேட்பாளராக ஜனாதிபதி களமிறங்க ஐ.தே.க மாநாடுகளில் முடிவு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



ஜனாதிபதித் தேர்தலில் தேசிய வேட்பாளராக ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க போட்டியிட வேண்டுமென, கட்சியின் மூன்று மாவட்ட மாநாடுகளில் ஏகமனதான தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. 04

## நாட்டை முன்னோக்கி நகர்த்த நல்லிணக்கம் மிக அவசியம்



நாட்டை முன்னோக்கி கொண்டு செல்வதற்கு தேசிய நல்லிணக்கம் முக்கியமானது என நீதி அமைச்சர் விஜேயதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். யாழ்ப்பாணத்திற்கு இரு தினங்கள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள நீதி அமைச்சர் விஜேயதாச ராஜபக்ஷ, நேற்று யாழ் ஆரியகுளம் நாக விகாரையில் ஊடகவியலாளர்களைச் சந்தித்தார் .

இங்கு கருத்து தெரிவித்த அமைச்சர்: தற்பொழுது நாட்டில் சுமுகமான நிலை காணப்படுகிறது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 04

## பொதுஜன பெரமுன ஜனாதிபதி வேட்பாளர்: இன்னும் தீர்மானமில்லை



**லோரன்ஸ் செல்வநாயகம்**

ஜனாதிபதித் தேர்தலில் பொதுஜன பெரமுன கட்சியின் சார்பில் வேட்பாளவரை நிறுத்துவதா? இல்லையா என இதுவரை இறுதித்தீர்மானம் எதுவும் எடுக்கப்படவில்லை என முன்னாள் ஜனாதிபதி மஹிந்த 04


## பாடப்புத்தகங்கள்–சீருடைகள் பெப்ரவரிக்குள் விநியோகம்



பாடசாலை மாணவர்களுக்கான இலவச பாடப்புத்தகங்கள் மற்றும் சீருடைகள் பெப்ரவரி மாதம் 19 க்கு முன்னர் வழங்கப்பட உள்ளது. இதற்கான துரித ஏற்பாடுகளை கல்வி அமைச்சு மேற்கொண்டுள்ளதாக தெரிய வருகிறது.

இதுகுறித்து கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்துள்ளார். இதுபற்றி அமைச்சர் தெரிவித்ததாவது: 04

## 2 வாரங்களில் 5000 டெங்கு நோயாளர்கள்



வருடத்தின் (2024) முதல் பதினைந்து நாட்களுக்குள், 5009 டெங்கு நோயாளர்கள் அடையாளங் காணப்பட்டுள்ளனர். பத்து மாவட்டங்களில் அதிக ஆபத்துள்ள பிரதேசங்களாக அடையாளம் காணப்பட்ட அறுபத்தேழு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில், இவர்கள் அடையாளங் காணப்பட்டுள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு தெரிவித்துள்ளது.

மேல் மாகாணத்திலே, அதிகளவான நோயாளர்கள் பதிவாகியுள்ளனர். இம்மாகாணத்தில் 1700 பேர் பதிவாகியுள்ளனர். 04

## களுகங்கையில் நீராடிய மாணவர்கள் உயிரிழப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**


களுகங்கையில் நீராடிய பாடசாலை மாணவர்கள் மூவர், நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

களுத்துறை பகுதியிலுள்ள களுகங்கையில் இவர்கள் நீராடியுள்ளனர். இரண்டு மாணவிகளும் ஒரு மாணவருமே நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளதாக களுத்துறை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்த மாணவிகள் 15 மற்றும் 16 வயதுடையவர்கள் என்றும், மாணவர் 17 வயதுடையவர் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## கொழும்பு துறைமுகத்தில் அதிசொகுசு பயணிகள் கப்பல்

### 1090 பயணிகள், 790 பணியாளர்கள் வருகை



மாலைதீவிலிருந்து ரிவேரா சொகுசு பயணிகள் கப்பல் நேற்று (15) கொழும்பு துறைமுகத்துக்கு வந்துள்ளது. 1,090 பயணிகள் மற்றும் 790 பணியாளர்களுடன் இக்கப்பல் வந்துள்ளது.

மார்ஷல் தீவுகள் கொடியுடனான இந்தக் கப்பலில் அமெரிக்க, கனேடிய மற்றும் இந்திய சுற்றுலாப் பயணிகள் குழுவொன்று வருகை தந்துள்ளது. 04

### இவ்வருட வரவு செலவு திட்டத்தில்

# நூறு நகரங்களை அழகுபடுத்தும் திட்டத்திற்கு 600 மில். ஒதுக்கீடு

### நகர அபிவிருத்தி அதிகார சபை தெரிவிப்பு

நூறு நகரங்களை அழகுபடுத்தும் திட்டத்திற்காக இந்த வருட வரவு செலவு திட்டத்தில் 600 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாக நகர அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது. மேற்படி விதிமுறைகளுடன் 9 திட்டங்களின் பணிகளை முடிக்க திட்டமிடப்பட்டுள்ளதாகவும் அதிகார சபை தெரிவித்துள்ளது.

கம்பஹா, மினுவாங்கொடை, பாணந்துறை, அலவ்வ, ஹொரணை மற்றும் அவிசாவளை பொதுச் சந்தைகளின் அபிவிருத்தி, வரக்காபொல மற்றும் முல்லைத்தீவு பஸ் தரிப்பு நிலையங்களின் அபிவிருத்தி, நிந்தவூர் கடற்கரைப் பூங்கா நிர்மாணம் ஆகியன இந்தத் திட்டங்களாகும்.

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவின் ஆலோசனையின் பேரில் இந்த திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. இந்த வருட இறுதிக்குள் உரிய வேலைத் திட்டங்களை நிறைவு செய்வதற்கான திட்டங்களை தயாரிக்குமாறு நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு அமைச்சர் பணிப்புரை விடுத்துள்ளார்.

நாடு முழுவதும் பரவியுள்ள வசதிகள் குறைவான நகரங்களை கண்டறிந்து, அவற்றின் அடிப்படை வசதிகளை மேம்படுத்தி, அந்த நகரங்களை முறையாக அழகுபடுத்தும் நோக்கில், நூறு நகர அபிவிருத்தித் திட்டம் தொடங்கப்பட்டது.

அதாவது 2021ஆம் ஆண்டு ஆரம்பத்தில், 100 சிறிய மற்றும் நடுத்தர நகரங்கள் இதற்காக அடையாளம் காணப்பட்டன, ஆனால் பின்னர் அது 116 நகரங்களாக அதிகரித்தன.

2022 ஆம் ஆண்டின் இறுதியில், இந்த 116 நகரங்களின் அபிவிருத்திப் பணிகள் நிறைவடைந்தன. அதற்காக செலவிடப்பட்ட மொத்தத் தொகை 1,620 மில்லியன் ரூபாவாகும்.

நூறு நகரங்களை அழகுபடுத்தும் திட்டத்தின் கீழ் 2023 ஆம் ஆண்டிற்கான அனைத்து மாகாணங்களையும் உள்ளடக்கிய 156 திட்டங்கள் அடையாளம் காணப்பட்டு ஆரம்பிக்கப்பட்டுள்ளன. பொதுச் சந்தைகள், பஸ் நிலையங்கள், வாகன நிறுத்துமிடங்கள், நடைபாதைகள், பல்நோக்கு கட்டிடங்கள், நகரப் பூங்காக்கள் மற்றும் நகரங்களை அழகுபடுத்தும் திட்டங்கள் ஆகியவை இதில் அடங்கும்.

2023 ஆம் ஆண்டு இறுதிக்குள் 133 வேலைத்திட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக நகர அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது. எஞ்சியுள்ள 23 திட்டங்கள் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன. நகர அபிவிருத்தியின் மூலம் நாட்டில் பெருமளவிலான நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்புகளை உருவாக்க முடியும் என அமைச்சர் பிரசன்ன ரணதுங்க சுட்டிக்காட்டியுள்ளார்.




இலங்கைக்கு வருகை தந்துள்ள இந்தியாவிலிருந்து வெளிவரும் தினத்தந்தி பத்திரிகையின் துபாய் நாட்டுக்கான பதிப்பின் ஆசிரியர் எம். கே. ஹிதாயத்துல்லாவுக்கு ஹாசிம் உமர் பவுண்டேசன் அமைப்பு கொழும்பில் விருந்துபசாரம் அளித்து கௌரவித்தது. அமைப்பின் ஸ்தாபகர் புரவலர் ஹாசிம் உமர், அவருக்கு பொன்னாடை போர்த்தி கௌரவிப்பதையும் அருகில் கலந்து கொண்டவர்களையும் படத்தில் காணலாம்.

## பெந்தோட்டை மாணிக்கக்கல் வர்த்தக கண்காட்சி
















சீனன்கோட்டை இரத்தினக்கல் ஆபரண வர்த்தக சங்கத்தின் (CGJTA) ஏற்பாட்டில் சர்வதேச மாணிக்கக்கல் வர்த்தக கண்காட்சி பெந்தோட்டை பீச் ஹோட்டலில் நடைபெற்றது. இறுதிநாள் நிகழ்வில் (13) பங்கேற்ற எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாஸ, மு.கா தலைவர் ரவூப் ஹக்கீம் ஆகியோர் கண்காட்சி கூடங்களை பார்வையிடுவதையும் ஏனைய காட்சி கூடங்களையும் படங்களில் காணலாம்.

# நுளம்பு பெருகும் சூழல் வைத்திருந்தால் பாரபட்சமின்றி கடும் சட்ட நடவடிக்கை

### வடக்கு ஆளுநர் எச்சரிக்கை

**கரவெட்டி தினகரன் நிருபர்**

நுளம்புக் குடம்பிகள் பெருகும் வகையில் சூழலை வைத்திருப்போருக்கு எதிராக பாரபட்சம் இன்றி நடவடிக்கை எடுக்குமாறு வடக்கு மாகாண ஆளுநர் பணிப்புரை விடுத்துள்ளார்.

வடக்கு மாகாணத்தில் யாழ்ப்பாணம் மாவட்டத்திலேயே அதிகளவான டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர். அதிலும், யாழ். பிராந்திய சுகாதார சேவை பணிமனைக்கு உட்பட்ட பகுதிகளிலே நாளாந்தம் அதிக டெங்கு நோயாளர்கள் பதிவாவதாக வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் த. சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.

மாகாண டெங்கு நிலைமை தொடர்பான மீளாய்வு கூட்டம், வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ். எம்.சார்ள்ஸ் தலைமையில் நடைபெற்ற போதே இந்த விடயங்கள் தெரிவிக்கப்பட்டன.

வருடத்தின் இதுவரையான காலப்பகுதிக்குள் மாத்திரம் 775 டெங்கு நோயாளர்கள் யாழ். மாவட்டத்தில் பதிவாகியுள்ளனர். இந்நிலையில் கடந்த வருடம் முழுவதும் யாழ். மாவட்டத்தில் 3,986 டெங்கு நோயாளர்களே பதிவாகினர். ஆறு மரணங்களும் பதிவாகின. இதில் ஐந்து கடந்த டிசம்பர் மாதத்திலே பதிவாகியமை குறிப்பிடத்தக்கது.

யாழ். மாநகர சபை உள்ளிட்ட ஏனைய உள்ளூராட்சி நிறுவனங்கள் தங்களால் இயன்ற அனைத்து செயல்பாடுகளையும் மேற்கொண்டு வருகின்றன என்று அவற்றுக்குப் பொறுப்பான அதிகாரிகள் தெரிவித்தனர்.

எனினும், பொதுமக்கள் தங்களின் பொறுப்புக்களை உணர்ந்து செயற்படுவதில்லை எனவும் அதிகாரிகள் கூறினார்கள். இந்நிலையில், சுற்றாடலை சுத்தமாக வைத்திருக்காத 1,542 இடங்கள் கடந்த 12 ஆம் திகதி வரை அடையாளம் காணப்பட்டுள்ளதுடன் அதில் 147 இடங்கள் தொடர்பில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

கிராமப்புறங்களை விட படித்த சமூகம் அதிகமாக வசிக்கும் இடங்களிலே சூழல் பாதுகாப்பு மிக மோசமாக காணப்படுவதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர். இதற்கமையை, சூழலை சுத்தமாக பேணாது நுளம்பு பரவும் வகையில் செயற்படுவோருக்கு எதிராக பாரபட்சம் இன்றி நடவடிக்கை எடுக்குமாறு வடக்கு மாகாண ஆளுநர் பி. எஸ். எம். சார்ள்ஸ், அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார்.

இந்த செயல்பாடுகளுக்கு பொலிஸாரின் ஒத்துழைப்புகளை பெற்றுக்கொள்ளுமாறும் ஒவ்வொரு தெருவிலும் பொதுவான இடங்களில் குப்பை தொட்டிகளை வைத்து, அதனை உரியவாறு பராமரிக்குமாறும் ஆளுநர் தெரிவித்தார்.

இவ்வாறான செயல்பாடுகளில் பொதுமக்களை உள்வாங்கி உள்ளூராட்சி நிறுவனங்கள் செயல்பட வேண்டும் எனவும் ஆளுநர் தெரிவித்தார். இதேவேளை பொதுமக்களும் சமூக பொறுப்புகளை உணர்ந்து செயல்படுவது இன்றியமையாதது என்று வடக்கு மாகாண ஆளுநர் பி. எஸ். எம். சார்ள்ஸ் என்றார்.

## வடக்கின் உதயம்



யாழ்.போதனா வைத்தியசாலையில் பொங்கல் நிகழ்வுகள் சிறப்பான முறையில் நடைபெற்றன. வைத்தியசாலை பணிப்பாளர் த. சத்தியமூர்த்தி , வைத்தியர் யமுனானந்தா, வைத்தியர்கள் , தாதியர்கள் , நிர்வாக உத்தியோகஸ்தர்கள் உள்ளிட்டோர் பொங்கல் நிகழ்வில் கலந்து கொண்டிருந்தனர். யாழ்.போதனா வைத்தியசாலையில் பொங்கல்

யாழ். விசேட நிருபர்

## மன்னாரில் பொங்கல் விழா



**(தலைமன்னார் விஷேட நிருபர் )**

தமிழர்களின் பெருவிழாக்களில் ஒன்றான தைப்பொங்கல் விழா இம்முறையும் மன்னார் மாவட்டத்தில் மிக சிறப்பாக தமிழ் மக்களால் கொண்டாடப்பட்டது.

இந்து மற்றும் கத்தோலிக்க ஆலயங்களில் காலையில் இறை வழிபாடுகள் நடைபெற்றபோது பொது மக்கள் பலர் இறைவனுக்கு நன்றி கூறும் முகமாக ஆலயங்களில் வழிபட்டதையும் காணக்கூடியதாக இருந்தது.

ஆலயங்களில் சூரியனுக்கு பொங்கல் செய்ததுடன் வர்த்தக நிலையங்கள் மற்றும் வீடுகளிலும் அதிகமானோர் பொங்கல் செய்து இறைவனுக்கு நன்றி கூறியதையும் காணக் கூடியதாக இருந்தது.

## யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற "யாதுமானவள்" குறும்பட வெளியீடு

**யாழ்.விசேட நிருபர்**

ஒப்பனைக் கலைஞரும், நடிகையுமான ஆர்.ஜே.வாணியின் தயாரிப்பு மற்றும் இயக்கத்தில் உருவான “யாதுமானவள்” குறும்பட வெளியீடு அண்மையில் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது.

யாழ். ஸ்ரான்லி வீதியில் அமைந்துள்ள ஈழத்திரை (செல்வா திரையரங்கு) திரையரங்கில் இடம்பெற்ற இந்த வெளியீட்டு நிகழ்வில் படக்குழுவினர், ஈழ சினிமா அபிமானிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

பிரபா, M.S.F சஜி, RJவாணி ஆகியோர் பிரதான பாத்திரத்திலும் தர்ஷி, கிரிஷாந்த், ராகுல் துணைப் பாத்திரங்களிலும் நடித்துள்ளனர். ஒளிப்பதிவை சயேசனும், படத்தொகுப்புபணிகளைS.A.நிலானும், இசையமைப்பு ரொஷானும், கதை, திரைக்கதை, வசனம் எழுதி R.J வாணி இக் குறும்படத்தை இயக்கியுள்ளார்.

## மோட்டார் சைக்கிள் விபத்தில் இரு இளைஞர்கள் பலி

**(பரந்தன் குறூப் நிருபர்)**

கிளிநொச்சி வட்டக்கச்சி பிரதான வீதியின் கோவிந்தன் கடை சந்திப் பகுதியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் இரண்டு இளைஞர்கள் உயிரிழந்த நிலையில் அவரது சடலங்களும் மீட்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சியிலிருந்து வட்டக்கச்சி செல்லும் வீதியின் கோவிந்தன் கடை சந்திப்பகுதியில் உள்ள நீர்ப்பாசன கால்வாய்க்குள் (14.01.2024) இரண்டு தலைக் கவசங்கள் இரண்டு சோடி பாதணிகள் மற்றும் மோட்டார் சைக்கிள்கள் என்பவற்றை அவதானித்த பிரதேச மக்கள் கிளிநொச்சி பொலிஸாருக்கு வழங்கிய தகவல்களின் அடிப்படையில் கிளிநொச்சி பொலிசார் விசாரணைகளை முன்னெடுத்தனர். சம்பவ இடத்திற்கு வருகை தந்த கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றத்தின் நீதவான் பி ஆர் ஐ ஜெமில் முன்னிலையில் நீர்ப்பாசன. கால்வாயிலிருந்து குறித்த இரண்டு சடலங்களும் மீட்கப்பட்டுள்ளன. சடலங்களை பார்வையிட்ட நீதவான் உடற்கூற்று பரிசோதனைகளின் பின்னர் உறவினர்களிடம் சடலங்களை கையளிக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

## கொடிகாமம்-கச்சாயில் இளைஞன் மீது கத்திக் குத்து

**சாவகச்சேரி விசேட நிருபர்**

கொடிகாமம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கச்சாய்ப் பகுதியில் கடந்த சனிக்கிழமை இரவு இளைஞன் ஒருவர் மீது குழுவொன்று கத்திக் குத்து நடத்தியதில் இளைஞன் தலையில் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கச்சாய் பகுதியில் குழுவாக நின்ற இளைஞர் குழுவொன்றே மேற்படி இளைஞன் மீது தாக்குதல் நடத்தியிருப்பதாக தெரிய வருகிறது. இதில் கச்சாய் பகுதியைச் சேர்ந்த 33 வயதான இளைஞனே தலையில் காயமடைந்த நிலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

# கடும் மழையால் கிழக்கில் பாலங்கள், வீதிகள் சேதம் புனரமைப்பு பணிகளுக்கு அமைச்சர் பந்துல உத்தரவு




கிழக்கு மாகாணத்தில் பெய்த கடும் மழையால் அம்பாறை கல்கந்த வீதி கடுமையாக சேதமடைந்தது. இதைப் பார்வையிடுவதற்காக ஊடகத்துறை, போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் பந்துல குணவர்தன அம்பாறைக்கு (15) விஜயம் செய்தார். வீதியைப் பார்வையிட்ட அமைச்சர், உடனடியாக புனரமைப்பு பணிகளை ஆரம்பிக்குமாறு வீதி அபிவிருத்தி அதிகார சபை அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார். அமைச்சருடன், பாராளுமன்ற உறுப்பினர் டபிள்யூ.வீரசிங்க மற்றும் அதிகாரிகளும் சென்றிருந்தனர்.

## அதிவேக நெடுஞ்சாலையில் பஸ் வண்டி தீக்கிரை

**(லோரன்ஸ் செல்வநாயகம்)**

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் பஸ் வண்டியொன்று, நேற்று தீப்பற்றிக்கொண்டது.

இதில், பயணிகளுக்கு எவ்வித ஆபத்தும் ஏற்படவில்லை என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் அதிவேக நெடுஞ்சாலை பொலிஸார் தெரிவிக்கையில், பெலியத்த இடம்மாறலுக்கு அருகாமையில் இந்த பஸ் வண்டி திடீரென தீப்பற்றியதாக குறிப்பிட்டுள்ளனர்.

எவ்வாறாயினும் பஸ் தீப்பற்றும் வேளையில் பயணிகள் உடனடியாகவே அதிலிருந்து வெளியேறினர். இதையடுத்து எவருக்கும் எந்த பாதிப்பும் ஏற்படவில்லையென்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். எவ்வாறாயினும், அந்த பஸ் வண்டி முற்றாக சேதமடைந்துள்ளதாகவும் பதுளையிலிருந்து கொழும்பு நோக்கிச் சென்ற பஸ் வண்டியே இவ்வாறு தீ அனர்த்தத்துக்குள்ளாகியதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.

# 10,000 கிலோ கருவாடு,மாசி வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி

**(லோரன்ஸ் செல்வநாயகம்)**

நாட்டிலிருந்து முதற் தடவையாக கருவாடு மற்றும் மாசி என்பன ஏற்றுமதி செய்யப்படவுள்ளன. இதற்கான ஏற்பாடுகளை ஆரம்பித்துள்ளதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது. இதற்கிணங்க, அவுஸ்திரேலியா மற்றும் கொரியா ஆகிய நாடுகளுக்கு முதல் தடவையாக 10.000 கிலோ கருவாடு மற்றும் மாசி உள்ளடங்கிய கொள்கலன்களை ஏற்றுமதி செய்துள்ளதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த கருவாட்டு உற்பத்தி நடவடிக்கைகள் புதிய தொழில்நுட்பத்தை உபயோகித்து மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அமைச்சு தெரிவித்துள்ளது.

ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் தங்காலை பகஜ்ஜாவ பிரதேசத்தில் உள்ள மெகாஷிப் கருவாடு மற்றும் மாசி உற்பத்தி நிறுவனம் மூலம் கருவாடு மற்றும் மாசிகள் உற்பத்தி செய்யப்பட்டன. இவை, கண்டெய்னர் மூலம் அவுஸ்திரேலியாவுக்கும் கொரியாவுக்கும் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன.

## அரச நிறுவனங்களின் செலவுகளை கட்டுப்படுத்த சுற்றுநிருபம்

**(லோரன்ஸ் செல்வநாயகம்)**

நாட்டின் பொருளாதார நிலைமையை கவனத்திற்கொண்டு அரச நிறுவனங்களின் செலவுகளை மேலும் கட்டுப்படுத்துவது தொடர்பில் திறைசேரியின் செயலாளர் மகிந்த சிறிவர்தன அரச பிரதானிகளுக்கு சுற்றுநிருபம் மூலம் மீண்டும் அறிவுறுத்தியுள்ளார்.

மேலதிக, விடுமுறை தினங்களுக்கான கொடுப்பனவு மற்றும் வேறு கொடுப்பனவுகள், பயண செலவுகள் ஆகியவற்றுக்காக ஒதுக்கப்பட்டுள்ள நிதியை மட்டுப்படுத்தலுடன் மேற்கொள்ளுமாறு அவர் தெரிவித்துள்ளார்.

மின்சாரம், நீர், தொலைபேசி சேவை, எரிபொருள் மற்றும் உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ள சேவைகளுக்கான செலவுகளை கட்டுப்படுத்தும் முறைமையொன்றை பின்பற்றவேண்டியதன் அவசியத்தையும், அத்துடன், காகிதாதிகள் அலுவலக பொருட்கள் மற்றும் தேவையான

04

# பொலிஸ் உப குழுக்களை ஒன்றிணைத்து கலந்துரையாடல்


**அட்டாளைச்சேனை தினகரன் நிருபர்**

அம்பாறை மாவட்டத்தில் உள்ள பொலிஸ் உபதேசக் குழுக்களை ஒன்றிணைத்து விஷேட கலந்துரையாடல் நடத்தப்பட்டது.

கெப்சோ அமைப்பு அம்பாரையில் ஏற்பாடு செய்திருந்த இந்நிகழ்வுக்கு ,அம்பாறை மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜே.எச்.எம்.என். ஜயபத்ம தலைமை தாங்கினார்.கெப்சோ நிறுவன திட்டப் பணிப்பாளரும், உபதேசக் குழுவின் தவிசாளருமான ஏ.ஜே.காமில் இம்டாட், பொலிஸ் உயரதிகாரிகள், அம்பாறை மாவட்டத்தில் செயற்பட்டு வரும் பொலிஸ் உபதேசக் குழுக்களின் பிரதிநிதிகள், சமூகப் பொலிஸ் சேவைப் பிரிவின் பொறுப்பதிகாரிகள், பொலிஸ் உத்தியோகத்தகர்கள் எனப் பலர் இதில் கலந்து கொண்டனர்.அம்பாறை மாவட்டத்தில் மேற்கொள்ளப்படவுள்ள திட்ட முன்மொழி வுகள் இங்கு முன்வைக்கப்பட்டதுடன், பொலிஸாரும் பொது மக்களும் இணைந்து மேற்கொள்ள வேண்டிய விடயங்கள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டன.

அம்பாறை மாவட்டத்தில் உள்ள 23 பொலிஸ் நிலையங்களின் கீழ், செயற்படும் உபதேசக் குழுக்கள் மற்றும் பொலிஸார் இணைந்து பிரதேச ரீதியான பிரச்சினைகள் மற்றும் தேவைகள் என்பவற்றை தீர்ப்பது பற்றியும் கலந்துரையாடப்பட்டது.

## கிழக்கின் குரல்



கல்முனை பிராந்தியத்தில் நேற்று தைப்பொங்கல் கொண்டாட்டங்கள் சிறப்புடன் இடம் பெற்றன. பொங்கல் பொங்கி மகிழ்ந்து வழிபாடுகளில் ஈடுபடுவேரை படத்தில் காணலாம்.
(பெரியநீலாவணை விசேட நிருபர்)

## தோப்பூரில் டெங்கு நுளம்பு பரிசோதனை

**தோப்பூர் குறூப் நிருபர்**

மூதூர் பொது சுகாதார பிரிவுக்குட்பட்ட தோப்பூர் பிரதேசத்தில் டெங்கு நுளம்பு பரிசோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

சுகாதார வைத்தியதிகாரி ஹில்மி முகைதீன் பாவாவின் ஆலோசனைக்கமைய பொது சுகாதார பரிசோதகர் ஐ.எம்.றினூஸ் தலைமையில் டெங்கு நுளம்பு பரிசோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. இதன்போது வீட்டின் உட்புறம் மற்றும் சுற்றுப்புறங்களில் டெங்கு நுளம்பு பெருகும் இடங்கள் அடையாளம் காணப்பட்டு வீட்டு உரிமையாளர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டது. அநேக வீடுகளின் வீட்டின் உட்பகுதியில் அதிகமான நுளம்பு குடம்பிகள் அவதானிக்கப்பட்டதையடுத்து வீட்டு உரிமையாளர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் மூதூர் பொது சுகாதார வைத்தியதிகாரி அலுவலக உத்தியோகத்தர்கள் மற்றும் பொலிஸாரும் இணைந்து பரிசோதனையில் ஈடுபட்டனர்.

அறிவுரைகளை தவறும் பட்சத்தில் உரிமையாளர்களுக்கு எதிராக கடும் சட்டநடவடிக்கை எடுக்கப்படும் என பொதுமக்களுக்கு சுகாதார வைத்தியதிகாரி எச்சரிக்கை விடுத்துள்ளார்.

# குடிநீரை சிக்கனமாக பாவிக்குமாறு பிராந்திய முகாமையாளர் அறிவுறுத்தல்

**அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்**



கொண்டுவட்டுவான் நீர் சுத்திகரிப்பு நிலையத்தின் பிரதான நீர் விநியோக குழாய் ஊடாக, உயர் அழுத்தத்தில் நீரை விநியோகிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதனால், நீரை குறைந்த அளவில் பாவிக்குமாறு அம்பாரை பிராந்திய பாவனையாளர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

அம்பாறை மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக பெய்த தொடர் மழையால், அப்பிரதேசத்தில் வெள்ள நீர் அதிகளவில் வடிந்தோடுவதாலேயே, இந்நிலைமை ஏற்பட்டுள்ளதாகவும் அக்கரைப்பற்று பிராந்திய முகாமயாளர் அறிவுறுத்தியுள்ளார்.

நிந்தவூர், காரைதீவு மற்றும் சாய்ந்தமருது போன்ற பிரதேசங்களுக்கு நீரை விநியோகிக்கும் கொண்டவட்டுவான் பிரதான குழாய், மல்லிகைத்தீவு, கொல்லவெளிச் சந்தி, இ.சி.ஜி பாலத்தடி போன்ற முக்கிய இடங்களில் மூழ்கிக் காணப்படுகிறது. இந்நிலையில், இப்பிரதேசங்களுக்கு உயர் அழுத்தத்தில் நீரை விநியோகித்தால்,பிரதான குழாய் வெடிக்கும் ஆபத்து ஏற்படும் என்றும் பிராந்திய முகாமையாளர் அறிவுறுத்தியுள்ளார்.

நீர்ப்பாவனையாளர்கள் முன்கூட்டியே தேவையான நீரை சேமித்து விரயமின்றி பாவிக்குமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

# அம்பாறை மாவட்டத்தில் தொற்று நோய் பரவும் அபாயம்

**ஒலுவில் விசேட நிருபர்**

அம்பாறை மாவட்டத்தில் வெள்ளம் காரணமாக கல்முனைப் பிராந்தியத்தில் தொற்று நோய் பரவக் கூடிய அபாயம் ஏற்பட்டுள்ளதால் பொது மக்கள் அவதானமாக செயற்படுமாறு, கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி டொக்டர் திருமதி சக்கீலா இஸ்ஸதீன் தெரிவித்தார்.

தொடர்ச்சியாக பெய்த மழையினாலும், சேனநாயக்க சமுத்திர நீர்த்தேக்கத்தின் வான் கதவுகள் திறக்கப்பட்டதையடுத்தும், கரையோரப் பிரதேசங்களில் பாரிய வெள்ள அபாயம் தோன்றியுள்ளது. இதனால் பாதிக்கப்பட்ட மக்கள் இடம்பெயர்ந்து இடைத்தங்கல் முகாம்களிலும், உறவினர்களின் வீடுகளிலும் தங்கியுள்ளனர். தங்கியுள்ளவர்கள் சுகாதார பழக்கவழக்கங்களை கடைப்பிடிக்குமாறு கேட்டுள்ளார்.

வெள்ள நீர் சுகாதாரமற்று காணப்படுவதால் இந்நீரில் நடமாடுவதை தவிர்க்குமாறும், இதனால் பாரிய தொற்று நோய் ஏற்படுமெனவும் தெரிவித்தார்.


சிறுவர்களுக்கு இந்நீர் மூலம் வயிற்றோட்டம் மற்றும் தோல் நோய் என்பன ஏற்படக் கூடிய சூழ்நிலை ஏற்படக் கூடும், சகலரும் கொதித்தாறிய நீரை பருக வேண்டுமெனவும் அறிவித்துள்ளார்.

பெற்றோர்கள் நீர் நிலைகளில் பிள்ளைகளை நீராடச் செல்ல விடாது தடுக்க வேண்டும். வெள்ளப்பெருக்கினால் உயிர் ஆபத்து ஏற்படக் கூடிய வாய்ப்புகளும் அதிகமாக காணப்படுவதால் அவதானமாக இருக்க வேண்டும்.

இடைத்தங்கல் முகாம்களில் மற்றும் உறவினர்களின் வீடுகளில் தங்கியுள்ளவர்களுக்கு சுகாதார வைத்தியதிகாரிகளினால் ஆலோசனைகளும், வழிகாட்டல்களும் வழங்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.




அக்கரைப்பற்றில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உலருணவுகள் வழங்கப்பட்டதுடன், நீர் வடிந்தோடத் தடையாக பட்டியடிப் பிட்டி பாலத்தில் குவிந்துள்ள சல்வீனியா தாவரங்களை அகற்றும் பணிகளும் இடம்பெற்றன. பாலம் துப்புரவு செய்யப்படுவதையும், நிவாரணம் பெறும் பயனாளியையும் படங்களில் காணலாம்.
(படம்: அட்டாளைச்சேனை குறூப் நிருபர்)



கண்டி ஸ்ரீ செல்வவிநாயகர் கோயிலில் தைப்பொங்கல் விசேட சமய வழிபாடு கோயில் பிரதான அறங்காவலர் கோவிந்தசாமி கிருஸ்ணமூர்த்தி தலைமையில் நேற்று நடைபெற்றது. இந்நிகழ்வில் பொங்கல் வழிபாடுகள், உள்ளூர் ஊர்வலம், வசந்த மண்டப பூஜைகள் என்பன நடைபெற்றன. அடியார்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.
(படங்கள் : மாவத்தகம தினகரன் நிருபர்)



தைப்பொங்கல் விஷேட தின பூஜை (15) திகதி உடப்பு செல்வபுரம் நாகதம்பிரான் ஆலயத்தில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. காலையில் மூலமூர்த்திக்கு அபிஷேகம் இடம்பெற்று, சூரியபகவானுக்கு பொங்கல் படைக்கப்பட்டு பூஜை இடம்பெற்றது.
*(உடப்பு குறூப் நிருபர்)*

# 'நாட்டின் முன்னேற்றம், சுபீட்சம் ஆகியவற்றுக்கு அர்ப்பணிப்போம்'



நாட்டின் பொருளாதாரத்தின் முதுகெலும்பாக விளங்கும் நெற்செய்கையில் ஈடுபடும் உழவர்களின் திருநாளாம் தைப்பொங்கலை கொண்டாடும், அனைவருக்கும் வாழ்த்துக்களை தெரிவிப்பதில் மகிழ்வடைகிறேன்.

வடமாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் இவ்வாறு தைத்திருநாள் வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

நெற்செய்கையில் ஈடுபடும் மக்கள் தமக்கு உதவிய இயற்கை தெய்வமாகிய சூரியனுக்கும், கால்நடைகளுக்கும் நன்றி செலுத்தும் முகமாக பொங்கல் பொங்கி வழிபாடுகளை மேற்கொள்வது மரபு. அந்தவகையில், எமது நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்த நெற்செய்கை பாரிய பங்காற்றுகிறது. இயற்கை அனர்த்தங்களாலும், ஏனைய சில செயற்பாடுகளாலும் நெற்செய்கையில் ஈடுபடுவோர் பாரிய சவால்களை எதிர்நோக்குகின்றமை கவலைக்குரியதே.

எனினும், நாட்டு மக்களின் பசியை போக்க தாம் எதிர்நோக்கும் சவால்களை முறியடித்து உரிய விளைச்சலை பெற்று விவசாய துறைக்கு பாரிய உதவி புரியும் அனைவரையும் கௌரவித்து வாழ்த்துவதற்கான நாளாக இன்றைய தைப்பொங்கல் தினம் அமைந்துள்ளது.

மரபுசார்ந்த வழிபாடுகளுடன், இன நல்லிணக்கம், மத ஒற்றுமையை வலுப்படுத்தும் வகையில் இன்றைய நாளில் முன்னெடுக்கப்படும் ஏனைய கலை, கலாசார, விளையாட்டு நிகழ்வுகளும் வரவேற்கப்படக்கூடியவை. அந்தவகையில் நாட்டின் முன்னேற்றம், சுபீட்சம் ஆகியவற்றிற்காக தம்மை அர்பணிக்கும் அனைவருக்கும் மீண்டும் தைத்திருநாள் வாழ்த்துக்களை தெரிவிப்பதில் அகமகிழ்வடைகின்றேன்.



வவுனியா பொலிஸ் நிலைய சமுதாயப் பொலிஸ் குழுவின் ஏற்பாட்டில் சிவில் பாதுகாப்பு குழுவினரின் பங்களிப்புடன் வவுனியாவில் சிறப்பான முறையில் புதுப் பானையில் புத்தரிசிப் பொங்கல் வைக்கப்பட்டது. இப் பொங்கல் நிகழ்வில் வவுனியா நகர் பிரதேசங்களைச் சேர்ந்த சமுதாய பொலிஸ் பிரிவின் உறுப்பினர்கள், வர்த்தகர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.
*(வவுனியா விசேட நிருபர்)*

## வெளிநாடுகளில் பணியாற்றும்...

கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு கருத்துத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், தம்மைப் பதிவுசெய்து வெளிநாடுகளுக்கு செல்லும் இலங்கையர்களுக்கு காப்புறுதி பாதுகாப்பு கிடைப்பதுடன், பெரும்பாலான பிரதிபலன்களும் உரித்தாகுகின்றன.

சில தரப்பினர் நாட்டில் நடைமுறையிலுள்ள சட்டத்திட்டங்களுக்கு கட்டுப்படாது தவறான முறைமையின் மூலம் வெளிநாடுகளுக்கு செல்கின்றனர். இதனால், அவர்களுக்கு பாதுகாப்பை வழங்குவதில் அமைச்சு பல்வேறு சிக்கல்களை எதிர்நோக்க நேர்கிறது.

எவ்வாறாயினும் இலங்கையர்கள் வெளிநாட்டு வேலைவாய்ப்பிற்குச் சென்று அங்கு பாதிப்புகளுக்கு முகங்கொடுக்க நேரிட்டால், அவர்கள் தொடர்பில் உரிய நடவடிக்கைகளை எடுப்பதற்கு அமைச்சு கவனம் செலுத்தும்.

மூன்று மில்லியன் மக்கள் வெளிநாட்டு வேலைவாய்ப்புகளில் ஈடுபட்டுள்ள நிலையில், அவர்கள் எதிர்நோக்க நேரும் பாதிப்புகள் சம்பந்தமாக ஆயிரத்திற்கும் குறைவான முறைப்பாடுகளே கிடைத்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## குற்றச் செயல்களில் ஈடுபட்டு...

கைது செய்யப்படாத சந்தேக நபர்கள் 4258 பேரில், 123 பேரை கைது செய்துள்ளதாகவும் அந்த தலைமையகம் தெரிவித்துள்ளது.

கடந்த 2022 மற்றும் 2023 ஆம் வருடங்களில் குற்றச்சாட்டின் பேரில் இனம் காணப்பட்டு இதுவரை கைது செய்யப்படாத 2485 சந்தேக நபர்களில், 149 பேர் தற்போது கைது செய்யப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## நாட்டை முன்னோக்கி நகர்த்த...

மிகவும் இக்கட்டான காலத்தில் நாட்டை பொறுப்பெடுத்தார்.இப்போது, திறன்பட நாட்டை முன்னோக்கி நகர்த்தும் வேலைத்திட்டங்களில் தொடர்ச்சியாக அவர் ஈடுபட்டுள்ளார்.

நாட்டில் சுமுகமான நிலை நிலைத்து, இனங்களிடையே நல்லிணக்கம் மற்றும் மதங்களுக்கிடையே புரிந்துணர்வு ஏற்படுமிடத்து வளமான நாட்டை உருவாக்கலாம் என்றார்.

யாழ்ப்பாணம் நாக விகாரையில் தேசிய நல்லிணக்க சபையின் அங்கத்தவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் அமைச்சரின் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மும்மத தலைவர்களுக்கும் நியமன கடிதங்கள் வழங்கப்பட்டன.

## மாகாண சபைகளை ஒழிப்பதற்கான...

அதேவேளை, பொதுமக்களுக்கு சேவைகளை பெற்றுக் கொடுக்கும் வகையில் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு அதிகாரங்களை வழங்க வேண்டும் என்றும் அவர் யோசனைகளை முன்வைத்துள்ளார்.

கடந்த தேர்தலின் போதும், தாம் இந்த யோசனைகளை முன் வைத்ததாகவும் தெரிவித்துள்ள அவர், 22 மில்லியன் என்ற குறைந்தளவு சனத்தொகையுள்ள நாட்டில், மாகாண சபை முறைமை அவசியமற்றது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இந்நடவடிக்கையானது நாட்டின் நிர்வாக முறைமை மற்றும் பொருளாதார மறுசீரமைப்பை நவீனமயப்படுத்தல் உள்ளிட்ட நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக அமைய வேண்டும்என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

1987 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட அரசியலமைப்பின் 13 வது திருத்தத்தின் நோக்கத்திற்கிணங்க, நாட்டில் இனங்களுக்கிடையிலான பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கு உறுதுணையாக அது அமையும். எனினும், தற்போது நிலவும் மாகாண சபை முறைமை அதிக செலவுகளுடன் சமூக பிளவுகளுக்கு காரணமாகின்றமை உறுதியாக வெளிப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## க.பொ.த வினாத்தாள்...

26 வரை,இவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

அம்பாறையிலுள்ள அரசாங்க பாடசாலையின் உயர்தர விவசாய விஞ்ஞான ஆசிரியரே கைதானவராவார்.

52 வயதுடைய இந்த ஆசிரியர் உயர்தர மாணவர்களுக்கான பிரத்தியேக வகுப்புகளையும் நடத்தி வந்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

2023 க.பொ.த உயர்தரப் பரீட்சையின் விவசாய விஞ்ஞான பாட II ஆவது வினாத்தாள், தனது வீட்டில் வைத்து அவரது சொந்தக் கையெழுத்தில் எழுதப்பட்டுள்ளதாக பொலிஸார் கண்டுபிடித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட ஆசிரியர் விவசாய வினாத்தாள் கேள்விகளை,ஜனவரி 10 இல், வெளியிட்டுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

## பொருளாதார கொள்கையில்...

வட மாகாண ஆளுநர் செயலகத்தில்,நேற்று இச்சந்திப்பு இடம்பெற்றது. இதில் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் பிரதிநிதிகள் குழு, வர்த்தகப் பிரதிநிதிகள், சிறு கைத்தொழில் முயற்சியாளர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

இந்த சந்திப்பில் வட மாகாணத்தின் பொருளாதாரம் மற்றும் அபிவிருத்தி குறித்து மாகாண ஆளுநர் தெளிவுபடுத்தினார்.

நாட்டில் ஊழல் ஒழிப்பு சட்டத்தை கடுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும் எனவும், நல்லிணக்க செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும் எனவும் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் பிரதிநிதிகள் ஆலோசனைகளை முன்வைத்தனர்.

புதிய வரிக்கொள்கை பாரிய சுமையாக அமைந்துள்ளதென வர்த்தகப் பிரதிநிதிகளும், சிறு கைத்தொழில் முயற்சியாளர்களின் பிரதிநிதிகளும் இதன்போது குறிப்பிட்டனர்.

வரி அதிகரிப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளதால் மக்கள் சிக்கல்களை எதிர்நோக்கியுள்ளதை, தாம் அறிந்துள்ளதாக சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கைக்கான தூதுக்குழு பிரதான பீட்டர் ப்ரூவர் தெரிவித்துள்ளார்.

கடந்தகால பொருளாதாரக் கொள்கைகள் காரணமாகவே நாடு தற்போதைய நிலையை அடைந்துள்ளதாகவும், நிலைமையை மாற்றியமைக்க குறிப்பிட்ட காலப்பகுதிக்கு இறுக்கமான கொள்கைகளை பின்பற்றுவது அவசியம் எனவும் குறிப்பிட்ட அவர், கடந்த காலங்களில் இலங்கை பல சிறந்த முன்னேற்றங்களை அடைந்துள்ளதாகவும் தெரிவித்தார்.

## கொழும்பு துறைமுகத்தில்...

இக்குழுவினர் கொழும்பு உள்ளிட்ட பல பகுதிகளுக்கு விஜயம் செய்யவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இக்கப்பல் நாளைய தினம், ஹம்பாந்தோட்டை துறைமுகத்துக்கும் அதன்பின்னர் தாய்லாந்தின் புக்கெட் துறைமுகத்துக்கும் செல்லவுள்ளது.

# இன்றைய பலன்கள்

**( 09. 01. 2024 )**

கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா
(ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)





**மேஷம்:**
தொட்ட காரியங்கள் அனைத்திலும் வெற்றி கிடைக்கும். பொருளாதார நிலை உச்சம் பெறும்.

**ரிஷபம்:**
உத்தியோகத்தில் கூடுதல் பொறுப்புகளும் வருமான அதிகரிப்பும் உண்டு. முத்தான தொழில்கள் வாய்க்கும்.

**மிதுனம்:**
தொழில் நன்றாக இருக்கும். தேங்கிய பணிகள் இனிமேல் துரிதமாக நடைபெறும்.

**கடகம்:**
குடும்ப பெரியவர்களையும் அனுபவஸ்தர்களையும் கலந்து ஆலோசித்து முடிவெடுப்பதன் மூலம் செயல்பாடுகளில் வெற்றி கிடைக்கும்.

**சிம்மம்:**
ஆரோக்கியத்தில் மட்டும் அக்கறை செலுத்துவது நல்லது. "குரு பார்க்க கோடி நன்மை" நினைத்த காரியங்கள் நிறைவேறும்.

**கன்னி:**
சிறு சிறு ஆரோக்கிய தொல்லைகள் வந்து அலைமோதும். பங்குதாரர்களின் விரோதத்தால் இதுவரை மூடிகிடந்த தொழில் இப்போது திறக்கப்படும்.

**துலாம்:**
புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். இல்லத்தில் சுபகாரியங்கள் படிப்படியாக பெற்று மகிழ்ச்சியை வழங்கும்.

**விருச்சிகம்:**
புது முயற்சிகளில் வெற்றி உண்டு. ஆரோக்கியத்தில் கவனம் செலுத்துவது நல்லது.

**தனுசு:**
பொன் பொருள் வாங்கும் யோகம் உண்டு. எடுத்த முயற்சிகளில் வெற்றியும் சுபகாரியங்களும் படிப்படியாக நடைபெற போகிறது .

**மகரம்:**
தொழில் வியாபாரத்தில் இருந்த குறுக்கீடு சக்திகள் அகலும். குடும்பத்தில் உள்ளவர்களின் தேவைகளை பூர்த்தி செய்ய முன் வருவீர்கள்.

**கும்பம்:**
ஏற்ற இறக்க நிலை உருவாகலாம். சந்தோஷ வாய்ப்புகளை தக்க வைத்துக்கொள்ள இயலும்.

**மீனம்:**
விரயங்கள் வரத்தான் செய்யும் என்றாலும் அதை சமாளிக்கும் ஆற்றல் உங்களுக்கு உண்டு .மொத்தத்தில் வரவு செலவு சமமாகும்.

## அரச நிறுவனங்களின்... (03 ஆம் பக்க தொடர்ச்சி)

பொருட்களை கொள்வனவு செய்யும்போது, மிகுந்த மட்டுப்படுத்தலுடன் முன்னெடுக்குமாறும் அந்தச் சுற்றுநிருபத்தின் மூலம் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

உத்தியோகபூர்வ வாகனங்கள் உள்ள அதிகாரிகள் வாகனங்களை பயன்படுத்தும் போது, கையிருப்பிலுள்ள வாகனங்கள் தொடர்பில் முகாமைத்துவம் செய்வது அவசியமென்றும் அதேவேளை, பயிற்சி செயலமர்வுகளை நடத்தும் போது, ஹோட்டல் மாநாட்டு மண்டபங்களை பயன்படுத்தாது நிறுவனங்களில் காணப்படும் மண்டபங்களை அதற்காக உபயோகிக்குமாறும் அதன்மூலம் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

## 2 வாரங்களில் 5000...

வட மாகாணத்தில்,1190 பேர் நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் ஒருவார கால டெங்கு கட்டுப்பாட்டு வேலைத்திட்டத்தின் முன்னேற்றம் தொடர்பான அறிக்கை இன்று (16) வெளியிடப்படலாமென தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு தெரிவித்துள்ளது.

## அரச கடன் முகாமைத்துவ பொறுப்பு...

தேசிய மற்றும் சர்வதேச கடன் முகாமைத்துவம் அல்லது அரச கடன் சேவைகளை சிறந்த வகையில் முன்னெடுத்துச் செல்வதற்காக, நிதியமைச்சின் கீழ் சுயாதீன நிறுவனமொன்றை நிறுவுவதற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள இந்நடவடிக்கை காலத்தின் தேவையாகும். இதனூடாக மிகவும் சாத்தியமான பெறுபேறுகள் நாட்டிற்கும் அரச நிதி நிர்வாகத்தினருக்கும் பொதுவாக பொதுமக்களுக்கும் உரித்தாகும் புதிய வேலைத் திட்டம் இதுவாகுமென்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## பாடப்புத்தகங்கள்சீருடைகள்...

பாடசாலை மாணவர்களுக்கான பாடப்புத்தக ங்களில் எண்பது வீதமானவை ஏற்கனவே அச்சிடப்பட்டுள்ளன.

இவற்றில் பெரும் பகுதி விநியோகிக்கப்பட்டுமுள்ளது.

மேலும், சீன அரசாங்கத்தின் உதவியால் வழங்கப்பட்ட பாடசாலை சீருடைகளும் கிடைத்துள்ளது. இதையும் இயன்றளவில் விரைவாக விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் பெப்ரவரி 19 க்கு முன்னர் இந்நடவடிக்கைகள் பூரணமடையும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

## தேசிய வேட்பாளராக ஜனாதிபதி...

இது தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்தன தெரிவிக்கையில், ஹம்பாந்தோட்டை, இரத்தினபுரி மற்றும் களுத்துறை மாவட்டங்களில் ஐ.தே. கட்சி மாநாடுகள் நடைபெற்றன. இம்மாநாடுகளில், இது தொடர்பில் முன்வைத்த யோசனைகளை முன்வைத்தோம். இதற்கு ஏகமனதான இணக்கப்பாடு காணப்பட்டு, யோசனையும் நிறைவேற்றப்பட்டது எனத் தெரிவித்துள்ளார்.

மூன்று மாவட்டங்களிலும் நடந்த மாநாடுகளில் கலந்துகொண்ட கட்சியின் தலைவர்கள் மற்றும் ஆதரவாளர்கள் தமது இரண்டு கைகளையும் உயர்த்தி ஏகமனதான விருப்பத்தை வெளிப்படுத்தியதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கு முன்னர் காலி மாவட்டத்தில் நடைபெற்ற கட்சியின் மாநாட்டில், மேற்படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

## பொதுஜன பெரமுன...

ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். நிகழ்வொன்றின் பின்னர் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கும் போதே, முன்னாள் ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கேள்வியொன்றுக்குப் பதிலளித்த அவர், பொதுஜனபெரமுனவின் சார்பில் வேட்பாளரொருவர் களமிறங்காமல் இருப்பதற்கும் இடமுண்டு எனத் தெரிவித்துள்ளார்.

ரணில் விக்கிரமசிங்க பொதுவேட்பாளராக களமிறங்கப் போவதாக தெரிவிக்கப்படுகிறதே என எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளித்துள்ள அவர், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளரல்லவா? எனக் குறிப்பிட்டுள்ளார்.

அவ்வாறென்றால் பொதுஜன பெரமுன கட்சி யாரை களமிறக்கும் என கேட்கப்பட்டது. இதற்குப்பதிலளித்த அவர், இதுதொடர்பில் இறுதித் தீர்மானம் மேற்கொள்ளவில்லை. சிலவேளை எமது கட்சியில் ஒருவர் வேட்பாளராக களமிறங்கவும் முடியும். அவ்வாறில்லாமலிருக்கவும் முடியும் என்றும் பதிலளித்துள்ளார்.

# அளவில்லா அன்பின் வெளிப்பாடு
# ஆண்டவரின் திருமுழுக்குப் பெருவிழா



ஜனவரி 8ஆம் திகதி நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் திருமுழுக்கு பெருவிழாவை நாம் கொண்டாடினோம்.

சூழ்நிலை எவ்வளவுதான் கொடூரமாக இருந்தாலும் இரு காரணிகள் மனிதர்களை வாழவைக்கும் சக்தி கொண்டவை. ஒன்று, தன்மீது அன்புகூரும் மனிதர்கள் உள்ளனர் என்ற உள்ளுணர்வு.

இரண்டு, ஒன்றை செய்து முடிக்க வேண்டும் என்ற குறிக்கோள். இவை இரண்டும், பல்லாயிரம் உன்னத மனிதரை வாழ வைத்துள்ளன; அவர்கள் வழியே, இவ்வுலகையும் வாழ வைத்துள்ளன.

அன்புகூரும் மனிதர்கள் உள்ளனர் என்ற உள்ளுணர்வைப்பற்றி பேசும்போது, கருவில் தோன்றியது முதல், நம் ஒவ்வொருவரையும் தொடரும் அன்பு, பெற்றோரின் அன்பு என்பது முதலில் நம் நினைவில் பதிகிறது.

புறக்கண்கொண்டு மனிதர்களால் பார்க்கமுடியாத விண்ணகத் தந்தை, தன் மகன் இயேசுவின் கனவுகளைத் துவக்கிவைத்த ஒரு நிகழ்வை கடந்த ஞாயிறு நற்செய்தி நமக்குத் தருகிறது. இயேசு திருமுழுக்கு பெற்றதும், தந்தையாம் இறைவன், அவரை உச்சி முகந்து கூறும் உன்னத வார்த்தைகளை, அன்றைய நற்செய்தியில் பார்க்கின்றோம். "என் அன்பார்ந்த மகன் நீயே, உன் பொருட்டு நான் பூரிப்படைகிறேன்" (லூக்கா 3: 22)

தந்தையாம் இறைவனின் அன்பு தனக்கு உள்ளது என்ற உறுதியாலும், இவ்வுலகில் தான் ஆற்றவேண்டிய பணிகள் உள்ளன என்ற தாகத்தாலும் தூண்டப்பட்டு, இயேசு தன் பணி வாழ்வைத் துவங்கும் நிகழ்வே, அவரது திருமுழுக்கு நிகழ்வு. தன் வாழ்வையும், பணியையும் குறித்து உறுதியானதொரு முடிவெடுத்த இயேசு, தன் முதல் அடியை எடுத்துவைத்தார்.

அவர் எடுத்துவைத்த முதல் அடியை, தண்ணீரில், அதுவும் ஓடுகின்ற ஆற்று நீரில் எடுத்துவைத்தார். இது நம் சிந்தனைகளைத் தூண்டும் அழகான ஓர் அடையாளம்.

ஓடும் நீரில் நிற்கும்போது, நம் பாதங்களுக்கடியிலிருந்து பூமி நழுவிச் செல்வதைப் போன்ற உணர்வு எழும். இயேசு தன் பணியைத் துவக்கிய வேளையில், இஸ்ரயேல் சமுதாயம் பல வழிகளில் நிலையற்ற, நிலை குலைந்த ஒரு சமுதாயமாக இருந்தது என்பதை, யோர்தானில் ஓடிய அந்த நீர் உருவகப்படுத்தியதோ என்று எண்ணத் தோன்றுகிறது.

இனி தொடரும் தன் பணிவாழ்வில், தந்தையாம் இறைவனின் அன்பைத் தவிர வேறு எதுவும் இயேசுவுக்கு உறுதியளிக்காது என்பதை உணர்த்த, அவர், தன் பணிவாழ்வின் முதல் அடியை ஓடும் நீரில் எடுத்து வைத்தாரோ?

ஓடும் நீரில் மற்றோர் அழகும் உண்டு... தேங்கி நிற்கும் நீரை விட, ஓடும் நீரில், உயிர்கள் வாழவும், வளரவும் வாய்ப்பு அதிகம் உண்டு. இயேசுவும் ஓடும் நீரைப் போல் பலருக்கு வாழ்வளிக்க விரும்பியதால், ஓடும் ஆற்று நீரைத் தன் பணிவாழ்வின் முதல் அடையாளமாகத் தேர்ந்தெடுத்தாரோ?.

இயேசு, தன் திருமுழுக்கை, யோர்தான் நதியில் தனியே பெறவில்லை. மக்களோடு, மக்களாய் கலந்து, கரைந்து நின்றார். இயேசுவின் இந்தப் பணிவு, மக்களோடு மக்களாய் கரைந்துவிட அவர் கொண்ட ஆர்வம் விண்ணகத் தந்தையை மிகவும் மகிழ்வித்தன. தன் மகனோ, மகளோ அர்த்தமுள்ள, பெருமை சேர்க்கும் செயல்களைச் செய்யும்போது, அவர்களை அரவணைத்து, நெற்றியில் முத்தமிட்டு, ஆசீர்வதிக்கும், பெற்றோரைப் பார்த்திருக்கிறோம். நாமும் இந்த அரவணைப்பையும், ஆசீரையும் அனுபவித்திருப்போம்.

அதுதான் அன்று யோர்தானில் நடந்தது. மக்களோடு மக்களாகத் தன்னை முழுவதும் இணைத்துக் கொண்ட இயேசுவைக் கண்டு ஆனந்த கண்ணீர் பொங்க தந்தையாம் இறைவன் சொன்ன வார்த்தைகள்: "என் அன்பார்ந்த மகன் நீயே, உன் பொருட்டு நான் பூரிப்படைகிறேன்."

உள்ளப் பூரிப்புடன், உன்னத இறைவன் இந்த வார்த்தைகளை நம் ஒவ்வொருவருக்கும் சொல்லக் காத்திருக்கிறார். அன்னையும் தந்தையுமான இறைவன், நம்மை வாரி அணைத்து, உச்சி முகந்து, இந்த அன்பு மொழிகளை நம் ஒவ்வொருவருக்கும் சொல்லட்டும். குறிப்பாக இந்த சிறப்பு ஆண்டில், இரக்கமே உருவான இறைவன், காயப்பட்டிருக்கும் ஒவ்வொரு மனிதரையும், காயப்படுத்தும் ஒவ்வொரு மனிதரையும் அரவணைத்து, தன் இரக்கத்தால் அவர்களை நலமாக்க வேண்டுமென மன்றாடுவோம்.

இக்காலத்தில் பொங்கல் திருவிழாவையும் உழவர் திருவிழாவையும் கொண்டாடுறோம். மழையாலும் வெள்ளத்தாலும் பயிர்களை இழந்து தவிக்கும் பல்லாயிரம் உழவர்களுக்கு இறைவன் நல்வழி காட்டவேண்டுமென்று செபிப்போம்.

இயற்கை நம்மிடமிருந்து பறித்துக் கொண்ட விளைச்சலை ஈடுசெய்ய நம் உள்ளங்களில் அன்பு, உதவி, உறவு என்ற பயிர்களை இறைவன் வளர்த்து, இந்த அறுவடைத் திருநாளை அர்த்தமுள்ளதாக மாற்ற உருக்கமாக செபிப்போம்.

நாம் அனைவருமே இறைவனின் அன்புக்குரிய குழந்தைகள் என்பதை இப்புதிய ஆண்டில் மீண்டும் ஒருமுறை உணர்வதற்கு, கடந்த ஞாயிறு வழிபாட்டின் வழியாக இறைவன் நம் அனைவருக்குமே நல்லொளியைத் தந்துள்ள என்பதை உறுதிப்படுத்திக் கொள்வோம். எல்லா சந்தர்ப்பங்களிலும் ஒருவர் ஒருவருக்காக ஜெபிப்போம். வேண்டுதல் செய்வோம்.

**அருட் சகோதரி அருள்சீலி**

# அண்டி வந்தோரின் அடைக்கலம் மறைசாட்சி புனித செபஸ்தியார்

## ஜனவரி 20ல் புனிதரின் திருவிழா



கத்தோலிக்கத் திருச்சபையானது ஜனவரி 20ந் திகதியன்று மறைசாட்சியானபுனித செபஸ்தியாருக்கு விழா எடுத்து மகிழ்கிறது.

மக்கள் பேரபிமானத்தைப் பெற்ற புனிதர்களில் புனித செபஸ்தியாரும் ஒருவர் புனித செபஸ்தியார் வேத கலாபனைகளில் கிறிஸ்துவுக்காக இரத்தம் சிந்தி தன் உயிரை தியாகம் செய்தவர்.

இவர் பிரான்ஸ் நாட்டில் நர்போ நகரில் கி. பி. 257ம் ஆண்டு பிறந்து இத்தாலியிலுள்ள மிலான் நகரில் வளர்ந்த அழகான இளைஞனாவார்.

உரோமை ஆட்சி புரிந்த மன்னனின் ஆட்சியில் கிறிஸ்தவர்கள் அவனுக்கு அஞ்சி மறைவாகவே வாழ்ந்து வந்தனர். மன்னனுக்கு பயந்து பூமிக்கு அடியில் சுரங்கங்கள் அமைத்து இறைவனை வழிபட்டனர்.

இதை அறிந்த செபஸ்தியார் அவர்களுக்கு தேவையான உதவிகள் புரிந்து அவர்களுக்கு ஆதரவு வழங்கினார். மன்னன் ஆட்சியில் ஒடுக்கப்பட்ட ஏழைகளுக்கும் சிறையில் அடைக்கப்பட்ட கிறிஸ்தவர்களுக்கும் அடிமைகளாக துன்பப்பட்ட மக்களுக்கும் கொடிய நோயால் துன்பப்பட்ட மக்களுக்கும் உதவிகள் புரிந்தார்.

இவர் பதவி, பட்டம் பார்க்காமல் மக்களுக்கு சேவை செய்தார். மன்னனின் கொடுமைகளை பயப்படாமல் மன்னனிடம் எடுத்துக் கூறினார்.

ஒருநாள் உரோமை பேரரசனுக்கு எவராலும் குணப்படுத்த முடியாத நோய் ஏற்பட்டு மிக வருந்தி பின் கிறிஸ்தவ சமயத்தில் தன் மகனுடன் சேர்ந்து கொண்டான். செபஸ்தியாரின் வேண்டுதலினால் நோய் நீங்கியது.

மன்னன் இதன்போது சிறையில் அடைக்கப்பட்டிருந்த 1400 பேரை விடுதலை செய்தார். எனினும் இவரோடு வாழ்ந்த தளபதி செபஸ்தியாரைப் பற்றி அரசனிடம் பலவித அவதூறுகளைக் கூறினான்.

இதனால் ஆத்திரமடைந்த மன்னன் செபஸ்தியாரை காய்ந்த மரத்தில் கட்டிவைத்து அம்புகளால் கொடூரமாக அவரது உடலை துளைக்கக் கட்டளையிட்டான். அவ்வாறே அவர்கள் செய்தார்கள். அதனால் கி. பி. 288ம் ஆண்டு ஜனவரி மாதம் 20ந் திகதி புனித செபஸ்தியார் கிறிஸ்துவுக்காக மறை சாட்சியாக மரித்தார்.

வாழ்க்கை அனைவருக்கும் அருளப்பட்ட கொடை. இதனை வாழ்ந்து வரலாறு படைத்தவர்கள் சிலரே. அந்த சிலரில் புனித செபஸ்தியாரும் ஒருவர். உலக மீட்பராகிய இயேசுகிறிஸ்துவை சாட்சி பகர்ந்த காரணத்தினால் அவர்கள் உயிரைத் தியாகம் செய்தார்.

அன்றும் இன்றும் இவர் ஏராளமான புதுமைகளை செய்து வருகிறார். வைசூரி, கொள்ளை நோய், பஞ்சம் போன்றவற்றைக் குணமாக்கினார். இன்னும் நோயால் வாடுவோர் புனித செபஸ்தியாரை வேண்டி நேர்த்திகளை வைத்து குணமடைந்து வருகின்றனர்.

எமது நாட்டில் எல்லா மறைமாவட்டங்களிலும் புனித செபஸ்தியாருக்கு ஆலயங்கள் இருக்கின்றன. அநேகமான ஆலயங்களில் ஜனவரி 20ந் திகதி திருநாள் கொண்டாடப்பட்டு வருகின்றது. சில இடங்களில் 20ம் திகதிக்கு பிறகு வரும் ஞாயிறு தினத்தை செபஸ்தியாரின் திருநாளாகக் கொண்டாடி வருகிறார்கள்.

புனித செபஸ்தியாரை எங்களுக்குத் தந்த இறைவனுக்கு நாம் நன்றி கூறுவோம். அவரது வேண்டுதலினால் நாமும் அனைத்து மக்களும் விசுவாசத்தில் உறுதி பெற்று தூய வாழ்வு வாழ வரம் வேண்டுவோம்.

எமது நாட்டிலும் பொருளாதார நெருக்கடி உட்பட தற்போதைய நிலை சுமுகமாக வேண்டும் என்று நாட்டுக்காகவும் மக்களுக்காகவும் புனித செபஸ்தியாரை மன்றாடுவோம்.

**ஷாமினி சிமியோன்**













# ப்ளக் பூல் ஆலயத்தில் திருக்குடும்ப திருவிழா திருப்பலி

நுவரெலியா, ப்ளக் பூல் புனித அந்தோனியார் ஆலயத்தில் இடம் பெற்ற திருக்குடும்ப திருவிழா திருப்பலி பூசையின் போது குடும்பங்களுக்கு விசேட ஆசீர்வாதம் வழங்கப்பட்டது. திருப்பலிப் பூசை அருட்தந்தையர்கள் ஷிவந்த றொட்ரிகோ, ரொஷான் தில்ருக்ஷன் ஆகியோரால் ஒப்புக் கொடுக்கப்பட்டதுடன் திருப்பலிப் பூசையின் இறுதியில் குடும்பங்கள் ஆசீர்வதிக்கப்படுவதையும் பழமை வாய்ந்த மேற்படி ஆலயத்தின் அழகிய தோற்றத்தையும் படங்களில் காணலாம்.

பட உதவி: திருமதி லூர்ட்ஸ் பேர்னாட்



# "வந்து பாருங்கள்"

பொதுக் காலத்தின் இரண்டாம் ஞாயிறைச் சிறப்பித்தோம். கடந்த ஞாயிறு வாசகங்கள் 'வந்து பாருங்கள்.. வாழ்ந்து காட்டுங்கள்' என்ற அழைப்பை விடுக்கின்றன.

வாழ்வின் வரலாற்றைப் புரட்டிப் பார்க்கும்போது, அது பொதுநிலையினராக இருந்தாலும் அல்லது துறவிகளாக இருந்தாலும் பலரின் வாழ்வை 'வந்து பாருங்கள்' என்ற தங்குதல் அனுபவம்தான் மாற்றியிருக்கின்றது என்பதை நாம் அறிந்துகொள்ள முடியும்.

வந்து பார்த்தவர்களின் வாழ்வே மாறிப் போயிருக்கின்றது. தங்கிப்பார்த்தவர்களின் அனுபவமே தாராளமாகப் பிறருக்காகத் தங்களையே தாரைவார்க்கச் செய்திருக்கிறது.

இந்தச் சிந்தனைகளை நம் மனங்களில் இருத்தியவர்களாக கடந்த ஞாயிறு நற்செய்தி வாசகத்தை பார்ப்போமானால் "மறுநாள் யோவான் தம் சீடர் இருவருடன் மீண்டும் அங்கு நின்று கொண்டிருந்தார். இயேசு அப்பக்கம் நடந்து சென்று கொண்டிருந்தார். யோவான் அவரைக் கூர்ந்து பார்த்து, "இதோ! கடவுளின் ஆட்டுக்குட்டி" என்றார். அந்தச் சீடர் இருவரும் அவர் சொன்னதைக் கேட்டு இயேசுவைப் பின் தொடர்ந்தனர்.

இயேசு திரும்பிப் பார்த்து, அவர்கள் தம்மைப் பின் தொடர்வதைக் கண்டு, "என்ன தேடுகிறீர்கள்?" என்று அவர்களிடம் கேட்டார். அவர்கள், "ரபி, நீர் எங்கே தங்கியிருக்கிறீர்?" என்று கேட்டார்கள். அவர் அவர்களிடம், "வந்து பாருங்கள்" என்றார்.

அவர்களும் சென்று அவர் தங்கியிருந்த இடத்தைப் பார்த்தார்கள். அப்போது ஏறக்குறைய மாலை நான்கு மணி. அன்று அவர்கள் அவரோடு தங்கினார்கள். யோவான் சொன்னதைக் கேட்டு இயேசுவைப் பின் தொடர்ந்த இருவருள் அந்திரேயா ஒருவர். அவர் சீமோன் பேதுருவின் சகோதரர். அவர் போய் முதலில் தம் சகோதரரான சீமோனைப் பார்த்து, "மெசியாவைக் கண்டோம்" என்றார்.

'மெசியா' என்றால் அருள்பொழிவு பெற்றவர் என்பது பொருள். பின்பு அவர் சீமோனை இயேசுவிடம் அழைத்து வந்தார். இயேசு அவரைக் கூர்ந்து பார்த்து, "நீ யோவானின் மகன் சீமோன். இனி 'கேபா' எனப்படுவாய்" என்றார். 'கேபா' என்றால் 'பாறை' என்பது பொருள்.

இங்கே, 'வந்து பாருங்கள்' என்பது இறைவன் நமக்கு விடுக்கும் ஓர் அழைப்பாகவே அமைந்துள்ளது. முதல் வாசகத்தில், 'சிறுவன் சாமுவேல் ஏலியின் மேற்பார்வையில் ஆண்டவருக்கு ஊழியம் செய்துவந்தான்' என்ற இறைவார்த்தைகள் சாமுவேலின் மூழ்குதல் அனுபவமாக அமைகின்றது என்பது திண்ணம்.

குழந்தைகளின்றி வாழ்ந்த சாமுவேலின் அன்னை அன்னா, ஒவ்வொரு நாளும் ஆண்டவரின் கோவிலில் மன்றாடி வந்தார். "படைகளின் ஆண்டவரே! நீர் உம் அடியாளாகிய என் துயரத்தைக் கண்ணோக்கி. என்னை மறவாமல் நினைவு கூர்ந்து எனக்கு ஓர் ஆண் குழந்தையைத் தருவீரானால், அவனை அவன் வாழ்நாள் முழுவதும் ஆண்டவராகிய உமக்கு ஒப்புக்கொடுப்பேன்" (. 1 சாமு 1:11) என்ற அன்னாவின் வார்த்தைகளில் சாமுவேல் குழந்தை பருவத்தில் ஆண்டவரின் கோவிலில் மூழ்குதல் அனுபவம் பெறுவார் என்பதை நமக்கு உணர்த்துகிறது.

மேலும் சாமுவேல் பெற்ற இந்த மூழ்குதல் அனுபவம்தான் பிற்காலத்தில் அவரை இஸ்ரயேல் மக்களின் மிகச் சிறந்த இறைவாக்கினராக உயர்த்தியது.

இப்போது நாம் இயேசு பிறப்புக் காலத்தில் இருக்கின்றோம். 'வந்து பாருங்கள்' என்ற இந்த மூழ்குதல் அனுபவத்திற்கான அழைப்பு முதலில் அன்னை மரியா ( லூக் 1:2838) மற்றும், தந்தை வளனாருக்குக் கொடுக்கப்படுகிறது ( மத் 1:2024). இயேசுவின் பிறப்பிற்குப் பிறகு இடையர்களுக்கும் ( லூக் 2:1017), இறுதியாக ஞானிகள் மூவருக்கும் ( மத் 2:110) விடுக்கப்படுகிறது.

இயேசு திருமுழுக்குப் பெற்றுத் தனது பணிவாழ்வைத் தொடங்கியபோது, 'வந்து பாருங்கள்' என்ற இயேசுவின் அழைப்பை ஏற்று அந்திரேயாவும், சீமோனும் அங்கே சென்று இயேசுவுடன் தங்கிப்பார்த்து, அவர் யார் என்பதைப் புரிந்துகொள்கின்றனர். அதன்பிறகு அந்திரேயா சென்று பேதுருவையும் அழைத்து வந்து இத்தகைய அனுபவத்தைப் பெறச் செய்கின்றார்.

மறு நாள் இயேசு கலிலேயாவுக்குச் செல்ல விரும்பியபோது அவர் பிலிப்பு மற்றும் நத்தனியேலைக் கண்டு, "என்னைப் பின்தொடர்ந்து வா" (வச. 43) எனக் கூறி இந்த மூழ்குதல் அல்லது தங்குதல் அனுபவத்திற்கு அழைப்பு விடுகின்றார்.

'இயேசுவும் சமாரியப் பெண்ணும்' என்ற உரையாடலில் சமாரியப் பெண் தம் குடத்தை விட்டுவிட்டு ஊருக்குள் சென்று மக்களிடம், "நான் செய்த எல்லாவற்றையும் என்னிடம் சொன்ன மனிதரை 'வந்து பாருங்கள்' அவர் மெசியாவாக இருப்பாரோ!" என்கிறார் (. யோவா 4:28:29). அப்பெண் இத்தகையதொரு அழைப்பை வெறுமனே விடுக்கவில்லை, மாறாக, அவருடன் மிக நீண்டதொரு உரையாடலை மேற்கொண்ட வேளை, இயேசு என்னும் மெசியா குறித்து தான் பெற்றுக்கொண்ட மூழ்குதல் அல்லது தங்குதல் அனுபவத்தின் விளைவாகவே அவர் இவ்வாறு கூறுகின்றார் என்பதையும் காண்கின்றோம்.

சமாரியப்பெண் இயேசுவுடன் மேற்கொண்ட உரையாடலின் போது, அவரை மனிதர், இறைவாக்கினர், மெசியா, மீட்பர் என்ற நான்கு நிலைகளில் புரிந்துகொள்கின்றார். இந்தப் புரிதலை அப்பெண்ணுக்கு வழங்கியது இயேசுவுடனான தங்குதல் அனுபவம்தான். இந்த உரையாடலின் இறுதியில் இன்னுமொரு சுவையான அனுபவம் நிகழ்கின்றது. அது என்னவென்றால், அப்பெண்ணுடைய ஊர்மக்கள் பெறும் மூழ்குதல் அனுபவம் தான். "நான் செய்தவை அனைத்தையும் என்னிடம் சொன்னார்" என்று சான்று பகர்ந்த பெண்ணின் வார்த்தையை முன்னிட்டு அவ்வூரிலுள்ள சமாரியர் பலர் இயேசுவிடம் நம்பிக்கை கொண்டனர். சமாரியர் அவரிடம் வந்தபோது அவரைத் தங்களோடு தங்குமாறு கேட்டுக்கொண்டனர். அவரும் அங்கு இரண்டு நாள் தங்கினார். அவரது வார்த்தையை முன்னிட்டு இன்னும் பலர் அவரை நம்பினர். அவர்கள் அப்பெண்ணிடம், "இப்போது உன் பேச்சைக் கேட்டு நாங்கள்நம்பவில்லை; நாங்களே அவர் பேச்சைக் கேட்டோம். அவர் உண்மையிலே உலகின் மீட்பர் என அறிந்து கொண்டோம்" என்றார்கள் (காண்க யோவா 4:3942)

இரண்டாம் வாசகத்தில், "ஆண்டவரோடு சேர்ந்திருப்பவர் அவருடன் உள்ளத்தால் ஒன்றித்திருக்கிறார்" என்ற வார்த்தைகள் வழியாக, மனித வாழ்வை அழித்தொழிக்கும் பரத்தமை போன்ற இவ்வுலகக் காரியங்களில் மூழ்கிப்போய்விடாமல், ஆண்டவரில் தங்கி அவருடன் ஒன்றித்து மூழ்குதல் அனுபவம் பெற்று விண்ணுலகுக்கு உரியவற்றை நாடித்தேட வேண்டும் என்று கொரிந்து நகர மக்களுக்கு அழைப்பு விடுக்கின்றார் புனித பவுலடியார்.

ஆகவே, நமது அன்றாட வாழ்வில், 'வந்து பாருங்கள்' என்று நமக்கு அழைப்பு விடுக்கும் இயேசுவின் குரலுக்குச் செவிமடுப்போம். நிறைந்த மனமுடன் அவரின் இந்த அழைப்பை ஏற்று அன்றாட நமது இறைவேண்டல்களின்போது அவருடன் தங்கி அவரில் மூழ்கி அவரைக் குறித்த அனுபவங்களைப் பெறுவோம். அதுவே நமது வாழ்வை மாற்றும். இயேசுவை 'வந்து பார்ப்போம் வாழ்ந்து காட்டுவோம்' இயேசுவில் தங்கிப்பார்ப்போம். தலைவன் வழி செல்வோம். இவ்வருளுக்காக இறைவனிடம் வேண்டுவோம்.

**அருட்பணி செல்வராஜ் சூசைமாணிக்கம்**

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சோபகிருது வருடம் தை மாதம் 02ஆம் நாள் செவ்வாய்க்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1445 ரஜப் பிறை 04


### குறள் தரும் சிந்தனை



விழைதகையான் வேண்டி இருப்பர் கெழுதகையாற்
கேளாது நட்டார் செயின்

பழகிய நட்பின் உரிமை காரணமாக தமது நண்பர் தம்மைக் கேளாமலே ஒரு செயல் புரிந்து விட்டாலும்கூட நல்ல நண்பராயிருப்பவர் அதனை ஏற்றுக் கொள்ளவே செய்வார்.

# போதைப்பொருள் குற்றங்களை கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளுக்கு ஆதரவளிப்பது அவசியம்

நாட்டில் போதைப்பொருள் குற்றங்கள் அதிகரித்துள்ளன. அதனைக் கட்டுப்படுத்த வேண்டிய தேவை பரவலாக உணரப்பட்டுள்ளன. அந்த வகையில் போதைப்பொருள் குற்றங்களைக் கட்டுப்படுத்தும் வகையில் பல்வேறு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அந்த அடிப்படையில் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு 'யுக்திய' என்ற பெயரில் விஷேட வேலைத் திட்டமொன்றை கடந்த ஆண்டின் இறுதிப்பகுதி முதல் ஆரம்பித்துள்ளது. தென் மாகாணத்தில் ஆரம்பிக்கப்பட்ட இந்நடவடிக்கை முழு நாட்டுக்கும் விரிவுபடுத்தப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

பொ லிஸாரினதும் விஷேட அதிரடிப்படையினரதும் முழுமையான ஒத்துழைப்புடன் நாடெங்கிலும் முன்னெடுக்கப்படும் இத்திட்டத்தின் கீழ் தினமும் பெருந்தொகை போதைப்பொருட்கள் கைப்பற்றப்படுகின்றன. அத்தோடு போதைப்பொருள் குற்றங்களுடன் சம்பந்தப்பட்டவ ர்களும் கைது செய்யப்பட்டு சட்டத்தின் முன் ஆஜர்ப டுத்தப்படுகின்றனர். பலர் விளக்கமறியலில் வைக்கப்படுகின்றனர். சிலர் நீதிமன்ற அனுமதியின் ஊடாக தொடர் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். மேலும் சிலர் புனர்வாழ்வு நிலையங்களுக்கு அனுப்பப்படுகின்றனர்.

நாட்டையும் மக்களையும் போதைப்பொருள் குற்றங்களில் இருந்தும் அவற்றின் பாதிப்புக்களில் இருந்தும் முழுமையாக விடுவிப்பதே இவ்வேலைத்திட்டத்தின் பிரதான நோக்கமாகும்.

ஆன போதிலும் சிலர் இவ்வேலைத்திட்டத்தை விமர்சிக்கின்ற அதேநேரம் இன்னும் சிலர் எதிர்ப்புக்களையும் தெரிவித்துள்ளனர். ஆனால் 'நாட்டினதும் மக்களினதும் நலன்களை முன்னிலைப்படுத்திய இவ்வேலைத் திட்டம் நிறுத்தப்பட மாட்டாது' என்று அமைச்சர் ட்ரான் அலஸ் தெரிவித்திருக்கிறார்.

அமைச்சரின் இந்த அறிவிப்பை மக்கள் பெரிதும் வரவேற்பர். போதைப்பொருள் குற்றங்கள் முற்றாக ஒழிக்கப்பட வேண்டும் என்பதே மக்களின் எதிர்பார்ப்பும் விருப்பமும் ஆகும். ஏனெனில் அந்தளவுக்கு மோசமான தாக்கங்களையும் பாதிப்புக்களையும் போதைப்பொருள் துஷ்பிரயோகம் ஏற்படுத்தியுள்ளன. இத்துஷ்பிரயோகத்தினால் சமூகத்திலும் நாட்டிலும் ஏற்பட்டுள்ள தாக்கங்களும் பாதிப்புக்களும் சாதாரணமாக நோக்கப்படக்கூடியவை அல்ல. இந்நிலை தொடர இடமளிக்க முடியாது. அது பாரிய சமூக, கலாசார சீரழிவுகளுக்கு கூட வித்திடலாம். அதன் விளைவான தாக்கங்களும் பாதிப்புக்களும் மிக மோசமாகவே அமைந்திருக்கும்.

அவ்வாறான நிலைமை ஏற்படுவதைத் தவிர்க்கும் வகையில் முன்னெடுக்கப்படும் இந்நடவடிக்கையின் கீழ் கைது செய்யப்படும் போதைப்பொருள் குற்றங்களில் ஈடுபடுவர்கள் சட்ட நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்படுவதோடு சட்ட ஏற்பாடுகளின் அடிப்படையில் புனர்வாழ்வும் அளிக்கப்படுகின்றனர்.

ஆனால் போதைப்பொருள் பாவனைக்கு அடிமையானவர்களுக்கு புனர்வாழ்வு அளிக்கவென அமைக்கப்பட்டுள்ள கந்தக்காட்டு புனர்வாழ்வு நிலையத்தில் அண்மைக் காலமாக முறுகல்களும் தப்பியோடுதல்களும் அவ்வப்போது இடம்பெறக்கூடிய நிகழ்வுகளாக உள்ளன. இவ்விடயத்தில் நீதி, அரசியலமைப்பு மறுசீரமைப்பு மற்றும் சிறைச்சாலைகள் அமைச்சர் கலாநிதி விஜேதாச ராஜபக்ஷ விஷேட கவனம் செலுத்தியுள்ளார்.

புனர்வாழ்வு பெறும் போதைப்பொருள் குற்றங்களில் ஈடுபட்டவர்கள் மத்தியில் குழுக்கள் உருவாவதும் கைகலப்புகள் ஏற்படுவதும் புனர்வாழ்வு நிலையங்களில் இருந்து தப்பியோடுவதும் ஆரோக்கியமானதல்ல. இந்நிலையில் கந்தகாட்டு புனர்வாழ்வு நிலையத்தில் சில தினங்களுக்கு முன்னர் புனர்வாழ்வு பெறுபவர்கள் மத்தியில் ஏற்பட்ட கைகலப்பு குறித்து தமக்கு உடனடியாக அறிக்கை சமர்ப்பிக்குமாறு கேட்டுள்ள அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ, இப்புனர்வாழ்வு நிலையத்தின் நிர்வாகத்தில் மாற்றங்களை ஏற்படுத்துவது குறித்தும் கவனம் செலுத்தியுள்ளார்.

போதைப்பொருள் பாவனைக்கு அடிமையாகி உள்ளவர்களுக்கு புனர்வாழ்வளிப்பு இன்றியமையாததாகும். இல்லாவிடில் சமூகத்தில் ஏற்படக்கூடிய தாக்கங்கள் மிக மோசமான பாதிப்புக்களை ஏற்படுத்தக் கூடியதாகவே இருக்கும். குறிப்பாக போதைப்பொருள் பாவனையின் விளைவாக ஆரோக்கிய ரீதியில் ஏற்படக்கூடிய பாதிப்புக்களும் சாதாரணமானவை அல்ல. அவை சிகிச்சைக்காக அதிக செலவுகளை ஏற்படுத்தக்கூடிய பாதிப்புக்களாக அமைந்திருக்கும்.

அதனால் தான் போதைப்பொருள் குற்றங்களின் ஊடாக ஆரோக்கிய ரீதியில் ஏற்படக்கூடிய பாதிப்புக்களைத் தவிர்ப்பதையும் சமூக சீரழிவுகள் தோற்றம் பெறுவதைக் கட்டுப்படுத்துவதையும் நோக்காகக் கொண்டு புனர்வாழ்வு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

இக்குற்றங்களைக் கட்டுப்படுத்துவதில் கூடுதல் கவனம் செலுத்தி விஷேட வேலைத்திட்டங்களை பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு முன்னெடுத்துள்ள அதேநேரம், போதைப்பொருள் பாவனைக்கு அடிமையாகியுள்ளவர்களின் நலன்களை முன்னிலைப்படுத்தி புனர்வாழ்வு அளிக்கப்படும் கந்தக்காடு நிலையத்தில் ஏற்பட்டுள்ள நிலைமையை சமூக ஆர்வலர்கள் கவலையுடனேயே நோக்குகின்றனர்.

ஆகவே போதைப்பொருள் குற்றங்களில் இருந்து நாட்டையும் மக்களையும் முழுமையாக மீட்டெடுக்கும் நோக்கில் முன்னெடுக்கப்படும் இவ்வேலைத்திட்டங்களின் வெற்றிக்கு ஆதரவும் ஒத்துழைப்பும் நல்கப்பட வேண்டும். அது நாட்டினதும் மக்களினதும் முன்னேற்றத்திற்கு அளிக்கப்படும் பங்களிப்பாக அமையும். இதுவே இப்போதைய தேவையும் கூட.

editor.tkn@lakehouse.lk

# மனிதகுலத்தைக் காக்கும் கால்நடைகளுக்கு நன்றி செலுத்தும் மாட்டுப் பொங்கல் பண்டிகை

தமிழர்கள் கொண்டாடும் பண்டிகைகளில் மாட்டுப் பொங்கலும் ஒன்றாகும். தமிழர்கள் உயிர்கள் மீது கொண்டுள்ள அன்பினையும் நன்றி மறவாமையையும் இப்பண்டிகை தெளிவாக எடுத்துக் காட்டுகின்றது.

உழவுத் தொழிலுக்கு உதவியாக இருந்த மாடுகளுக்கு நன்றி தெரிவிக்கும் விதமாக கொண்டாடும் விழாதான் மாட்டுப் பொங்கல். இலங்கையில் இதனை பட்டிப்பொங்கல் என்றும் கூறுவர்.

மாட்டுப் பொங்கலானது தைத்திருநாளான பொங்கல் திருநாளுக்கு மறுநாள் சிறப்பாக கிராமங்களில் கொண்டாடப்படுகிறது.

தமிழர்களுடைய வாழ்வியல் என்பது அழகியல் நிறைந்ததாகும். தை மாதம் பிறந்தவுடன் ஒரு புதிய வருடத்தை வரவேற்பதற்காக மக்கள் அனைவரும் ஆரவாரத்துடன் இயங்குவார்கள். தமது விவசாய நடவடிக்கைகளில் தமக்குத் துணையாக இருக்கின்ற விலங்குகளான மாடுகளை தங்களது குடும்பம் போன்று பாவித்து அவற்றுக்கான பொங்கலாக இன்றைய பண்டிகை இடம்பெறுகின்றது.

காமதேனு என்கின்ற கற்பக பசுவின் சந்ததிகள்தான் பசுக்கள் என்பது இந்துக்களின் நம்பிக்கை. அவை மனிதர்களுக்கு பல வழிகளிலும் பல ஐஸ்வர்யங்களை தருவதனால் அவற்றை கோமாதா என்று இந்துக்கள் நீண்டகாலமாக வழிபட்டு வருகின்றனர். அதனை சிறப்பாக மாட்டுபொங்கல் எனும் பண்டிகை மூலமாக கொண்டாடுகின்றனர்.

மனிதனின் வாழ்வில் பல வழிகளிலும் ஒரு தாயைப் போலவே பால், தயிர், மோர், நெய் என்று பலவற்றை தந்து மனித குலத்தையே காப்பதனால் பசுக்கள் புண்ணியம் நிறைந்த செல்வங்களாக மதிக்கப்படுகின்றன.

மாடுகளை வைத்தே முன்பு செல்வங்கள் அளவிடப்பட்டன. இதன் மூலமாக மாடுகளுக்கான மகத்துவத்தை உணர்ந்து கொள்ள முடியும். ஒரு பசுவானது மனிதர்களை பாதுகாக்கின்றது, பலருக்கும் வாழ்வளிக்கின்றது. தாயை இழந்த குழந்தைக்கு பசுப்பால்தான் ஆகாரமாகின்றது. ஆகவே பசுக்கள் நன்றிக்குரிய ஜீவன்களாகும்.

எருதுக்கள் வயலை உழவும் வண்டிகளை இழுக்கவும் பயன்படுகின்றன. எனவே விவசாயக் குடிமக்கள் இவற்றை தங்கள் செல்வங்களாக பாவித்து போற்றி வருகின்றனர்.





மாட்டுப் பொங்கலின் போது மக்கள் தாம் வளர்க்கின்ற மாடுகளை அன்போடு குளிப்பாட்டி அலங்கரித்து அவற்றினை அழைத்து வந்து முற்றத்தில் கட்டி அவற்றுக்கு பொங்கல் செய்து, சிற்றுண்டிகள் உண்பதற்குக் கொடுப்பார்கள்.

இவ்வாறு செய்வதன் மூலம் தங்கள் நன்றி உணர்வையும், அவற்றின் மீது அவர்கள் கொண்ட பாசத்தையும் அவர்கள் வெளிப்படுத்துவார்கள். பட்டிப்பொங்கல் தமிழர்கள் மத்தியில் மிகவும் பிரபல்யமான பண்டிகையாகும்.

விவசாயத்தில் இயந்திரங்களின் செல்வாக்கு அதிகரித்தமையினால் மாடுகளின் முக்கியத்துவமானது குறைந்தாலும் மாடுகள் விவசாயிகளின் செல்வங்களாகவே கருதப்படுகின்றன. மாடுகளை தங்கள் உறவாக எண்ணி வளர்க்கும் தமிழர் பாரம்பரியம் தொடர்ந்த வண்ணம் உள்ளது.

உழவுக்கும், வண்டி இழுக்கவும், சூடு மிதிக்கவும், நீர் இறைக்கும் சூத்திரத்தைச் சுற்றுவதற்கும் இன்னும் பல தேவைகளுக்கும் எருது மாடுகளும் மனிதனுக்குப் பயனாக இருந்தன. பால், சாணம் என்பனவும் பயன் தந்தன.

இந்தியாவின் பல பகுதிகளில் இன்றைய தினம் ஜல்லிக்கட்டு, உறி அடித்தல், வழுக்கு மரம் ஏறுதல் உள்ளிட்ட விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்படுகின்றன. மாடுகளை விவசாயிகள் வழிபடுகின்ற பாரம்பரியமும் அங்கு நிலவுகின்றது.

இன்றைய தினம் உழவுக்கருவிகளைச் சுத்தம் செய்து அவற்றுக்கு சந்தனம், குங்குமம் வைப்பார்கள். விவசாயத்தில் பயன்படுத்தப்படும் அனைத்துக் கருவிகளையும் இதேபோல செய்வார்கள். தொழுவத்திலேயே பொங்கல் பொங்கி கற்பூர தீபாராதனைக் காட்டி பசு, காளை, எருமை என அனைத்து கால்நடைகளுக்கும் பொங்கல், பழம் கொடுப்பார்கள்.

மாட்டுப் பொங்கல் இலங்கை, கர்நாடகா, ஆந்திரா போன்ற இடங்களில் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.

கால்நடைகளை எல்லாத் தீமைகளில் இருந்தும் காக்குமாறு இறைவனிடம் வேண்டுவர். குறிப்பாக தங்களது கால்நடைகள் பெருக வேண்டும் என்று பகவா கிருஷ்ணர் மற்றும் இந்திரன் போன்ற தெய்வங்களை வழிபடுவர். அதன்பின் கால்நடைகளின் முன்நெற்றி மற்றும் கால்களைத் தொட்டு கால்நடைகளை வழிபடுவர். இறுதியாக அவற்றுக்கு ஆராத்தி எடுப்பர்.

இவ்வாறாக தமிழர்களின் வாழ்வியலுடன் இரண்டறக் கலந்த பண்டிகையாகவே மாட்டுப் பொங்கல் விளங்குகிறது.

# மாலைதீவு மண்ணிலிருந்து இந்திய இராணுவத்தினர் வெளியேறி விட வேண்டும்!

மாலைதீவின் புதிய ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள முகமது முய்ஸு, உடனடியாக இந்தியப் படைகள் மாலைதீவை விட்டு வெளியேற வேண்டும் என நிபந்தனை விதித்துள்ளார்.

மாலைதீவு குட்டிநாடாக இருந்தாலும் புவிசார் அரசியலில் இது முக்கியமான இடத்தில் இருக்கிறது. இதன் காரணமாகவே மாலைதீவு யாருடைய ஆதரவு நிலைப்பாட்டை எடுக்கிறது என்பது மிகவும் முக்கியமானதாகப் பார்க்கப்படுகிறது. குறிப்பாக இந்தியா மற்றும் சீனா மாலைதீவில் என்ன நடக்கிறது என்பதைக் கூர்ந்து கவனித்தே வருகின்றனது.

மாலைதீவில் இத்தனை ஆண்டுகள் ஜனாதிபதியாக இருந்தவர் இப்ராஹிம் முகமது. அவர் இந்தியா ஆதரவு நிலைப்பாட்டை எடுத்திருந்தார். அவரது ஆட்சிக் காலத்தில்தான் இந்தியா மாலைதீவு இடையே உறவுகள் மேம்பட்டிருந்தன. இந்தியாவும் மாலைதீவுக்குப் பல உதவிகளை வழங்கியது. மேலும், இந்திய இராணுவமும் மாலைதீவில் தங்கியுள்ளது.

ஆனால், அங்கு நடந்த ஜனாதிபதித் தேர்தலில் இப்ராஹிம் முகமது தோல்வியடைந்தார். மாலைதீவு ஜனநாயக கட்சியின் முகமது முய்ஸு வென்று ஜனாதிபதியாகத் தெரிவானார். இந்த புதிய ஜனாதிபதி சீனா ஆதரவு நிலைப்பாட்டைக் கொண்டவராக அறியப்படுகிறார். தேர்தல் பிரசாரத்தின் சமயத்திலேயே போதே முகமது முய்ஸு, மாலைதீவில் இருக்கும் இந்திய இராணுவத்தை வெளியேற்றுவேன் என்று கூறியே பிரசாரம் செய்திருந்தார். அதற்கு ஓரளவுக்கு மக்கள் ஆதரவும் கூட கிடைத்தது. இதுவே அவர் தேர்தலில் வெல்லவும் உதவியது. இதற்கிடையே மாலைதீவு முழு சுதந்திரமாக இருக்க விரும்புவதால் இங்குள்ள இந்திய வீரர்கள் உடனடியாக வெளியேற வேண்டும் என்று புதிய ஜனாதிபதி முகமது முய்ஸு தெரிவித்துள்ளார். தனது தேர்தல் பிரசாரத்தின் போது இந்திய இராணுவம் மாலைதீவில் இருக்கக் கூடாது என்று கடுமையாக எதிர்த்தவர் முய்ஸு. எதிர் வரும் காலங்களில் மாலைதீவில் இருந்து இந்திய வீரர்களை விரைவாக வெளியேற்ற அவர் அழுத்தம் கொடுப்பார் என்றே சர்வதேச வல்லுநர்கள் கூறுகிறார்கள்.

இது தொடர்பாக ப்ளூம்பெர்க் செய்தி நிறுவனத்திற்கு அவர் அளித்த பேட்டியில், "இந்திய இராணுவம் மாலைதீவில் இருந்து உடனடியாக வெளியேற வேண்டும் என்பதே எனது நிலைப்பாடு. இந்தியா என்று இல்லை வேறு எந்த நாட்டின் இராணுவம் இங்கே இருந்தாலும் எனது நிலைப்பாடு இதுவேதான்" என்று தெரிவித்தார்.



## இந்தியாவுக்கு மாலைதீவு ஜனாதிபதி முகமது முய்ஸு விதித்துள்ள கண்டிப்பான காலக்கெடு!



சுமார் 70 இந்திய இராணுவ வீரர்கள் மாலைதீவில் உள்ள ரேடார் நிலையங்களையும் கண்காணிப்பு விமானங்களையும் பராமரித்து வருகின்றனர். மேலும், இந்தியப் போர்க்கப்பல்கள் மாலைதீவின் பிரத்தியேக பொருளாதார மண்டலத்தில் ரோந்து செல்ல இந்திய இராணுவம் அங்கு உதவுகின்றது. இதைத்தான் உடனடியாக வெளியேற்ற வேண்டும் என்று மாலைதீவு ஜனாதிபதி முய்ஸ் வலியுறுத்துகிறார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில், "இந்த விவகாரத்தில் இந்திய அரசுடன் ஏற்கனவே பேச்சுவார்த்தையை ஆரம்பித்து விட்டோம். இருதரப்பிற்கும் பரஸ்பர நன்மை தரும் உறவைத்தான் நாங்கள் விரும்புகிறோம். இந்திய வீரர்கள் வெளியேறிய பிறகும் மற்றைய வீரர்களை அனுமதிக்க மாட்டோம். சீன வீரர்களையும் கூட அனுமதிக்க மாட்டோம்" என்று தெரிவித்தார்.

இந்திய வீரர்கள் நிச்சயம் வெளியேற்றப்பட வேண்டும் எனக் கூறிய அவர், அதேநேரம் அனைத்து நாடுகள் உடனும் மாலைதீவு பரஸ்பர உறவை விரும்புவதாகவும் தெரிவித்தார். இருப்பினும், இந்திய இராணுவம் வெளியேறிய பிறகு மெல்ல சீன படைகள் உள்ளே வர வாய்ப்புகள் அதிகம் என்றே சர்வதேச வல்லுநர்கள் கூறுகிறார்கள். எதிர்வரும் மார்ச் 15 ஆம் திகதிக்குள் மாலைதீவில் இருக்கும் இந்திய இராணுவத்தினரை மீட்டுக்கொள்ள வேண்டும் என்று மாலைதீவு ஜனாதிபதி முகம்மது முய்சு இந்தியாவிடம் கேட்டுக்கொண்டுள்ளார்.

# நாடெங்கும் டெங்கு தீவிரமடைவதால் அவதானம் பேணுமாறு எச்சரிக்கை!

டெங்கு நோயாளர்கள் வீடுகளில் சிகிச்சை பெறுவதனை தவிர்த்து வைத்தியசாலைகளை நாடுமாறு மருத்துவ நிபுணர்கள் பொதுமக்களுக்கு ஆலோசனை கூறியுள்ளனர். நாட்டின் பல பகுதிகளில் டெங்கு நோயாளர்கள் பலர் இனங்காணப்பட்டுள்ளதையடுத்தே இந்த அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

டெங்கு காய்ச்சல் குறித்து அலட்சியமாக இருந்தால் அந்நோய் உயிராபத்தை ஏற்படுத்தக் கூடிய ஒரு நோயாகும். இந்நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் அடையாளம் காணப்படும் சந்தர்ப்பத்தில் வீடுகளிலிருந்து சிகிச்சை பெறுவதனை தவிர்த்து வைத்தியசாலைகளுக்குச் சென்று சிகிச்சை பெற வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

தற்போது நாட்டின் பல பாகங்களிலும் மழை பெய்துள்ளதால் அதிகமான இடங்களில் நீர் தேங்கியுள்ளது. இது டெங்கு நுளம்புகள் பெருகுவதற்கு சாதகமான சூழ்நிலையை கொண்டுள்ளது. எனவே தமது சுற்றாடலுடன் அயற்சூழலையும் சுத்தமாகவும் சுகாதாரமாகவும் பேண வேண்டியது எமது அனைவரினதும் கடமையாகும்.

டெங்கு தொடர்பாக பொதுமக்களை விழிப்பூட்டும் நடவடிக்கைகளில் பிராந்திய சுகாதார வைத்திய பணிப்பாளர் அலுவலகம், சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயம், பொதுசுகாதார பரிசோதகர்கள், உள்ளூராட்சி சபைகள், பிரதேச செயலகங்கள், இராணுவம், பொலிஸார், சர்வமத பெரியார்கள், சமூக சேவை அமைப்புகள், தனியார் நிறுவனங்கள், விளையாட்டுக் கழகங்கள் ஊடாக பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.



நுளம்பு பெருகும் இடங்களை இல்லாதொழிப்பதும், நுளம்பில் இருந்து எம்மை பாதுகாப்பதுமே டெங்கின் பிடியிலிருந்து விடுபடும் ஒரே வழிமுறையாகும்.

டெங்கு நோயுடைய ஒருவரை குத்திய நுளம்பு ஏறத்தாழ 7 நாட்களின் பின் இன்னொருவரை குத்துட' போது டெங்கு தொற்றை ஏற்படுத்தும். நுளம்பின் முட்டையிலிருந்து நிறைவுடலி நுளம்பாக உருவாக 8 நாட்கள் எடுக்கும். எனவே தேவையற்ற நீர்க் கொள்கலன்களை அழிக்க வேண்டும்.

சிரமதான நடவடிகைகளில் ஈடுபடும் போது, நீர் தேங்கிக் காணப்படும் பிளாஸ்டிக்குகள், பொலித்தீன், உலோக, கண்ணாடி கொள்கலன்கள், சிரட்டை மற்றும் இளநீர் குரு ம்பைகளை அகற்ற வேண்டும்.

ஈடிஸ் நுளம்புகள் சூரிய உதயமாகி 2 தொடக்கம் 3 மணித்தியாலங்களுக்குள்ளும், சூரிய அஸ்தமனத்திற்கு முன் 2 தொடக்கம் 3 மணித்தியாலயங்களுக்கு முன்பும் மனிதர்களை குத்தக் கூடியவை.

காய்ச்சல் அறிகுறிகள் தென்பட்டால் நுளம்பு வலைகளுக்குள் ஓய்வெடுக்க வேண்டும். இரண்டு நாட்களுக்கு மேல் காய்ச்சல் நீடித்தால் வைத்திய ஆலோசனை பெறுவதுடன் குருதி பரிசோதனையும் செய்து கொள்ள வேண்டும்.

வைத்தியரின் ஆலோசனையின் பேரில் ஓய்வெடுப்பதுடன் நீராகாரமும் அருந்த வேண்டும். வைத்தியரின் ஆலோசனைக்கமைய வைத்தியசாலைகளில் தங்கி சிகிச்சை பெறுவதுடன் கண்காணிப்புடன் முகாமைத்துவம் செய்தால் ஆபத்தான நிலையிலிருந்து தவிர்த்துக் கொள்ளலாம்.

எம்.ஐ.எம்.அஸ்ஹர்...
(மாளிகைக்காடு குறூப் நிருபர்)

# தென்பகுதி இந்துக்களும் தைத்திருநாளை கொண்டாடினர்

**(வெலிகம தினகரன் நிருபர்)**

வெலிகம பகுதியில் வாழ் இந்துக்கள் நேற்று (15) தைத்திருநாளாம் தைப்பொங்கலை மிகவும் விமர்சையாகவும், சிறப்பாகவும், அமைதியாகவும், கொண்டாடி மகிழ்ந்தனர். பொருளாதார நெருக்கடிகள் இருந்த போதிலும், சிறுவர் முதல் பெரியோர் வரை இத்திருநாளை கொண்டாட வாய்ப்பு கிடைத்தமை பெரிதாக மதிப்பதாக அவர்கள் கூறுகின்றனர்.

வெலிகமையில் கோவில் இல்லாத போதிலும், காலி, மாத்தறை மற்றும் தெனியாய பகுதிகளுக்குச் சென்று அங்கு சமய வழிபாடுகளில் ஈடுபட்டு வந்ததை அவதானிக்க முடிந்தது.

# மத்திய நுவரகம்பளாத பிரதேச செயலக பிரிவில் டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம்

**(திறப்பனை தினகரன் நிருபர்)**



சமீபத்தில் பெய்த கன மழையால், நுளம்புகளின் பரவல் அதிகரித்துள்ள நிலையில் அரசாங்கத்தினால் அறிவிக்கப்பட்ட டெங்கு தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டு வாரத்துடன் இணைந்து மத்திய நுவரகம்பளாத பிரதேச செயலகப் பிரிவில் டெங்கு தடுப்பு வேலைத்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டன.

மத்திய நுவரகம் பளாத பிராந்திய சுகாதார அதிகார பிரிவுக்கு உட்பட்ட பன்டுலகம, அலையாபத்து, சாலியபுர போன்ற மக்கள் செறிந்து வாழும் பிரதேசங்களில் டெங்கு நுளம்புகள் பெருகும் இடங்கள் ஆராயப்பட்டு,

இங்கு, டெங்கு நோயை கொண்டு வரும் நுளம்புகள் அதிகம் உள்ள பகுதிகள் கண்டறியப்பட்டு, அந்த பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு இது பற்றிய விளக்கங்களோடு இவைகள் அழிக்கப்பட்டன.

பாடசாலைகள், மருத்துவமனைகள், காவல் நிலையங்கள், நூலகங்கள், தனியார் நிறுவனங்கள் மற்றும் வணிக இடங்கள் உள்ளிட்ட வீடுகள், ஆட்டோ சர்வீஸ் சென்டர்கள், முன் குழந்தைப் பருவ மையங்கள், கூடுதல் வகுப்புகள் நடைபெறும் இடங்கள், வீடுகள் ஆகியவையும் இங்கு பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

# மூடும் திகதியின் நீடித்தல்

**துறைமுகங்கள், கப்பல்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சு**

**விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (ஸ்ரீ லங்கா) (தனியார்) லிமிட்டெட்**

**விலைமனு இல.: 113/T/2023**

## பயணிகள் புறப்பாடு, சரிபார்த்தல் (Check-in) மற்றும் SATELLITE BOARDING GATES மற்றும் பொதி கையாளும் அமைப்புக்கான திறனை மேம்படுத்துவதற்கு புதிய கட்டிடத்தின் நிர்மாணம் (பொதி 1)

மேலேயுள்ள விலைமனு தொடர்பாக 2023.12.03 ஆம் திகதியன்று 'சண்டே ஒப்சவர்' பத்திரிகையிலும் 04.12.2023 ஆம் திகதியன்று 'டெயிலி நியூஸ்', 'தினமின' மற்றும் 'தினகரன்' பத்திரிகைகளிலும் பிரசுரிக்கப்பட்ட பத்திரிகை விளம்பரங்களுக்கு மேலதிகமானது.

மேலேயுள்ள விலைமனுவின் மூடும் திகதியானது 2024 ஜனவரி வெள்ளிக்கிழமை 26 ஆம் திகதியன்று பி.ப. 2 மணி வரையும் நீடிக்கப்பட்டுள்ளது.

ஏனையவற்றில் எவ்வித மாற்றமுமில்லை

**தலைவர்**
**அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட நிலையியல் பெறுகைக் குழு,**
**துறைமுகங்கள், கப்பற்சேவைகள் மற்றும் விமானசேவைகள்**
**30ஆம் மட்டம், மேற்கு கோபுரம்,**
**உலக வர்த்தக மையம்,**
**கொழும்பு-01, இலங்கை**

# வெள்ளவத்தையில் தை பொங்கல் விழா



**ருஷைக் பாரூக்**

வெள்ளவத்தை றொட்டரக் கழகம் 12 வது தடவையாக ஒழுங்கு செய்த தை பொங்கல் நிகழ்வுகள் நேற்று (15) பம்பலப்பிட்டி குடியிருப்பு வளாகத்தில் கழக தலைவி றெபேக்கா பிரியதர்ஷினி லெச்சுமணன் தலைமையில் நடைபெற்றது.

கல்கிசை ரோட்டரி கழகத்தின் தலைவர் ஜிஹான் டல்பதடோ, முன்னாள் தலைவர் நிவந்த ஏகநாயக்க, வெள்ளவத்தை றொட்டரக் கழக செயலாளர் குகலேஷனி ரவிராஜா, திட்டத் தலைவர் வசீகரன் விநாயகமூர்த்தி, கழக உறுப்பினர்கள் மற்றும் ஜேர்மன் ஹம்பர்க் றொட்டரக் கழக பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.



உலக சமாதானத்தை வலியுறுத்தி சர்வதேச மனித உரிமைகள் உலகளாவிய இயக்கம் சர்வதேச மனித உரிமைகள் சங்கத்தின் தலைவர் அமீர்கான் தலைமையில் பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் ஏற்பாடு செய்திருந்த வைபவத்தில் பௌத்தர்களின் உலக கூட்டுறவு அமைப்பின் இலங்கை நிலையத் தலைவர் சுடொத் தேவபுர பிரதம அதிதியாகக் கலந்து கொண்டிருந்த போது பிடிக்கப்பட்ட படம்.

படம் : அஷ்ரப் ஏ சமட்


ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board

ஞாயிறு 2024.01.14

உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk

NLB

**மஹஜன சம்பத**
சீட்டிழுப்பு இலக்கம் 5359
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 30,762,208.00
ஆங்கில எழுத்து K வெற்றி இலக்கங்கள் 2 5 7 0 8 0

**கொவிசெத**
சீட்டிழுப்பு இலக்கம் 3601 சீட்டிழுப்பு திகதி 2024.01.14
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 61,764,337.64
ஆங்கில எழுத்து D வெற்றி இலக்கங்கள் 18 24 27 70 விசேட எழுத்து D
இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 99358

**Mega POWER**
சீட்டிழுப்பு இலக்கம் 1707 2024.01.14
44322
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 420,710,302.00
ஆங்கில எழுத்து K சுப்பர் இலக்கம் 19 வெற்றி இலக்கங்கள் 06 52 69 75
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

**Lucky 7 VIP**
திகதி 2024.01.14 சீட்டிழுப்பு இலக்கம் 0185
ஆங்கில எழுத்து E வெற்றி இலக்கங்கள் 1 8 6 7 6 2
L7 எழுத்து E
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ.23,266,973.92

**ராசி சுப பலன்**
திகதி 2024.01.14 சீட்டிழுப்பு இலக்கம் 668
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 3,000,000.00
வெற்றி இலக்கினம் விருச்சிகம் வெற்றி இலக்கங்கள் 03 19 27 61
தனயோக இலக்கம் 31001 நாளுக்கான விதி எண் 05

**தன நிதானய**
சீட்டிழுப்பு இலக்கம் 1389 2024.01.14
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 130,096,358.56
ஆங்கில எழுத்து T வெற்றி இலக்கங்கள் 16 31 40 81 விசேட எழுத்து T
இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 19198


போக்குவரத்துச் மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு

## தேசிய போக்குவரத்து வைத்திய நிலையம்

### கேள்விமனு கோரும் அறிவித்தல்

**2024 ஆம் ஆண்டுக்காக நுகேகொடை தலைமை அலுவலகத்திற்கும் நாடெங்குமுள்ள 25 கிளைகளுக்கும் 78 டெஸ்க்டாப் கணணிகளை வழங்குவதற்காக தகுதியும் அனுபவமும் கொண்ட நிறுவனங்களிடம் இருந்து விலைகூறல் மனுக்கள் கோரப்படுகின்றன.**

விலைகூறல் மனு நிபந்தனைகள்

(1) மனுப் பத்திரங்களை இல.170, ஹைலெவல் வீதி, நுகேகொடை என்னும் முகவரியிலுள்ள தேசிய போக்குவரத்து வைத்திய நிலையத்தின் கணக்குப் பிரிவைச் சேர்ந்த கணக்காளரிடமிருந்து 2024-01-16 தொடக்கம் 2024-02-06 வரை வார நாட்களில் மு.ப.9.00க்கும் பி.ப. 2.00க்கும் இடையே பெற்றுக்கொள்ளலாம்.

(2) மனுப் பத்திரங்களைப் பெறும்போது மீளப் பெறமுடியாத வைப்பாக ரூ.5000/- செலுத்தி பெறலாம் என்பதுடன்இ மீளப் பெறமுடியாத வைப்பு விலைகூறல் மனுவின் 1% ஆக இருத்தல் வேண்டும். மீளப் பெறக்கூடிய நிபந்தனையற்ற வைப்பு (08-02-2024 முதல் 4 மாதங்கள் செல்லுபடியாகக்கூடிய) வணிக வங்கியொன்றின் ஊடாக நிபந்தனையற்ற முறையில் தேசிய போக்குவரத்து வைத்திய நிலையத்தின் பெயருக்குச் செலுத்தப்படுவதோடு, பிணையொன்றும் சமர்ப்பிக்கப்படுவது கட்டாயமாகும். அவ்வாறில்லாத மனுக்கள் நிராகரிக்கப்படும்.

(3) சீல் வைக்கப்பட்ட விலைகூறல் மனுக்கள் "அலுவலகங்களுக்கு டெஸ்க்டாப் கணணிகளை வழங்கல் - 2024" என்று இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிடப்பட்ட கடித உறையில் இடப்பட்டு, இல.170, ஹைலெவல் வீதி, நுகேகொடை எனும் முகவரிக்குப் பதிவுத் தபாலில் அனுப்பப்பட வேண்டும். அல்லது போக்குவரத்து வைத்திய நிலையத்தின் கணக்குப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள டென்டர் பெட்டிக்குள்ளும் மனுக்களைப் போடலாம்.

(4) விலைகூறல் மனுக்களை ஏற்றுக்கொள்ளுதல் 2024-02-08 ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முடிவடையும் என்பதுடன், உடனடியாகவே மனுக்கள் திறக்கப்படும். இந்த வேளையில், மனுதாரர்கள் அல்லது அவர்களினால் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்கலாம்.

நுகேகொடை, வேரஹர, கம்பஹா, களுத்துறை, காலி, மாத்தறை, ஹம்பாந்தோட்டை, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை, யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, குருநாகல், புத்தளம், அனுராதபுரம், பொலன்னறுவை, கண்டி, நுவரெலிய, மாத்தளை, இரத்தினபுரி, கேகாலை, மொனராகலை மற்றும் பதுளை.

தலைவர்,
திணைக்கள கொள்முதல் குழு,
தேசிய போக்குவரத்து வைத்திய நிலையம்
இல.170, ஹைலெவல் வீதி, நுகேகொடை.
தொலைபேசி: 0112 814862 / 0112 814 865

## சுகாதார அமைச்சு

### பெறுகை அறிவித்தல்

### ஆதார வைத்தியசாலை (போதனா) - கம்பளை

**2024-2025 வருடத்தில் பின்வரும் வேலைகளை செய்து கொள்வதற்காக பிராந்திய பெறுகைக் குழுவின் தலைவரினால் விலைமனுக்கள் கோரப்படுகின்றன.**

| தொ. இல. | உருப்படிகள் | தகைமை | மீளளிக்கப்படும் கேள்விப் படிவக் கட்டணம் |
|---|---|---|---|
| 1. | 500 KVA மின்பிறப்பாக்கி இயந்திரத்தை பராமரித்தல் மற்றும் சேர்விஸ் செய்தல் 2024-2025 | நிர்மாண அபிவிருத்தி நிறுவனத்தின் செல்லுபடியாகும் பதிவு (EM-5 அல்லது அதற்கு மேல்) மற்றும் பதிவில் மின் பிறப்பாக்கி இயந்திர சேவை உள்ளடக்கப்பட்டிருத்தல் வேண்டும் (CIDA EM-5 Generators Gen) | ரூபா 2,500.00 |

02. கேள்வி ஆவணங்களை 2024-01-16ஆம் திகதி முதல் 2024-02-06ஆம் திகதி வரையான பொதுக் கடமை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.00 மணிக்கிடையில் கம்பளை, ஆதார வைத்தியசாலையில் பெற்றுக்கொள்ளலாம். விலைமனு ஆவணங்களைப் பெற்றுக்கொள்வதற்கான தகைமையை நிரூபிக்கும் சாட்சிகள் மற்றும் மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணத்தை கம்பளை ஆதார வைத்தியசாலையின் கணக்காளருக்குச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பொது 172 மாதிரியில் கேள்விப் படிவங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

03. கேள்வி ஆவணங்களைச் சமர்ப்பிக்கும் போது வேறு வைத்தியசாலை அல்லது வைத்தியசாலைகளில் மின்சார பராமரிப்பு வேலைகளை வெற்றிகரமாக நிறைவேற்றியமைக்கான அனுபவச் சான்றிதழ் அல்லது / மற்றும் அரசாங்க நிறுவனம் / அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனமொன்றில் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட காலம் மின்சார பராமரிப்பு வேலைகளை வெற்றிகரமாக நிறைவேற்றியிருத்தல் தொடர்பான அனுபவம் இருத்தல் வேண்டும்.

04. முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட கேள்விப் படிவங்களை 2024-02-07ஆம் திகதி பி.ப. 2.30 மணி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது கம்பளை ஆதார வைத்தியசாலையின் கணக்காளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். கேள்விகளைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "மின்பிறப்பாக்கி இயந்திரங்களின் பராமரிப்பு மற்றும் சேர்விஸ் 2024/2025" எனக் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.

05. கேள்விகள் ஏற்றுக்கொள்ளும் காலம் முடிவடைந்தவுடன் அதாவது 2024-02-07ஆம் திகதி பி.ப. 2.30 மணிக்கு வைத்தியசாலையின் அலுவலகத்தில் கேள்விகள் திறக்கப்படும் என்பதுடன் கேள்விதாரர் அல்லது அவரது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் இவ்வேளையில் கலந்துகொள்ளலாம்.

06. கேள்வி ஆவணங்களை அலுவலக நேரத்தினுள் இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம். கேள்விகளை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமையை பிராந்திய பெறுகைக் குழு தன்னகத்தே கொண்டுள்ளது.

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**ஆதார வைத்தியசாலை (போதனா),**
**கம்பளை.**




## மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம்

Drive Sri Lanka

### மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்திற்கான கணனி மென்பொருட்கள் மற்றும் அது சார்ந்த துணைப்பாகங்களை கொள்வனவு செய்வதற்கான விலைமனுக் கோரல்

மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்திற்கு தேவையான கீழ்க்காணும் கணனி மென்பொருட்கள் மற்றும் துணைப்பாகங்களை கொள்வனவு செய்வதற்காக குறித்த துறையில் அனுபவமுள்ள நிறுவனங்களில் இருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

1) i. Firewall - Type B-2
ii. Firewall - Type A-1
iii. Fortigate 100F - 1
iv. Fortiweb 100E-1
v. Network Switches -6

2) Fixed Asset Management Software and Supply of 01 No Low end Server Machine

தகைமையுடைய நிறுவனங்கள் எழுத்துமூல வேண்டுதலின் மூலம் ஒரு கேள்விக்காக மீளளிக்கப்படாத ரூபா 3000.00 கேள்விக் கட்டணத்தைச் செலுத்தி 2024.01.16 முதல் 2024.02.08 வரை மு.ப. 10.00 முதல் பி.ப. 3.00 வரை அலுவலக நாட்களில் கணக்குப் பிரிவில் கேள்வி விண்ணப்பங்களை பெற்றுக் கொள்ளலாம். மேலதிக விபரங்களை 011 2674846 தொலைபேசி இலக்கம் மூலம் கணக்காளர் (பெறுகை) இடம் பெற்றுக் கொள்ளலாம்.

முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட பொறியிடப்பட்ட கேள்விப் பத்திரங்கள் மூலப்பிரதி மற்றும் நகல்பிரதிகளை வேறுவேறு உறைகளில் இட்டு 2024.02.09 பி.ப. 2.00 இற்கு அல்லது அதற்கு முன் கிடைக்குமாறு தலைவர், பெறுகைக் குழு, மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம், இல. 341, எல்விட்டிகல மாவத்த, கொழும்பு -05 என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அல்லது பிரதம கணக்காளர் பணிமனையில் உள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம்,**
**இல. 341, எல்விட்டிகல மாவத்த,**
**கொழும்பு -05.**

**விலைமனுக்களுக்கான அழைப்பு**

## பதுளை பிரதேச சபை

### நான்கு (04) கடைகளை குத்தகைக்கு விடல் - 2024

பதுளை மாவட்டத்தின், பதுளை பிரதேச செயலாளர் பிரிவின், பதுளை பிரதேச சபைக்கு சொந்தமான பஸ்ஸர வீதி, 2ஆம் தூண் கிராமிய வர்த்தகத் தொகுதியின் பிரதான வீதிக்கு முகப்பாக உள்ள நான்கு (04) கடைகளை இருபத்து ஐந்து (25) ஆண்டு காலத்திற்காக நீண்டகால குத்தகை அடிப்படையில் பெற்றுக்கொள்வதற்கு விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

- **படிவங்கள் வழங்கல் - 2024.01.22 ஆம் திகதி தொடக்கம் 2024.02.05 ஆம் திகதி பி.ப. 3.00 வரை**
- **ஏற்பது - 2024.02.06 ஆம் திகதி பி.ப. 12.30 வரை**
- **திறப்பது - 2024.02.06 ஆம் திகதி பி.ப. 12.45க்கு**

### அட்டவணை

| கடை இலக்கம் | கடையின் அளவு (சதுர அடி) | 25 ஆண்டுகளுக்காக மீளளிக்கப்படாத குறைந்தபட்ச வைப்புத் தொகை (குறைந்தபட்ச விலைமனு) | வைப்புத் தொகைக்கு உட்பட்ட மாத வாடகை |
|---|---|---|---|
| 01 | 250 | ரூபா 2,250,000.00 (ரூபா இருபத்து இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம்) | ரூபா 2,500.00 (ரூபா இரண்டாயிரத்து ஐந்நூறு) |
| 02 | 320 | ரூபா 2,500,000.00 (ரூபா இருபத்து ஐந்து இலட்சம்) | ரூபா 2,750.00 (ரூபா இரண்டாயிரத்து எழுநூற்று ஐம்பது) |
| 03 | 320 | ரூபா 2,500,000.00 (ரூபா இருபத்து ஐந்து இலட்சம்) | ரூபா 2,750.00 (ரூபா இரண்டாயிரத்து எழுநூற்று ஐம்பது) |
| 04 | 250 | ரூபா 2,250,000.00 (ரூபா இருபத்து இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம்) | ரூபா 2,500.00 (ரூபா இரண்டாயிரத்து ஐந்நூறு) |

- மின்சாரம், குழாய் நீர் மற்றும் கழிப்பறை வசதிகளை கொண்டுள்ளது.
- விலைமனு ஆவணங்களை வழங்கும்போது ரூபா 1,500.00 (ரூபா ஆயிரத்து ஐந்நூறு) மீளளிக்கப்படாத கட்டணம் ஒன்று அறவிடப்படும்.
- விசாரணைக்கு கீழுள்ள தொலைபேசி இலக்கத்தின் மூலம் இணையுங்கள்.
  - சபை செயலாளர் - 0552226273
  - LDSP துறை அதிகாரி – 0778197972

**பெறுகைக் குழு தலைவர்,**
**பிரதேச சபை,**
**பதுளை.**

### கொட்டாஞ்சேனை ஸ்ரீஸ்ரீ ராதாகிருஷ்ண ஆலய

# அயோத்தி ராமர் கோவில் குட முழுக்குக்கு பிரார்த்தனை

கொட்டாஞ்சேனை ஸ்ரீஸ்ரீ ராதாகிருஷ்ண ஆலயத்தில், அயோத்தி ராமர் கோவில் குட முழுக்கு தொடர்பான விசேட பிரார்த்தனை இன்று 16ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முதல் தினமும் மாலை 7.00 மணிக்கு விசேட பிரார்த்தனை (பாராயணம்) நடைபெறும்.

அடியார்கள் இவ்வைபவத்தில் கலந்து கொண்டு ஸ்ரீராமபிரானின் அருளைப் பெற்றுக் கொள்ளுமாறு வேண்டுகோள் விடுக்கிறோம்.

இந்தியாவில் உள்ள ஸ்ரீராம ஜென்ம பூமியான அயோத்தியாவில் பிரம்மாண்டமாக அமைக்கப்பட்டுள்ள வரலாற்று சிறப்பு மிக்க அற்புதமான ஸ்ரீராமர் கோவில் எதிர்வரும் 22ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 12.33க்கு கும்பாபிஷேக விழா காண்கிறது.

உலகெங்கும் அமைதியும், செழிப்பும் ஏற்பட வேண்டும் என்று இந்த மங்களகரமான கும்பாபிஷேக வேளையில் பகவான் ஸ்ரீ ராமச்சந்திரரை வேண்டி பல்வேறு நாடுகளில் பிரார்த்தனைகள் இடம்பெற்று வருகின்றன. இதன் ஓர் அம்சமாகவே கொட்டாஞ்சேனை ஸ்ரீஸ்ரீராதாகிருஷ்ண ஆலயத்திலும் இந்த விசேட பிரார்த்தனை நடைபெறுகிறது.


ප්‍රාදේශීය සංවර්ධන බැංකුව
பிரதேசிய சங்வர்த்தனை வங்கி
RDB Pradeshiya Sanwardhana Bank

## மீட்கப்படாதுள்ள தங்க ஆபரணங்களை பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்தல்

பிரதேச அபிவிருத்தி வங்கியின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள கிளைகள், காரியாலயங்கள் மற்றும் அடகு மத்திய நிலையங்களிலும் 2019.04.01ஆம் திகதிக்கு முன்பாக லங்காபுத்ர அபிவிருத்தி வங்கிக் கிளைகளில் அடகு வைக்கப்பட்ட கீழ் காட்டப்பட்டுள்ள அட்டவணைக்கமைவாக 2024.03.01ஆம் திகதி வரை மீட்கப்படாதுள்ள தங்க ஆபரணங்கள்2024.03.02ஆம் திகதியிலிருந்து கீழ் குறிப்பிடப்பட்டுள்ள மாகாண காரியாலயங்கள், மாவட்டக் காரியாலயங்கள் மற்றும் கிளைகளில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும். அனைத்து ஏலவிற்பனைகளும் மு.ப 09.00 மணிக்கு ஆரம்பமாகும்.

| அடகு பெற்றுக் கொள்ளப்பட்ட இறுதித் திகதி | அடகு கால எல்லை | அடிப்படையாய் அமைந்த திகதி | கடந்துள்ள காலம் |
|---|---|---|---|
| 2022.12.31 | 12 மாதங்களுக்காக அடகு வைக்கப்பட்ட | 2023.12.31 | ஒரு வருட காலம் கடந்த |
| 2023.06.30 | 06 மாதங்களுக்காக அடகு வைக்கப்பட்ட | 2023.12.31 | 06 மாதங்கள் கடந்த |
| 2023.09.30 | 03 மாதங்களுக்காக அடகு வைக்கப்பட்ட | 2023.12.31 | 03 மாதங்கள் கடந்த |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| **மாகாணக் காரியாலயங்கள்** | | | | | | | |
| மத்திய (தொ.பே.இல. 081224115 /6/7) | வடமத்திய (தொ.பே.இல. 0252223080/ 0252225214) | வடமேல் (தொ.பே.இல 0372231880) | சப்ரகமுவ (தொ.பே.இல 0452224566) | ஊவா (தொ.பே.இல 0552223635) | மேல் (தொ.பே.இல 0332248731/ 0332248583) | கிழக்கு (தொ.பே.இல 0652225881) | தென் (தொ.பே.இல 0412226208/9) |
| **மாவட்டக் காரியாலயங்கள்** | | | | | | | |
| கண்டி (தொ.பே.இல 0812214124 0812214115/6/7) | பொலன்னறுவை (தொ.பே.இல 0272223212) | குருநாகல் (தொ.பே.இல 0372268323) | இரத்தினபுரி (தொ.பே.இல 0452230512) | மொனராகலை (தொ.பே.இல 0552273930) | கம்பஹா/ கொழும்பு (தொ.பே.இல 0332234922) | அம்பாறை (தொ.பே.இல 0632223420) | அம்பாந்தோட்டை (தொ.பே.இல 0472240647/8) |
| மாத்தளை (தொ.பே.இல 0552051332/3) | அனுராதபுரம் (தொ.பே.இல 0252223080) | புத்தளம் (தொ.பே.இல 0322223448) | கேகாலை (தொ.பே.இல 0352230333) | பதுளை (தொ.பே.இல 0552224192) | களுத்துறை (தொ.பே.இல 0342264276/ 0342262526) | மட்டக்களப்பு (தொ.பே.இல 0652225845) | மாத்தறை (தொ.பே.இல 0412231585) |
| நுவரெலியா (தொ.பே.இல 0522224552/ 0522222630) | வடக்கு மாவட்டம் (தொ.பே.இல 0212280180) | | | | | | காலி (தொ.பே.இல 0912222458) |

### கிளைகள்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| **மேல் மாகாணம்** | | | | | | | | | |
| அகலவத்தை | அவிசாவளை | பதுரலிய | பேருவளை | புலத்சிங்கள | திவுலபிட்டிய | தொடங்கொட | கம்பஹா | கோணபொல | ஹோமாகமை |
| ஹொரணை | இங்கிரியா | ஜாஎல | களுத்துறை | மீகஹதென்ன | மில்லனிய | மினுவாங் கொடை | மீரிகமை | மிரிஸ்வத்த | மொரகஹஹேன |
| மொரொன்துடுவ | நீர்கொழும்பு | மத்துகமை | மாவரமண்டிய | நிட்டம்புவை | நுகேகொடை | பாணந்துறை | பிலியந்தலை | ராகமை | வாத்துவை |
| வலகெதர | வரக்காகொட | களனி | கிரிந்திவெல | கொலன்னாவை | | | | | |
| **மத்திய மாகாணம்** | | | | | | | | | |
| அக்கரப்பத்தனை | தம்புள்ளை | தன்துரே | தவுலகல | கலேவெல | கம்பளை | கினிகத்தேனை | ஹங்குராங்கெத்த | ஹதரலியத்த | ஹேதெனிய |
| உடுதும்பரை | உடவெல | கண்டி | கண்டி இரண்டாம் நகர் | கட்டுகஸ்தோட்டை | கொட்டகலை | லக்கலை | மெனிக்ஹின்ன | மாரஸ்ஸன | செங்கடகலை |
| மாத்தளை | மொரயாய | வத்தேகமை | வில்கமுவை | நாவுல | நாவலப்பிட்டி | நில்தண்டா ஹின்ன | நுவரெலியா | பேராதனை | பூஜாபிட்டிய |
| பூண்டுலோயா | இரத்தோட்டை | ரிகில்லகஸ்கடை | தெல்தெனியா | | | | | | |
| **வடமத்திய மாகாணம்** | | | | | | | | | |
| அனுராதபுரம் புதிய நகர் | அனுராதபுரம் | அரலகன்வில | பக்கமுன | போகஸ்வெவ | சுன்னாகம் | கல்அமுன | கலென்பிந்துனுவெவ | கோணபத்திராவ | மன்னார் |
| மதவாச்சி | ஹிங்குராங்கொட | யாழ்ப்பாணம் | கதுருவெல | கதுருவெல புதிய நகர் | கஹட்டகஸ் திகிலிய | கனகராயன்குளம் | திரப்பனை | கிளிநொச்சி | மன்னம்பிட்டி |
| மெதிரிகிரியா | மிகிந்தலை | தம்புத்தேகமை நகர் | பொலனருவை | புலஸ்திகமை | ரம்பேவ | செவனபிட்டிய | சிரிபுர | தலாவை | தம்புத்தேகமை |
| வவுனியா | | | | | | | | | |
| **வடமேல்** | | | | | | | | | |
| பண்டுவஸ்நுவர | அலவ்வ | அம்பன்பொல | ஆணைமடு | போவத்தை | சிலாபம் | தும்மலசூரிய | கல்கமுவை | கிரியுல்ல | அத்துகல்புர |
| இப்பாகமுவை | கிரிமெட்டியான | குளியாபிட்டி | குருநாகல் | மஹவெவ | மஹவை | மாம்பூரி | மாவத்தகமை | மெல்சிறிபுர | முந்தல் |
| நாரம்மலை | நாத்தாண்டி | நவகத்தேகமை | நிக்கவெரட்டியா | பாலக்குடா | பன்னலை | பரகஹதெனிய | பெரகும்புர | பொல்பித்திகமை | பொத்துஹர |
| புத்தளம் | ரிதீகமை | புதிய ஆனாபுரம் | வாரியபொலை | கல்பிட்டி | வென்னப்புவை | | | | |
| **சப்ரகமுவ மாகாணம்** | | | | | | | | | |
| அரநாயக்க | பலாங்கொடை | புலத்கொஹுபிட்டி | தெஹியோவிட்ட | தெரனியகலை | தேவாலேகம | எஹலியகொடை | எம்பிலிபிட்டி | எரத்ன | கொடகவெல |
| ஹெம்மாதகமை | கஹவத்தை | கலவானை | கேகாலை | கேகாலை இரண்டாம் நகர் | கிரியெல்ல | கித்துல்கலை | கொலொன்ன | கொட்டியாகும்புர | குருவிட்டை |
| மாவனல்லை | நெலும்தெனிய | நிவித்திகலை | பெல்மதுளை | பிட்டகல்தெனிய | பொத்துபிட்டிய | புலிங்குபிட்டிய | இரக்வானை | ரம்புக்கனை | இரத்தினபுரி |
| ருவன்வெல்லை | ஸ்ரீபலா பத்தலை | வரக்காபொலை | வெலிகேபொல | எட்டியாந்தோட்டை | | | | | |
| **ஊவா மாகாணம்** | | | | | | | | | |
| வெல்லவாய | படல்கும்புர | பதுளை | பண்டாரவளை | பிபிலை | போகஹகும்புரை | புத்தள | தியத்தலாவை | கிராந்துரு கோட்டை | ஹல்தும்முல்லை |
| அப்புத்தளை | கந்தகெட்டியா | லுணுகலை | மடுல்லை | மஹியங்கனை | மாலிகா தென்னை | மெதகமை | மீகஹகிவுல | மொனராகலை | பசறை |
| ரிதீமாலியத்த | செவனகலை | சியம்பலாண்டுவை | தனமல்வில | ஊவா பரணகம | வெலிமடை | | | | |
| **கிழக்கு மாகாணம்** | | | | | | | | | |
| வாழைச்சேனை | அக்கரைப்பற்று | அம்பாறை | தெஹியத்தகண்டி | கல்முனை | சம்மாந்துறை | மகாஓயா | நிந்தவூர் | உஹனை | பொத்துவில் |
| தமனை | மட்டக்களப்பு | மட்டக்களப்பு இரண்டாம் நகர் | செங்கலடி | ஏறாவூர் | களுவாஞ்சிக்குடி | திருகோணமலை | திருகோணமலை இரண்டாம் நகர் | கந்தளாய் | காத்தான்குடி |
| கொக்கட்டிச்சோலை | மூதூர் | | | | | | | | |
| **தென் மாகாணம்** | | | | | | | | | |
| அஹங்கமை | அங்குனு கொலபெலஸ்ஸ | அக்மீமன | அக்குரெஸ்ஸ | அம்பலாந் தோட்டை | பத்தேகமை | பலபிட்டி | பரவாகும்புர | பட்டபொல | பெலியத்த |
| மாத்தறை நகர் | தெய்யன்தர | தெனியாய | தெவிநுவர | திக்வெல்ல | எல்பிட்டி | காலி | கந்தரை | கோணகல்புர | ஹக்மனை |
| அம்பாந்தோட்டை | அம்பாந்தோட்டை இரண்டாம் நகர் | ஹிக்கடுவை | இமதூவ | கெக்கனதுர | களுவெல்ல | கம்புருகமுவ | கம்புருபிட்டி | கரந்தெனிய | கராபிட்டி |
| கட்டுவன | கிரிந்த | லுனுகம்வெஹெர | மாவரல | மித்தெனிய | மிரிஸ்ஸ | மொரவக்க | நெலுவ | பம்புரன | பிட்டபெத்தர |
| பிட்டிகல | ரத்ன | சூரியவெவ | தங்காலை | தல்கஸ்வெல | திஸ்ஸ மஹாராமை | திஹகொட | உடுகம | ஊரகஸ்மங் ஹன்திய | ஊருபொக்க |
| வலஸ்முல்லை | வராபிட்டி | வீரகெட்டிய | வெலிகமை | யக்கலமுல்ல | | | | | |

**குறிப்புகள்**

லங்காபுத்ர அபிவிருத்தி வங்கிக்குரிய இக்கிளைகள் கீழ் குறிப்பிடப்பட்டவாறு ஒன்றிணைக்கப்பட்டுள்ளன.

**அம்பாந்தோட்டை இரண்டாம் கிளை - அம்பாந்தோட்டை கிளையுடன் ஒன்றிணைக்கப்பட்டுள்ளது**
**கதுருவெல இரண்டாம் கிளை - கதுருவெல கிளையுடன் ஒன்றிணைக்கப்பட்டுள்ளது**
**கேகாலை இரண்டாம் கிளை - கேகாலை கிளையுடன் ஒன்றிணைக்கப்பட்டுள்ளது**
**திருகோணமலை இரண்டாம் கிளை - திருகோணமலை கிளையுடன் ஒன்றிணைக்கப்பட்டுள்ளது**

ஏல விற்பனையை பிற்போடுதல் அல்லது ஒன்றிணைத்துச் செய்யும் அல்லது இரத்துச் செய்யும் அதிகாரம் வங்கிக்குரியதாகும்.

**பிரிவுத் தலைவர் கடன் அறவீடு**
**பிரதேச அபிவிருத்தி வங்கி**
**பிரதான காரியாலயம்**
**இலக்கம் 933,**
**வெதமுல்லை, களனி**

**2024.01.16**


## பசியை போக்க பாக்கு பறித்தவர் மரத்திலிருந்து தவறி விழுந்து பலி

கடுகண்ணாவை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிரதேசமொன்றில் மரத்திலிருந்து தவறி விழுந்து நபரொருவர் உயிரிழந்துள்ளார்.

இரண்டு நாட்களாக எவ்விதமான உணவும் உட்கொள்ளாது பட்டினியால் வாடிய நபரொருவர், மற்றொருவருக்குச் சொந்தமான பாக்கு மரத்திலேறி, பாக்கு திருட முற்பட்ட போதே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

நாவுல்ல பிரதேசத்தைச் சேர்ந்த மாரிமுத்து மனோகரன் (வயது 30) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். இவர், திருமணமாகாதவர் என்பது விசாரணைகளின் ஊடாக தெரியவந்துள்ளது.

நாவுல்ல பிரதேசத்திலுள்ள காணியொன்றுக்குள் சட்டவிரோதமாக நுழைந்து. பாக்கு மரத்தில் ஏறிகொண்டிருந்த போதே கீழே வீழ்ந்து உயிரிழந்துள்ளதாக விசாரணைகளின் ஊடாக கண்டறியப்பட்டுள்ளது. சடலம் பிரேத பரிசோதனைக்காக, கண்டி தேசிய வைத்தியசாலைக்கு கொண்டுச்செல்லப்பட்டது.

கண்டி தேசிய வைத்தியசாலையின் நிபுணர் சட்ட வைத்தியர் ஏ.பி. ஜெயசூரிய சடலத்தின் தடயவியல் பரிசோதனையின் போது உயிரிழந்தவர் இரண்டு நாட்களாக உணவு உண்ணவில்லை என தெரியவந்துள்ளது.

## இறப்பர் பட்டி கழுத்தில் இறுகி சிறுவன் பலி

*(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)*

கலவான பொதுபிட்டியா பிரதேசத்தில் ஒன்பது வயதுடைய சிறுவனொருவனின் கழுத்தில் இறப்பர் பட்டி இறுகியமையால் பரிதாபகரமான முறையில் உயிரிழந்துள்ளதாக தெரியவருகின்றது. இரும்புக் கம்பியொன்றில் இறப்பர் பட்டியொன்றை சுற்றி அதனை மிக வேகமாக சுழற்றி விளையாடிக்கொண்டிருக்கையிலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. இரும்புக் கம்பி தலையில் பலமாகப்பட்டுள்ளதுடன் இறப்பர் பட்டியும் கழுத்தை இறுகியமையால் மரணம் ஏற்பட்டுள்ளதாக தெரியவருகின்றது.

## பதுளைக்கு பயணித்த பஸ்சில் தீ விபத்து

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் பெலியத்த நுழைவாயிலுக்கு அருகில் இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பஸ் ஒன்று தீப்பிடித்து எரிந்துள்ளது.

தீப்பற்றி எரிந்த பஸ்சில் இருந்தவர்கள் அனைவரும் அதிலிருந்து வெளியேற்றப்பட்டனர். இதனால் பயணிகள் யாருக்கும் காயம் ஏற்படவில்லை.

பஸ் முற்றாக தீப்பிடித்து எரிந்ததுடன் பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் தீயை அணைக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

இதன்காரணமாக பெலியத்த நுழைவாயிலிலிருந்து சகல நுழைவாயில் வரையான நெடுஞ்சாலைப் பகுதி மூடப்பட்டுள்ளது.

கொழும்பிலிருந்து பதுளையை நோக்கி பயணித்த அதிசொகுசு பஸ் ஒன்றே இவ்வாறு தீப்பிடித்து எரிந்துள்ளது

## மீன்பிடியில் ஈடுபட்ட இளைஞன் நீரில் மூழ்கி காணாமல் போயுள்ளார்

**புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்**

ஒந்தாச்சிமட ஆற்றுப்பகுதியில் மீன்பிடியில் ஈடுபட்ட இளைஞனொருவன் நீரில் மூழ்கி காணாமல் போயுள்ளார்.

இளைஞனும் அவரது தந்தையும் சனிக்கிழமை (13) காலை ஒந்தாச்சிமட ஆற்றில் மீன்பிடித்தனர்.

இதன்போது அவரது தந்தை நீரில் மூழ்கியதையடுத்து அவரை காப்பாற்ற முயன்ற இளைஞன் நீரில் இழுத்துச் செல்லப்பட்டதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

காணாமல் போன இளைஞன் கிழக்கு பல்கலைக்கழக விஞ்ஞானப்பீடத்தில் இறுதியாண்டில் கல்வி பயிலும் 25 வயதுடைய மாணவன் என தெரியவருகின்றது.

இந்நிலையில், காணாமல்போன இளைஞனை தேடும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# சப்ரகமுவ மாகாணத்தில் STEM உயர்கல்வி நிலையத்தை ஆரம்பிக்க நடவடிக்கை



**(காவத்தை தினகரன் விசேட நிருபர்)**

இந்தியா அரசாங்கமும் சப்ரகமுவ மாகாண சபையும் இணைந்து 800 மில்லியன் ரூபா செலவில் STEM உயர்கல்வி நிலையத்தை உடனடியாக ஆரம்பிக்கவுள்ளதாக சப்ரகமுவ மாகாண ஆளுநர் சிரேஷ்ட சட்டத்தரணி நவீன் திசாநாயக்க தெரிவித்தார்.

வரக்காபொல அல்கம ஆரம்ப பாடசாலையில் அண்மையில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

கல்வியும் விளையாட்டும் முதன்மை வகிக்கின்றன. அதற்கு அர்ப்பணிப்புடன் செயலாற்ற வேண்டும்.

அறிவியல், தொழில்நுட்பம், பொறியியல் மற்றும் கணிதம் ஆகியவை நவீன கல்வியின் கருத்துக்கள் எனலாம்.

சப்ரகமுவ மாகாணத்தில் ஏழைக் குழந்தைகளுக்கு STEM கல்வியை வழங்குவதே இதன் நோக்கமாகும். அதற்காக 600 மில்லியன் ரூபாவைப் பயன்படுத்த இந்தியா ஒத்துக் கொண்டுள்ளது.


அரசாங்கத்தின் பூரண அங்கீகாரத்துடன் நடைமுறைப்படுத்தப்படும் இந்த STEM கல்வி மையத்திற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கோரிக்கை விடுத்துள்ளோம். அதற்காக இரண்டு மில்லியன் ரூபா நிதியைப் பெற்றுக் கொள்ள எதிர்பார்ப்பதாக அவர் தெரிவித்தார்.



வத்தேகம கல்வி வலயத்துக்குட்பட்ட உலுகங்க முஸ்லிம் வித்தியாலயத்தின் வருடாந்த பரிசளிப்பு விழா வித்தியாலய அதிபர் எம்.ரிஸ்வான் தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ கமகே கலந்து கொண்டு மாணவியொருவருக்கு சான்றிதழ், பரிசில்கள் வழங்கி வைக்கப்படுவதை படத்தில் காணலாம். (படம்; மாத்தளை சுழற்சி நிருபர்)


## சிறு விளம்பரம்

மோட்டார் வாகனங்கள்




118 ஜீப்புகள், பிக்கப்புகள் விற்பனைக்கு

KC-2010 Mitsubishi Montero 2004. அதியுயர் விலைக்கு வெலிபெல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310 காலி வீதி, கொழும்பு 3 தொலைபேசி 0714 542958. 003515


PE-6414 Mahindra genio, 2014 cab. அதியுயர் விலைக்கு வெலிபெல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310 காலி வீதி, கொழும்பு 3 தொலைபேசி 0714 542958. 003531

LN-557 9 Mitsubishi fu so 2013 lorry. அதியுயர் விலைக்கு வெலிபெல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310 காலி வீதி, கொழும்பு 3 தொலைபேசி 0714 542958. 003512



106 கார்கள் விற்பனைக்கு

KU-9852 Micro trend 2012 car. அதியுயர் விலைக்கு வெலிபெல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310 காலி வீதி, கொழும்பு 3 தொலைபேசி 0 714 542958. 003608



117 வேன்கள் விற்பனைக்கு


PD-4006 Micro 2007 van. அதியுயர் விலைக்கு வெலிபெல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310 காலி வீதி, கொழும்பு 3 தொலைபேசி 0 714 542958. 003522



119 பஸ்கள், லொறிகள் விற்பனைக்கு

LK-8438 Tata 1615 2011. அதியுயர் விலைக்கு வெலிபெல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310 காலி வீதி, கொழும்பு 3 தொலைபேசி 0714 542958. 003519

LL - 1310 Ashok Leyland 2010, Lorry அதியுயர் விலைக்கு வெலிபெல் பினான்ஸ் பிஎல்சி. இல.310, காலி வீதி, கொழும்பு 03, தொலை பேசி 0711 210810 003507



122 மோட்டார் சைக்கிள், திரீவீலர்கள் விற்பனைக்கு

QD-1049 Bajaj 2005, QQ-2637 Bajaj 2008, AAF-6756 Bajaj 2012, YA-1463 Bajaj 20 10 threewheel. அதியுயர் விலைக்கு வெலிபெல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310 காலி வீதி, கொழும்பு 3 தொலை பேசி 070 5999163. 003525

QQ -6144 Bajaj 2008, QG -5748 Bajaj 2006, QX-1379 Bajaj 2010, QH-1632 Bajaj 2006 threewheel. அதியுயர் விலைக்கு வெலிபெல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310 காலி வீதி, கொழும்பு 3 தொலைபேசி 0714 542958. 003527

## afc தங்கக் கடன் சேவை
## தங்க நகை ஏல விற்பனை

அலையன்ஸ் .·.பைனான்ஸ் நிறுவனத்தின் பின்வரும் கிளைகளில், அடமானம் வைக்கப்பட்டுள்ள 31.10.2023 அன்று முதிர்ச்சியடைந்த இதுவரை மீட்கப்படாத தங்கப் பொருட்கள், பின்வரும் தேதிகளில் காலை 09:30 முதல் கீழ்க்கண்ட இடங்களில் பொது ஏலம் மூலம் விற்கப்படும்.

**தங்கக் கடன் சேவை நிலையங்கள்**

| தேதி | கிளை | இடம் |
|---|---|---|
| 23-01-2024 | சங்கானை, சாவகச்சேரி, சுன்னாகம், யாழ்ப்பாணம், யாழ்ப்பாணம் நகரக் கிளை, மன்னார், பருத்தித்துறை, திருநெல்வேலி, குருமன்காடு, முழங்காவில்,வவுனியா,அக்குரஸ்ஸ, அளுத்கம, அம்பலாங்கொட,அம்பலாந்தோட்டை, அம்பாறை, அனுராதபுரம்,அதுருகிரிய, அவிசாவளை, பதுளை மட்டக்களப்பு, சிலாபம், தம்புள்ளை தெஹியத்தகண்டிய, தெனியாய, எம்பிலிபிட்டிய கலேவெல, கல்கமுவ, காலி, கம்பஹா கம்பளை, கனேமுல்ல, ஹட்டன் ஹிங்குராக்கொட, ஹோமாகம, ஜா-எல கடவத்தை, கதுருவெல, கல்பிட்டிய களுத்துறை, களுவாஞ்சிக்குடி, கேகாலை களனி, கிளிநொச்சி, கிரிபத்கொட கொஹுவல, குளியாப்பிட்டிய குருநாகல், மஹரகம மஹியங்கனை, மாலபே, மாத்தறை மதவாச்சி, மொனராகலை, நீர்கொழும்பு, நிக்கவெரட்டிய, நிட்டம்புவ நுவரெலியா, பாணந்துறை, பராக்கிரமபுர பசறை, பிலியந்தலை, பூகொட புதுக்குடியிருப்பு, புத்தளம், ராகலை இரத்தினபுரி, ரிகில்லகஸ்கட தலவாக்கலை, திருகோணமலை, திருகோணமலை-2 உடப்புவ, வார்டு இடம் வெலிமடை, வெல்லவாய, வென்னப்புவ, கிரிந்திவெல,மாத்தளை,நாவலப்பிட்டி,பலாங்கொடை பொரளை சூப்பர் கிளை,ஹொரணை கடுவெல | 722, கோட்டே வீதி, ராஜகிரிய. |

ஏலத்தில் பங்கேற்கும் அனைவரும் தங்களின் தேசிய அடையாள அட்டையை கொண்டு வர வேண்டும் மற்றும் நிறுவனத்தின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு இருக்க வேண்டும் எலாயன்ஸ் .·.பினான்ஸ் கோ. பி.எல்.சி க்கு எந்தவித அறிவிப்பும் இல்லாமல் ஏலங்களை ரத்து செய்ய, ஒத்திவைக்க அல்லது ஒன்றினைக்க உரிமை உள்ளது.

65 1956 இல் இருந்து
எலாயன்ஸ் பினான்ஸ் கம்பனி பி.எல்.சி
செளபாக்கியத்திற்கோர் நம்பிக்கையான அடித்தளம்

அடகுச் சேவைத் தலைவர்
எலாயன்ஸ் பினான்ஸ் பி.எல்.சீ
722, கோட்டை வீதி இராஜகிரிய
தொலை : 0115 573600

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## தேசிய உப்பு நிறுவனம் (NSL)

தேசிய உப்பு நிறுவனம் நிதி, பொருளாதார நிலைப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு எல்லையின் கீழ் இயங்கும் ஓர் அரசுரிமைக் கம்பனியாகும்.

கீழ்க்காணும் வழங்கல்களுக்காக விலைமனுக்களை பெறுகைக் குழுவின் தலைவர் அழைக்கின்றார்.

அ) வேலைக்கான மெசீன்களை வாடகைக்கு விடுதல்

| வகை | தேவைப்படும் மொத்த வேலை மணிநேரம் | வேலை அமைவிடம் |
|---|---|---|
| Backhoe E-120 | 1000 | ஆனையிறவு உப்பளம் - கிளிநொச்சி |
| Dozer D4D | 1000 | ஆனையிறவு உப்பளம் - கிளிநொச்சி |
| இயந்திரங்கள் சாரதி மற்றும் எரிபொருளுடன் வழங்கப்படல் வேண்டும். ஒரு மணித்தியாலத்திற்கான வாடகை குறிப்பிடப்படல் வேண்டும். விலைமனுப் பிணை ரூ. 180.000.00 | | |

அ) சரளைக் கற்களின் வழங்கல்

| அம்சம் | அளவு - கியுப்பில் | ஒப்படைக்கும் அமைவிடம் |
|---|---|---|
| சரளைக்கல் அளவு 6"X9" | 1500 | யானையிறவு உப்பளம் - கிளிநொச்சி |
| விலைமனுப்பினை 225,000.00 ரூபா | | |

விலைமனு ஆவணங்களைப் பெற்றுக் கொள்ளல்:

ஒவ்வொரு பிரிவு/வழங்கலுக்காக மீளளிக்கப்படாத கட்டணமாக ரூ. 2000.00ஐ செலுத்துவதன் பேரில் வார நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை கீழேயுள்ள முகவரியில் விலைமனு ஆவணங்களைப் பெற்றுக் கொள்ளலாம். விலைமனு தரவுப் பத்திரத்தில் குறிப்பிட்டுள்ளவாறு விலைமனுப் பிணையை விலைமனு ஆவணங்களுடன் இணைத்தல் வேண்டும்.

தயவு செய்து உங்களது பொறியிடப்பட்ட விலைமனுக்களை 2024 ஜனவரி 30 பி.ப. 3.00 மணிக்கு அல்லது அதற்கு முன் கீழே குறிப்பிடப்படும் முகவரியை அடையுமாறு அனுப்பி வையுங்கள் அல்லது கீழே குறிப்பிடப்படும் முகவரியில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் வைப்பிலிடுங்கள்.

தயவு செய்து கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விலைமனு தலைப்பை குறிப்பிட்டு அதனை கீழேயுள்ள முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

பெறுகைக் குழுவானது எந்தக் காரணமும் கூறாமலேயே ஒன்று அல்லது எல்லா விலைமனுக்களையும் நிராகரிக்கும் உரிமையை கொண்டிருக்கும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**தேசிய உப்பு நிறுவனம்,**
**இல. 561/3, எல்விட்டிகல மாவத்த,**
**கொழும்பு -05.**

**தொ.பே. - 011 2368964**
**பெக்ஸ் - 011 2368974**

**இலங்கை ஜேர்மன் தொழில்நுட்பப் பயிற்சி நிறுவனம்**
**(கல்வி அமைச்சு – திறன் அபிவிருத்தி, தொழில் கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கப் பிரிவு)**

# வழங்குநர்களை பதிவு செய்தல்

2024 ஆம் ஆண்டுக்கு எமது நிறுவனத்தில் கீழ் குறிப்பிடப்பட்ட பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்கு வழங்குநர்களை பதிவு செய்வதற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| வழங்கும் உருப்படி இலக்கம் | உருப்படியின் பெயர் |
|---|---|
| 01 | அனைத்து வாகன உதிரிப்பாகங்களை வழங்கல், (பெட்டரி, வாகன மின்சாரம், உராய்வுநீக்குமெண்ணெய் மற்றும் ஏனைய உதிரிப்பாகங்கள்) இயந்திர உதிரிப்பாகங்கள் வழங்கல். |
| 02 | இயந்திரம், பயிற்சி உபகரணம் மற்றும் பயிற்சிப் பொருட்கள் வழங்கல். |
| 03 | மின் உபகரண பொருட்கள் வழங்கல். |
| 04 | தொலைபேசி மற்றும் இன்டர்கொம் கட்டமைப்பு. |
| 05 | பாதுகாப்பு உபகரணங்கள் வழங்கல் மற்றும் பராமரிப்பு. |
| 06 | கணினி மற்றும் ஏனைய அதுசார்ந்த உபகரணங்களை வழங்கல். |
| 07 | அனைத்து அலுவலக மற்றும் பொது எழுது பொருட்களை வழங்கல். |
| 08 | புதிய டயர்கள், டியூப்கள் மற்றும் பட்டி வழங்கல். |
| 09 | டயர் மீள் நிரப்பல். |
| 10 | அச்சு செயற்பாடுகள். |
| 11 | சீருடை, விளையாட்டு உடை மற்றும் திரைச்சீலை, பாதணிகள் வழங்கல், விளையாட்டுப் பொருட்களை வழங்கல். |
| 12 | டோனர் வழங்குதல் |
| 13 | கட்டிடப் பொருட்களை வழங்கல். (இரும்பு மற்றும் ஏனைய பொருட்கள்) |
| 14 | கட்டிட சீரமைப்பு, புனரமைப்பு செயற்பாடு மற்றும் உள்ளக சீரமைப்பு, அலுமினிய வேலை. |
| 15 | நூலக புத்தகம் வழங்கல். |
| 16 | தொழில்துறை வாயுக்கள் (ஒட்சிசன், அசிடிலீன், ஆர்கன், காபனீரொட்சைட்டு) வழங்கல். |
| 17 | வாகன வண்ணப்பூச்சு மற்றும் மற்றைய வண்ணப்பூச்சு வகைகளை வழங்கல். |
| 18 | குளிர்சாதனப்பெட்டி மற்றும் வளிச்சீராக்கி உதிரிப்பாகங்கள் மற்றும் உபகரணங்களை வழங்கல். |
| 19 | பற்றாசு குச்சி மற்றும் பிளக்ஸ் வகைகள் வழங்கல். |
| 20 | அலுவலக மரச் சாமான் உபகரணங்கள், வகுப்பறை உபகரணங்கள் வழங்கல் |
| 21 | அலுவலக உபகரணங்கள் திருத்தவேலை. |
| 22 | கிருமிநாசினி திரவங்கள், கையுறை வழங்கல். |
| 23 | சுத்தம் செய்தல் மற்றும் துப்புரவேற்பாட்டு செயற்பாடுகள். |
| 24 | தீயணைப்பு உபகரணங்கள் மற்றும் பராமரிப்பு செயற்பாடு. |

பதிவு செய்வதற்கு இந்த அலுவலகத்தில் இருந்து பெற்றுக்கொண்ட குறித்த படிவங்கள் மூலம் மாத்திரம் விண்ணப்பிக்க வேண்டும் என்பதோடு குறித்த படிவத்தை ரூபா 1000.00 தொகையை செலுத்தி பெற்றுக்கொள்ள முடியும். பணம் செலுத்திய பின் கிடைக்கின்ற பற்றுச்சீட்டை விண்ணப்பத்துடன் இணைத்து சமர்ப்பித்தல் வேண்டும். ஒரு விண்ணப்பப் படிவத்தை பயன்படுத்த முடிவது ஒரு உருப்படிக்கு மாத்திரமாகும். விண்ணப்பங்களை ஏற்கும் இறுதித் திகதி 2024 பெப்ரவரி 07 அன்று என்பதோடு பி.ப. 2.00க்கு முன்னர் கிடைக்குமாறு பதிவுத் தபாலில் கீழ் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு அனுப்புவதற்கு அல்லது எமது நிறுவனத்தில் கணக்குப் பிரிவில் விலைக்கேட்புப் பெட்டிக்கு இடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ''வழங்குநர்களை பதிவு செய்தல் - 2024'' என்று குறிப்பிடுதல் வேண்டும்.

**பணிப்பாளர்/ அதிபர்**
**இ.ஜே.தொ.ப.நி.**
**இல. 582, காலி வீதி**
**கல்கிசை**

**தொலைபேசி:- 0112605625/ 0112605535**

**கல்வி அமைச்சு**
**திறன் அபிவிருத்தி,**
**தொழிற் கல்வி, ஆராய்ச்சி**
**மற்றும் புத்தாக்கல் பிரிவு**

**இலங்கை – ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவனம்**

# வெற்றிடங்கள்

கல்வி அமைச்சின் திறன் அபிவிருத்தி, தொழிற் கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கல் பிரிவின் கீழ் உள்ள இலங்கை - ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவனத்தினால் வெற்றிடமாகவுள்ள பின்வரும் பதவிகளுக்கு நிரந்தர அடிப்படையில் ஆட்சேர்ப்பதற்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

## 01. போதனாசிரியர் - தமிழ் மொழி மூலம் - (MA 2-2)

**தொழில் சார்ந்தது**

அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் மோட்டார் வாகன பொறிமுறை / மெக்காட்ரோனிக் / மில்றைட் / மின் வலு / வளிச்சீராக்கம் மற்றும் குளிர்சாதனம் / பொறிமுறை / வாகன மின்னியல் / டீசல் பம்ப் / உருக்கியொட்டுதல் / மோட்டார் வாகன பொடி திருத்தவேலைகள் மற்றும் நிறப்பூச்சு பூசுதல் போன்ற துறை அல்லது இல.ஜே.தொ. நிறுவனத்திற்கு இயைபான ஏனைய துறைகளில் NVQ 5 மட்டத்திற்குக் குறையாத டிப்ளோமா கற்கை நெறியொன்றை வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல் அத்துடன் இல.ஜே.தொ. நிறுவனத்தில் முழு நேர கற்கை நெறியொன்றை கற்று வகுப்பு சித்தியைப் பெற்றிருத்தல் (முதலாம் வகுப்பு அல்லது இரண்டாம் வகுப்பு)

**அல்லது**

இலங்கை - ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவனத்தில் மோட்டார் வாகன பொறிமுறை / மெக்காட்ரோனிக் / மில்றைட் / மின் வலு / வளிச்சீராக்கம் மற்றும் குளிர்சாதனம் /பொறிமுறை / வாகன மின்னியல் / டீசல் பம்ப் / உருக்கியொட்டுதல் / மோட்டார் வாகன பொடி திருத்தவேலைகள் மற்றும் நிறப்பூச்சு பூசுதல் போன்ற துறைகளுக்கு இயைபாக 04, 3 1/2 அல்லது 03 வருட முழு நேர கற்றை நெறியைக் கற்று (முதலாம் வகுப்பு அல்லது இரண்டாம் வகுப்பு) வகுப்புச் சித்தியைப் பெற்றிருத்தல் மற்றும் கைத்தொழிலில் மூன்று (03) வருட கால அனுபவம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் குறித்த பாடங்களைக் கற்பித்தல் தொடர்பில் குறைந்தபட்சம் 03 வருட கால அனுபவத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.

**சம்பள அளவு -**
முகாமைத்துவச் சேவை 02/2016ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் பிரகாரம், MA 2-2 – ரூபா 30,310 - 300x10-350x07-600x04-710x20 – 52,360/- (இதற்கு மேலதிகமாக அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட வாழ்க்கைச் செலவுப் படிக்கான உரிமைத்துவமும் கிடைக்கும்)

ஆட்சேர்க்கப்படும் முறை: எழுத்துமூலமான போட்டிப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் மற்றும் / அல்லது கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையின் மூலம்

**வயதெல்லை -**
விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளில் 18 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.

## 02. வைத்திய நிலைய உதவியாளர் - (MA 2-1)

**தகைமை:**

**வெளிவாரி -**
க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் விஞ்ஞானப் பாடப்பரப்பில் பழைய பாடத்திட்டத்தின் கீழ் நான்கு பாடங்களில் அல்லது புதிய பாடத்திட்டத்தின் கீழ் மூன்று பாடங்களில் சித்தி சகிதம் இயைபுடைய துறை தொடர்பில் சிறந்த அறிவாற்றல் இருத்தல் மற்றும் முதலுதவி செயற்பாடுகள் தொடர்பில் அனுபவம் இருத்தல் வேண்டும்.

**உள்வாரி -**
க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் இரண்டுக்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம் / தமிழ் மொழி மற்றும் கணிதப் பாடத்தில் திறமைச் சித்தியுடன் ஆறு பாடங்களில் சித்தியடைந்து தற்போது ஆரம்ப தேர்ச்சியற்ற (PL 1) மற்றும் ஆரம்ப - தேர்ச்சிபெற்ற (PL 3) சம்பள வகுதியில் இருப்பவர்கள் இதற்காக விண்ணப்பிக்கலாம்.

**சம்பள அளவு -**
முகாமைத்துவச் சேவை 02/2016ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் பிரகாரம், MA 1-2 – ரூபா 27,910 - 300x10-350x07-600x12-710x12 – 49,080/- (இதற்கு மேலதிகமாக அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட வாழ்க்கைச் செலவுப் படிக்கான உரிமைத்துவமும் கிடைக்கும்)

**ஆட்சேர்க்கப்படும் முறை -**
எழுத்துமூலமான போட்டிப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் மற்றும் / அல்லது கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையின் மூலம்

**வயதெல்லை -**
விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளில் 18 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.

**சகல பதவிகளுக்குமான நிபந்தனைகள்-**

- சகல விண்ணப்பதாரர்களும் இலங்கைப் பிரஜைகளாகவிருத்தல் வேண்டும்.
- உள மற்றும் உடல் ரீதியாக நாட்டின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றும் தகுதியைக் கொண்டிருத்தல் வேண்டும்.
- சிறந்த நன்னடத்தையுடையவராக இருத்தல் வேண்டும்.
- மேற்கூறப்பட்ட பதவிகளுக்கு ஆட்சேர்க்கப்படும் வெளிவாரி விண்ணப்பதாரிகள் 03 வருட தகுதிகாண் காலத்தைப் பூர்த்தி செய்தல் வேண்டும். அவா;/ அவள் அந்தக் காலப்பகுதியின் இறுதியில் காட்டும் திருப்திகரமான வினைத்திறன் மற்றும் நடத்தையின் பிரகாரம் பதவியில் நிரந்தரமாக்கப்படுவார். தற்போது பதவியில் நிரந்தரமாக்கப்பட்டுள்ள உள்வாரி விண்ணப்பதாரர்கள் 01 வருட கால பதில் கடமை காலத்திற்கு உட்படுத்தப்படுவர்.
- மேற்கூறிய பதவிகளுக்கு ஆட்சேர்த்தல் இயைபுடைய பதவிகளின் ஆரம்ப சம்பள நிலையிலாகும்.
- ஊழியர் சேமலாப நிதிக்கு சம்பளத்தில் 8% அறவிடப்படும் என்பதுடன் நிறுவனத்தினால் 12% மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு 3% பங்களிப்புச் செய்யப்படும்.

**விண்ணப்பதாரர்கள் பின்வரும் ஆவணங்களின் புகைப்படப் பிரதியை சுய விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.**

(அ) பிறப்பத்தாட்சிப் பத்திரம்
(ஆ) கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகளை உறுதி செய்வதற்கான சான்றிதழ்
(இ) சேவை அனுபவம் தொடர்பான சான்றிதழ்
(ஈ) தேசிய அடையாள அட்டை

தற்போது அரசாங்க கூட்டுத்தாபனம், நியாயாதிக்க சபை மற்றும் திணைக்களங்களில் சேவையாற்றுபவர்கள் தமது நிறுவனத் தலைவரின் ஊடாக விண்ணப்பப் படிவங்களை அனுப்புதல் வேண்டும் என்பதுடன் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவள்/அவரை சேவையிலிருந்து விடுவிக்க முடியும் என நிறுவனத் தலைவரினால் உறுதிப்படுத்துதல் வேண்டும். உறவினரல்லாத உங்களைப் பற்றி விசாரிக்கக்கூடிய இருவரின் முழுமையான விபரங்கள் சகிதமான விண்ணப்பங்களை தங்களாலேயே சான்றுபடுத்திய சான்றிதழ்களுடன் 2024-01-30ஆம் திகதிக்கு முன் முகாமையாளர், நிர்வாகம் மற்றும் மனித வளம், இலங்கை ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவனம், இல. 582, காலி வீதி, கல்கிசை எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் மற்றும் நிறுவனம் / நிலையம் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும் என்பதுடன் குறும் பட்டியலிடப்பட்ட விண்ணப்பதாரர்கள் மட்டும் நேர்முகத் தேர்விற்காக அழைக்கப்படுவர். இறுதித் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பப் படிவங்கள் கவனத்திற் கொள்ளப்பட மாட்டாது.

ஆட்சேர்ப்பதற்கு எந்த விதத்திலாவது ஆதரவு தேடுதல் ஆட்சேர்ப்பதற்கான தகைமையீனமாகலாம்.

**பணிப்பாளர் - அதிபர்,**
**இலங்கை ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவனம்,**
**இல. 582, காலி வீதி,**
**கல்கிசை.**

## பெறுகை அறிவித்தல்

## 2024/2025 ஆண்டுக்கான சுத்திகரிப்புச் சேவைக்கான விலைமனுக் கோரல்

வடக்கு மாகாண மகளிர் விவகார அமைச்சுக்கும் அமைச்சுக்குட்பட்ட திணைக்களங்களின் காரியாலயங்களுக்கான **2024 ஆம் ஆண்டு மார்ச் 01 தொடக்கம் 2025 ஆம் ஆண்டு பெப்ரவரி 28** வரையான காலப்பகுதிக்கு ஐந்து மாவட்டங்களிலும் 23 திணைக்களங்களுக்கு சுத்திகரிப்புச் சேவை (Cleaning Service) வழங்குவதற்கான பெறுகை ஆவணங்களை வடக்கு மாகாண மகளிர் விவகார அமைச்சு இல. 04, புரூடி லேன், அரியாலை, யாழ்ப்பாணம் அலுவலகத்தில் **16.01.2024 தொடக்கம் 05.02.2024** ஆம் திகதி வரை அலுவலக நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணிவரை மீளளிக்கப்படாத வைப்புப்பணமாக ரூபா. 1000.00 ஐ காசாக செலுத்தி பெறுகை ஆவணங்களை பெற்றுக்கொள்ளலாம்.

**திரு.பொ.வாகீசன்,**
**தலைவர்,**
**மாகாண அமைச்சு பெறுகைக்குழு,**
**மகளிர் விவகார அமைச்சு, வடக்கு மாகாணம்,**
**04, புரூடி லேன் அரியாலை,**
**யாழ்ப்பாணம்**
**தொலைபேசி இலக்கம் : 021-2220882**

## பெயர் மாற்றத்திற்கான அறிவித்தல்

2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2)ஆம் பிரிவின் விதிகளின் கீழ் அறிவித்தல் விடுக்கப்படுகின்றது

கம்பனியின் பழைய பெயர்:
**கல்.:.ப் சினர்ஜி லங்கா (பிரைவட்) லிமிட்டட்**

கம்பனி இல: PV**74927**

கம்பனியின் பதிவு முகவரி :
**இல. 273/5, வொக்சோல் வீதி, கொழும்பு -02**

கம்பனியின் புதிய பெயர்:
**இன்டர் ஓஷன் ஷிப் மெனேஜ்மென்ட் (பிரைவட்) லிமிட்டட்**

**சபையின் கட்டளைப் பிரகாரம்:**
**ராமநாயக்க தோன சாவனி வாசனா**
**கம்பனி செயலாளர்**

## கம்பனியொன்றின் பெயர் மாற்றம் தொடர்பான பொது அறிவித்தல்

2023 டிசம்பர் 4 ஆம் திகதியன்று கீழே குறிப்பிட்டுள்ள வரையறுக்கப்பட்ட தனியார் பொறுப்புள்ள கம்பனியானது அதனது பெயரை மாற்றியுள்ளதென 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்ட 9(2) ஆம் பிரிவின் பிரகாரம் அறிவித்தல் வழங்கப்படுகின்றது.

கம்பனியின் முன்னைய பெயர்: **அம்ப் கன்சல்டன்ட்ஸ் (பீவிடீ) எல்டீடி**

கம்பனி இலக்கம் : **PV 00209886**

பதிவு அலுவலகத்தின் முகவரி : **38/10, சுப்ரீம் சிட்டி, ஜயவீரகொட, ஹங்வெல்ல**

கம்பனியின் புதிய பெயர் : **சிலோன் வெக்கேஷன் டுவர்ஸ் (பிரைவட்) லிமிட்டட்**

**பஸ்நாயக்க முதியான்செலாகே உதய தேஷபிரிய பஸ்நாயக்க**
**செயலாளர்கள்,**
**எலமல்கெட்டிய, அளுத்வெல தெற்கு, தியத்தலாவ.**

## கம்பனியொன்றின் பெயர் மாற்றம் தொடர்பான பொது அறிவித்தல்

2023 நவம்பர் 30 ஆம் திகதியன்று கீழே குறிப்பிட்டுள்ள வரையறுக்கப்பட்ட தனியார் பொறுப்புள்ள கம்பனியானது அதனது பெயரை மாற்றியுள்ளதென 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்ட 9(2) ஆம் பிரிவின் பிரகாரம் அறிவித்தல் வழங்கப்படுகின்றது.

கம்பனியின் முன்னைய பெயர்: **ரியல் கிரீன் லங்கா (பிரைவட்) லிமிட்டட்**

கம்பனி இலக்கம் : **PV 00269119**

பதிவு அலுவலகத்தின் முகவரி : **104/5/1, ரஞ்ஜனி ஜயசூரிய மாவத்தை, வீரஉதித்த மாவத்தை, ஹடிகம, பிலியந்தல.**

கம்பனியின் புதிய பெயர் : **ஜலண்ட் வொண்டர்ஸ் (பிரைவட்) லிமிட்டட்**

**அமல்கமேட்டட் மனேஜ்மெண்ட் சேர்விசஸ் (பிரைவட்) லிமிட்டட்,**
**செயலாளர்கள், 96-2/2, கொன்சிஸ்டரி கட்டிடம், மல்வத்தை வீதி, கொழும்பு-11.**

Marriage Proposals
in the
Sunday Observer
Is the best way to fulfil your Future Dreams

Repeat Your ad For Better Offers

## மாநகர சபை – குருநாகல்

### பெறுகை அறிவிப்பு

குருநாகல் மாநகர சபைக்கு சொந்தமான கீழுள்ள விடயங்களுக்காக விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| பெயர் | கேள்வி படிவக் கட்டணம் | மீளளிக்கப்படும் கேள்விமனு பிணை கட்டணம் | குறைந்தபட்ச விலைமனு (வெட் இன்றி) |
|---|---|---|---|
| ஆற்றங்கரையை சூழ திருமண புகைப்படங்கள் மற்றும் படப்பிடிப்புகளுக்கு கட்டணம் அறவிடல் | 3,000.00 + VAT | 10,000.00 | 2,500,000.00 |
| பொதுச் சந்தையை குத்தகைக்கு விடுதல் | 3,000.00 + VAT | 10,000.00 | 15,000,000.00 |
| குருநாகல் நகரத்தின் 08 இடங்களில் நிரந்தர விளம்பரப் பதாகைகளை காட்சிப்படுத்தலை குத்தகைக்கு விடுதல் | 3,000.00 + VAT | 10,000.00 | 25000 - 42000 மாதாந்த கட்டணம் |
| மாளிகாபிட்டிய அரங்கின் கிளை வீதியின் 1ஆம் இலக்க கடையை குத்தகைக்கு விடுதல் | 3,000.00 + VAT | 10,000.00 | 4,260,000.00 |
| மாளிகாபிட்டிய அரங்கின் கிளை வீதியின் 2ஆம் இலக்க கடையை குத்தகைக்கு விடுதல் | 3,000.00 + VAT | 10,000.00 | 5,835,000.00 |
| மாளிகாபிட்டிய அரங்கின் படிக்கட்டுக்கு கீழுள்ள 5 பகுதிகளை குத்தகைக்கு விடுதல் | 3,000.00 + VAT | 10,000.00 | 1,750,000.00 - 2,300,000.00 |

மேல் குறிப்பிடப்பட்ட விலைமனு கோரலுக்காக விலைமனு ஆவணங்களை 2024.01.16 ஆம் திகதி தொடக்கம் 2024.02.05 பி.ப. 2.00க்கு முன்னர் அலுவலக நேரங்களில் குருநாகல் மாநகர சபையின் கணக்கு பிரிவில் இருந்து பெற்றுக்கொள்ள முடியும். 2024.02.06 ஆம் திகதி பி.ப. 2.00க்கு மாநகர சபை குழுக் கூட்ட மண்டபத்தில் கேள்விமனுக்கள் திறக்கப்படுவதோடு, விலைமனுதாரருக்கு அல்லது பிரதிநிதி ஒருவருக்கு அதற்காக பங்கேற்க முடியும்.

**விபரங்களுக்கு**
**தொலைபேசி -037-4941869**
**மின்னஞ்சல் - ginumviyadam@gmail.com**
**தொலைநகல் - 037 2228136**

**மாநாகர ஆணையாளர்**
**மாநகர சபை**
**குருநாகல்**
**2024.01.16**

## விலைமனுக்களுக்கான அழைத்தல்

## உள்ளூராட்சி திணைக்களம், வட மாகாணம்
## உலக வங்கி மற்றும் ஐரோப்பிய யூனியனால் நிதியிடப்பட்டது
## உள்ளூராட்சி அபிவிருத்தி ஆதரவு செயற்றிட்டம் (LDSP)

### செயற்றிட்டப் பெயர்:
### சங்கானையில் மரபுரீதியிலான உணவு நிலையத்தின் அபிவிருத்தி வேலை

**Contract No.: LDSP/NP/JAF/VWPS/PT02/2023/01**

1. இலங்கை சனநாயக சோசலிச குடியரசானது உலக வங்கியிடமிருந்து உள்ளூர் அபிவிருத்தி ஆதரவு செயற்றிட்டத்திற்காக கடனொன்றைப் பெற்றுள்ளதுடன் இக்கடன் பெறுகைகளின் பகுதியொன்றை சங்கானை மரபுரீதியிலான உணவு நிலைய அபிவிருத்தி வேலைக்கான ஒப்பந்தத்திற்காக LDSP PT 02 இன் கீழான பணக்கொடுப்பனவுகளுக்காக செலவு செய்வதற்காக உத்தேசிக்கப்பட்டுள்ளது. ஒப்பந்த இல.: LDSP/NP/JAF/VWPS/PT02/2023/01.
2. கீழேயுள்ள அட்டவணையில் பட்டியலிடப்பட்டுள்ள வேலை (வேலைகளுக்காக) தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து சுழிபுரம், வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் சார்பாக உள்ளூர் அதிகாரசபையின் பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இப்போது அழைக்கின்றார்.

| இல. | ஒப்பந்த இல. | ஒப்பந்தப் பெயர் | சிவில் ஆகு செலவு (மில்.ரூபாவில்) | தேவைப்படும் CIDA தரம் | தேவைப்படும் விலைமனுப் பிணை: விலைமனு உத்தரவாதத் தொகை (ரூபாவில்) | தேவைப்படும் விலைமனுப் பிணை: செல்லுபடியாகும் கால எல்லை | ஒப்பந்தக் கால எல்லை |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | LDSP/NP/JAF/VWPS/PTO2/2023/01 | சங்கானையில் மரபுரீதியிலான உணவு நிலைய அபிவிருத்தி வேலை | 6.25 | கட்டிடங்கள் - சி-6 மற்றும் சி-7 அல்லது மேற்பட்டது | 63,000.00 | 2024.05.28 ஆம் திகதி வரையும் | 90 நாட்கள் |

1. விலைமனுக்கோரலானது தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடத்தப்படும்.
2. ஒப்பந்தத்தை வழங்குவதற்கான தகைமைக்காக சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவும் மேலேயுள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ள தரத்திற்கான கட்டிடங்கள் நிருமாணத்தில் தேவைப்படுத்தப்பட்டுள்ள செல்லுபடியாகும் தன்மையிலுள்ள CIDA பதிவைக் கொண்டிருப்பதுடன் செல்லுபடியாகும் தன்மையிலுள்ள வியாபார அல்லது கம்பனி பதிவைக் கொண்டிருத்தல் வேண்டும்.
3. ஒப்பந்தத்தை வழங்குவதற்காக தகுதிக்கான தகைமைத் தேவைப்பாடுகள் விலைமனுக்கோரல் ஆவணத்தின் தகைமை தகவல் 4 ஆம் பிரிவிலும் அட்டவணையின் 5 ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ளன.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர் மேலதிக தகவலை யாழ்ப்பாணம், சுழிபுரம், வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் செயலாளரிடமிருந்து பெற்று (தொலைபேசி இல.: 021 225 0144. தொலைநகல்: 021 225 0144. மின்னஞ்சல்: **valiwestps@gmail.com)** 2024 ஜனவரி 16 ஆம் திகதிலிருந்து 2024 பெப்ரவரி 12 ஆம் திகதி வரையும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் சுழிபுரம், வலக்கம்பரை, வலிகாமம் மேற்கு பிரதேச சபை என்ற முகவரியில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.
5. 2024 ஜனவரி 16 ஆம் திகதியிலிருந்து 2024 பெப்ரவரி 12 ஆம் திகதியன்று வரையும் சாதாரண வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் மீளளிக்கப்படாத கட்டணமாக 3000 ரூபாவை செலுத்திய பின்னர் சுழிபுரம், வலிகாமம் மேற்கு பிரதேச சபைச் செயலாளருக்கு எழுத்துமூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். பணக் கொடுப்பனவு முறையானது ரொக்கப் பணத்திலேயே இருத்தல் வேண்டும்.
6. விலைமனுக்கள் 2024 பெப்ருவரி 13 ஆம் திகதியன்று பி.ப. 2.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் மூலப்பிரதி மற்றும் நகல்பிரதி ஆகியன கீழேயுள்ள முகவரியான செயலாளர், வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம் என்பதற்கு ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விரைவாகவே திறக்கப்படும்.
7. விலைமனுக்கள் 2024 ஏப்ரல் 30 ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
8. அனைத்து விலைமனுக்களும் மேலேயுள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறான
   விலைமனுப் பிணையொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். விலைமனுப் பிணையானது மேலேயுள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு திகதி வரையும் என்பதுடன் அட்டவணையின் 16 ஆம் ஷரத்தின் பிரகாரமே இருத்தல் வேண்டும்.
9. சுழிபுரம், வலிகாமம் மேற்கு பிரதேச சபயின் தலைமையலுவலகத்தில் 2024 ஜனவரி 29 ஆம் திகதியன்று பி.ப. 1 மணிக்கு விலைமனு முன்னோடிக் கூட்டம் நடைபெறும்.

கீழே வழங்கப்பட்டுள்ள முகவரி (முகவரிகள்) பின்வருமாறு:

**தலைவர்,**
**உள்ளூர் அதிகாரசபை பெறுகைக் குழு,**
**வலிகாமம் மேற்கு பிரதேச சபை,**
**வலக்கம்பரை, சுழிபுரம்.**

## உயிரியல் மருத்துவ பொறியியல் சேவைகள் பிரிவு

## மருத்துவ உபகரண துணைப்பாகங்கள் மற்றும் உதிரிப்பாகங்களை வழங்குவதற்கான பெறுகை அறிவித்தல்

1. கோரப்பட்ட பொருட்களுக்கு இணக்கமான துணைப்பாகங்கள் மற்றும் உதிரிப்பாகங்கள் கிடைக்கும் தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை இந்த ஒப்பந்தங்களின் தொழில்தருநர் சார்பாக கொழும்பு-10, இல. 27, டி சேரம் பிளேஸ், உயிரியல் மருத்துவ பொறியியல் சேவைகள் பிரிவின் பிரதேச பெறுகைக் குழுத் தலைவர் இப்போது அழைக்கின்றார்.

| இல. | உருப்படிகள் | எண்ணிக்கை | மதிப்பீட்டுக் கிரயம் (ரூபா) (மில்லியன்களில் | மீளளிக்கப் படாத கட்டணம் (ரூபா) |
|---|---|---|---|---|
| 01 | NIBP CUFFS FOR PATIENT MONITORS | 9800 | 16 | 500.00 |
| 02 | RECHARGEABLE BATTERY PACKS FOR PATIENT MONITORS | 500 | 15 | 500.00 |
| 03 | RECHARGEABLE BATTERY PACKS FOR ECG MACHINES | 50 | 1.2 | 500.00 |

2. விலைக்கோரல்கள் தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் நடைமுறையின் கீழ் இடம்பெறும்.
3. ஒப்பந்தத்தைக் கையளிக்கப் பெறுவதற்கான தகைமைப் பெறுவதற்கு, சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியாளர் பட்டியலுக்கு உட்படாதவராகவிருத்தல் வேண்டும்.
4. கொழும்பு-10, இல. 27, டி சேரம் பிளேஸ், உயிரியல் மருத்துவ பொறியியல் சேவை பிரிவின் கணக்காளர் அலுவலகத்தில் விலைக்கோரல்கள் முடிவுறுத்தப்பட்டதன் பின் உடன் திறக்கப்படும்.
5. ஒப்பந்தத்தைக் கையளிக்கப் பெறுவதற்கான தகுதிக்காக, ஒவ்வொரு விலைமனுதாரரும் 5 மில்லியன் இலங்கை ரூபாவை விஞ்சும் கேள்வியிடல் தொகையின் பொருட்டு 1987ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் 8ஆம் பந்தியின் கீழ் கம்பனிப் பதிவாளரினால் வழங்கப்பட்ட சான்றிதழைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
6. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்தியதன் பின் 2024-01-16ஆம் திகதி முதல் 2024-02-05ஆம் திகதி வரையான பொதுவான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையான காலத்தில் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் பேரில் கொழும்பு-10, இல. 27, டி சேரம் பிளேஸ், உயிரியல் மருத்துவ பொறியியல் சேவைகள் பிரிவிலிருந்து முழுமையான விலைக்கோரல் ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவுகளை ரொக்கப் பணத்தில் செலுத்துதல் வேண்டும்.
7. பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்களை மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியென இரு பிரதிகளில் முன்வைத்தல் வேண்டும். மூலப் பிரதி மற்றும் நகல் பிரதிகளை வெவ்வேறான இரு உறைகளில் இட்டு ''மூலப் பிரதி'' மற்றும் ''நகல் பிரதி'' எனக் குறிப்பிட்டு முத்திரைக்குறியிடப்பட்ட உறையினுள் இட்டு, அவ்விரு உறைகளையும் வேறொரு உறையில் இட்டு, முத்திரைக் குறி பொறித்து அவ்வுறையின் இடதுபக்க மேல் மூலையில் ''ஒப்பந்தப் பெயர் மற்றும் இலக்கம்'' என்பவற்றைக் குறிப்பிடுதல் வேண்டும். விலைமனுக்களை 2024-02-06ஆம் திகதி மு.ப. 10.00 மணி அல்லது அதற்கு முன்னர் தலைவர், பிரதேச பெறுகைக் குழு, உயிரியல் மருத்துவ பொறியல் சேவைகள் பிரிவு, இல. 27, டி சேரம் பிளேஸ், கொழும்பு-10 எனும் முகவரிக்குக் கிடைக்கச்செய்தல் வேண்டும். பிந்திக் கிடைக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். சமுகம் தந்துள்ள விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் முடிவுறுத்தப்பட்டு உடன் திறக்கப்படும்.
8. விலைமனுக்கள் 2024-05-06ஆம் திகதி வரையில் செல்லுபடியாதல் வேண்டும். விலைக்கோரல் பிணை முறியாக நிபந்தனையற்ற மற்றும் கோரிக்கை வங்கி உத்தரவாதம் 2024-06-03ஆம் திகதி வரையில் செல்லுபடியாதல் வேண்டும்.
9. மேலதிக விபரங்களை உயிரியல் மருத்துவ பொறியியல் சேவைகள் பிரிவின் கணக்காளரிடமிருந்து 2684732 எனும் தொலைபேசி இலக்கத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர்,**
**பிரதேச பெறுகைக் குழு,**
**உயிரியல் மருத்துவ பொறியல் சேவைகள் பிரிவு,**
**இல. 27, டி சேரம் பிளேஸ்,**
**கொழும்பு-10.**

### அரச பெருந்தோட்ட தொழில் முயற்சிகள் மறுசீரமைப்பு அமைச்சு

## மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபை

## பலகை மரங்களை வெட்டிச் சாய்ப்பதற்கான பெறுகை அறிவித்தல

ஜனதா தோட்ட அபிவிருத்திச் சபைக்குச் சொந்தமான லெவலன் ஹந்தான ரஹதுன்கொட மற்றும் தெல்தோட்டை தோட்டங்களில் உள்ள கீழ்க்காணும் பலகை மரங்களை விற்பனை செய்வதற்கான விலைமனுக்கள் கோரப்படுகின்றன. (அரசின் சகல வரிகள் மற்றும் கட்டணங்கள் பொருந்தும்)

| தொடர் இலக்கம் | தோட்டம் | பகுதி | துறை | மரவகை | மரங்களின் எண்ணிக்கை | முழு மரங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|
| 01 | லெவலன் | லெவலன் | 02,04,06,07,09 | இயூகல்ப்டஸ் | 136 | 136 |
| 02 | லெவலன் | நிவ் பொரஸ்ட் | 01,08,09,10 | இயூகலிப்டஸ் | 70 | 70 |
| 03 | லெவலன் | ஜீ.கே | 03 | இயூகலிப்டஸ் | 44 | 44 |
| 04 | ஹந்தான | கலஹா | பாலத்திற்கு அருகில் | ரொலியானா தென்னை மரம் | 05 01 | 06 |
| 05 | ரஹதுன்கொட | ரிவடேல் | 02 | இயூகலிப்டஸ் | 400 | 400 |
| 06 | தெல்தோட்டை | தெல்தோட்டை | 01,04,05,07, 12,13,15,17 | இயூகலிப்டஸ் | 214 | 214 |
| | | | | **முழுத்தொகை** | **870** | **870** |

கேள்வி விண்ணப்பங்கள் குறித்த தோட்ட அலுவலகத்திலிருந்து ஒரு பகுதிக்காக வேறுவேறாக ரூ. 10,000/- மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணத்தை செலுத்தி 2024.01.16 முதல் 2024.02.01 பி.ப. 3.00 வரை வாரத்தின் வேலை நாட்களில் பெற்றுக் கொள்ளலாம். பொறியிடப்பட்ட கேள்விப் பத்திரங்கள் 2ற024.02.02 பி.ப. 2.00 இற்கு முன் கிடைக்குமாறு பதிவுத் தபாலில் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பலாம். அல்லது இதற்காக வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். கேள்விப் பத்திரங்களை அன்றே அந் நேரத்திலேயே திறக்கப்படுவதுடன் கேள்விதாரர் அல்லது அவரது பிரதிநிதியொருவர் அவ்வேளையில் சமுகமளிக்கலாம்.

**தலைவர்,**
**அரச பெருந்தோட்ட அபிவிருத்திச் சபை,**
**55/75, வொக்ஷோல் ஒழுங்கை,**
**கொழும்பு -02.**

## இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசாங்கம்

# போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு
# வீதி அபிவிருத்தி அதிகாரசபை

## விலைமனுக்களுக்கான அழைத்தல்

| தொழிலாளர்களை வாடகைக்கு அமர்த்துதல் |
|---|
| கிண்ணியா டிப்போவிற்கு தொழிலாளர்களை வழங்கல் (தொழிலாளர்கள் - 1 எண்ணிக்கை) நொச்சிக்குளம் டிப்போ (தொழிலாளர்கள் - 03 எண்ணிக்கை) மற்றும் தம்பலகாமம் டிப்போ (தொழிலாளர்கள் - 03 எண்ணிக்கை) |
| புல்மோட்டை டிப்போவிற்கு தொழிலாளர்களை வழங்கல் (தொழிலாளர்கள் - 10 எண்ணிக்கை) |
| நகர டிப்போவிற்கு தொழிலாளர்களை வழங்கல் ( தொழிலாளர்கள் - 10 எண்ணிக்கை) |

தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறையின் கீழ் தொழிலாளர்களை வாடகைக்கு அமர்த்துவதற்காக விலைமனுக்கள் இத்தால் அழைக்கப்படுகின்றன. ஆர்வமுள்ள விலைமனுதாரர் **www.rda.gov.lk** என்ற வீஅஅ மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் இணைய பக்கத்தை 2024.01.16 ஆம் திகதியிலிருந்து 2024.01.24 ஆம் திகதியன்று வரையும் பார்வையிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**நிறைவேற்று பொறியியலாளரின் அலுவலகம்,**
**வீஅஅ, திருகோணமலை.**

# இலங்கை வங்கி

## ஏலவிலை கோரல் இல: P/PROC/2024/10

**இணையதள மற்றும் நடமாடும் வங்கியியல் அலுவல்களுக்கான தீர்வை (தனிப்பட்ட வாடிக்கையாளர்களுக்கு) வழங்கல், வடிவமைத்தல், நிறுவுதல், நடைமுறைப்படுத்தல், ஒப்படைத்தல் மற்றும் பேணுதல் தொடர்பாக அச்சிடப்பட்ட விலை கோரல்கள்**

இணையதள மற்றும் நடமாடும் வங்கியியல் அலுவல்களுக்கான தீர்வை (தனிப்பட்ட வாடிக்கையாளர்களுக்கு) வழங்கல், வடிவமைத்தல், நிறுவுதல், நடைமுறைப்படுத்தல், ஒப்படைத்தல் மற்றும் பேணுதல் தொடர்பாக அச்சிடப்பட்ட விலை கோரல்கள் என்பவற்றின் பெறுகைக்கான ஒட்டி முத்திரையிடப்பட்ட ஏலவிலை கூறல்களை இலங்கை வங்கியின் சொத்துக்கள் மற்றும் சேகரிப்புகள் பிரிவின் பிரதான முகாமையாளர் கோருகின்றார்.

| | |
|---|---|
| ஏல விலைகூறல் ஆவணத் தொகுதியை விநியோகிக்கும் இறுதித் திகதியும் நேரமும் | 19.02.2024 15:00 மணி வரை |
| ஏல விலைகூறல்கள் ஆவணத் தொகுதியை விநியோகிக்கும் காலஎல்லை | வார நாட்களில் 0900 - 1500 மணி வரை |
| ஏல விலைகூறுதலுக்கு முன்பான கூட்டம் | 26.01.2024 1400 மணிக்கு, 6 ஆவது மாடி, இலங்கை வங்கி தலைமைக் காரியாலயத்தில் |
| ஏல விலைகூறல்கள் முடிவடையும் திகதியும் நேரமும் | 20.02.2024 1000 மணி வரை |
| ஏல விலைகூறல்களை திறத்தல் | ஏலவிலைகூறல்கள் முடிவடைந்தவுடன் |

மேலதிக விபரங்களை ஏலதாரர்கள் இலங்கை வங்கியின் www.boc.lk என்ற இணையதளத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

எந்தவிதக் காரணங்களையும் கூறாது ஏதேனும் அல்லது அனைத்து விலைகூறல்களையும் நிராகரிக்கும் உரிமையும் விலைகூறலின் ஏதேனும் பகுதியை ஏற்றுக்கொள்ளும் உரிமையும் இலங்கை வங்கிக்கு உண்டு.

பிரதான முகாமையாளர்
சொத்துக்களும் சேகரிப்பும் பிரிவு
14ஆம் மாடி, இலங்கை வங்கித் தலைமையகம்
"BOC" சதுக்கம், இல. 1, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 1.
தொலைபேசி: +94 112 544310, +94 112 434786
மின்னஞ்சல்: procurement@boc.lk

1975 BOC CALL CENTRE www.boc.lk
A (lka) Fitch ரேட்டிங், AAA Brand Finance ரேட்டிங்.
தலைமை அலுவலகம், BOC சதுக்கம், இல.1, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 1.
இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

## விலைமனுக்களுக்கான அழைப்பு

# ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்

| | |
|---|---|
| கடனிலக்கம் மற்றும் தலைப்பு | 3699-SRI: விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் மனித வள அபிவிருத்தி செயற்றிட்டம் |
| ஒப்பந்த இல. மற்றும் தலைப்பு | STHRD/SJP/ASI/E9: ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் பிரயோக விஞ்ஞானம்-1 பீடத்திற்கான ஆய்வுகூட உபகரணங்களை வழங்குதல், விநியோகித்தல் மற்றும் நிறுவுதலுக்கான பெறுகை |
| விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதி | 2024-02-20ஆம் திகதி 10.00 மணித்தியாலம் (உள்ளூர் நேரம்) |

1. இலங்கை சோசலிச குடியரசானது 180 மில்லியன் ஐ.அ. டொலருக்குச் சமமான நிதியை ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து **(ADB)** கல்வி அமைச்சின் கீழ் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் மனித வள அபிவிருத்தி செயற்றிட்ட (**STHRD** செயற்றிட்டம்) அமுல்நடாத்தலின் கிரயச் செலவினத்திற்காக பெற்றுக் கொண்டுள்ளதுடன் இந்த நிதியின் பெறுகைகளின் பகுதியொன்றை மேலே பெயரிடப்பட்டுள்ள ஒப்பந்தத்திற்கான பணக்கொடுப்பனவுகளுக்காக செலவழிப்பதற்கு உத்தேசித்துள்ளது. ஆசிய அபிவிருத்தி வங்கியின் **(ADB)** வள நாடுகளின் தகுதியுள்ள விலைமனுதாரர்களும் இவ்விலைமனுவில் பங்கேற்கலாம்.
2. ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழக விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் மனித வள அபிவிருத்தி செயற்றிட்ட, பிரதி செயற்றிட்ட பணிப்பாளரின் (''கொள்வனவாளர்'') சார்பாக பல்கலைக்கழக பெறுகைக் குழுவின் தலைவர் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம், பிரயோக விஞ்ஞானம்-1 பீடத்திற்கான ஆய்வுகூட உபகரணங்களை வழங்குதல், விநியோகித்தல் மற்றும் நிறுவுதல் ("பொருட்கள்'') பெறுகைக்காக தகுதியுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை கோருகின்றார். இந்த பெறுகையானது ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் - பிரயோக விஞ்ஞானம்-1 பீடத்தின் ஆய்வுகூட உபகரணங்களை வழங்குதல், விநியோகித்தல் மற்றும் நிறுவுதலுக்கான பெறுகை என்பதை அடக்குகின்றது.
3. இந்த விலைமனுக்கோரலில் பங்குபெறுவதற்காக பின்வரும் பிரதான தகைமைகளை விலைமனுதாரர் கொண்டிருத்தல் வேண்டும்.

| பெறுகை செயற்பாட்டு இலக்கங்கள் மற்றும் விபரங்கள் | கடந்த 5 வருடங்களில் ஒவ்வொரு ஒப்பந்தத்திற்கும் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதியையுடையதும் நிகரான தன்மை மற்றும் சிக்கல்தன்மை ஆகியவற்றைக் கொண்ட ஆகக் குறைந்தது 2 ஒப்பந்தங்களை 6ஆம் பிரிவில் விபரிக்கப்பட்டவாறான வழங்கலின் நோக்கத்திற்காக பிரதான வழங்குநராக வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல். இல. ரூபா (2019.01.01 - 2023.12.31ஆம் திகதி வரையான 5 வருட காலத்திற்கானது) | கடந்த 5 வருடங்களில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ள பூர்த்தி செய்யப்பட்ட அல்லது முடிவுறாத ஒப்பந்தங்களுக்காக விலைமனுதாரரினால் பெற்றுக் கொள்ளப்பட்ட மொத்த பணக் கொடுப்பனவுகளாக கணக்கிடப்பட்ட ஆகக்குறைந்த சராசரி வருடாந்த நிதிப்புரள்வு. இல. ரூபா (2019.01.01 - 2023.12.31ஆம் திகதி வரையான 5 வருட காலத்திற்கானது) |
|---|---|---|
| Lot 1: High Performance Liquid Chromatography (HPLC) system | 16 மில்லியன் | 24 மில்லியன் |
| Lot 2: Research grade double beam UV-Visible Spectrometer | 3.50 மில்லியன் | 5.25 மில்லியன் |
| Lot 3: Centrifuge Machine/ Ultra Centrifuge Machine | 2.50 மில்லியன் | 3.75 மில்லியன் |
| Lot 4: Waterbath Shaker | 1.50 மில்லியன் | 2.25 மில்லியன் |
| Lot 5: Fiber Analyzer | 3.50 மில்லியன் | 5.25 மில்லியன் |
| Lot 6: Water Flow Meter | 1.80 மில்லியன் | 2.70 மில்லியன் |
| Lot 7: 1:50 000 Topographi Map Series - Digital and Printed | 0.60 மில்லியன் | 0.90 மில்லியன் |
| Lot 8: 1:100 000 Geological Map Series - Printed | 0.10 மில்லியன் | 0.15 மில்லியன் |
| Lot 9: Oven (250 L) | 2 மில்லியன் | 3 மில்லியன் |
| Lot 10: Trinocular Microscope with Digital Camera and Digital Display | 2.50 மில்லியன் | 3.75 மில்லியன் |
| Lot 11: Trinocular brightfield microscope (Light compound) with digital camera | 1.20 மில்லியன் | 1.80 மில்லியன் |
| Lot 12: Gel Electrophoresis system with a power unit and visualizer | 1 மில்லியன் | 1.5 மில்லியன் |
| Lot 13: Light microscope with a fitted camera | 0.80 மில்லியன் | 1.20 மில்லியன் |
| Lot 14: 3 D Printer | 2 மில்லியன் | 3 மில்லியன் |

4. ஆசிய அபிவிருத்தி வங்கியின் (ADB) பொருட்களின் பெறுகை ஒற்றைக்கட்ட - ஒரு கடித உறை நடைமுறையில் பகிரங்க போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடாத்தப்படுவதுடன் விலைமனுக்கோரல் ஆவணத்தில் விபரிக்கப்பட்டவாறு தகுதியுள்ள நாடுகளின் அனைத்து விலைமனுதாரர்களும் பங்கேற்கலாம்.
5. மேலதிக தகவலைப் பெற்றுக் கொள்ளவும் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கவும், விலைமனுதாரர் பின்வருபவருடன் தொடர்புகொள்ளல் வேண்டும்.
   **சிரேஷ்ட பெறுகை அலுவலர்,**
   **விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் மனித வள அபிவிருத்தி செயற்றிட்டம்,**
   **பீடாதிபதி அலுவலகம்,**
   **பிரயோக விஞ்ஞான பீடம்,**
   **ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்,**
   **கங்கொடவில, நுகேகொட.**
   **தொலைபேசி: 071-4415052 , 011-2758397**
   **மின்னஞ்சல்: spopiu_foe@sjp.ac.lk**
6. ஆங்கிலத்தில் விலைமனுக்கோரல் ஆவணங்களை கொள்வனவு செய்யவுள்ள தகுதியுள்ள விலைமனுதாரர்களால் "**STHRD/SJP/ASI/E9 -** ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம், பிரயோக விஞ்ஞானம்-1 பீடத்திற்கு ஆய்வுகூட உபகரணங்களை வழங்குதல், விநியோகித்தல் மற்றும் நிறுவுதலுக்கான பெறுகை" என்பதற்கான விலைமனுக்களை வேண்டி மேலேயுள்ள முகவரிக்கு எழுத்து மூலமான வேண்டுகோள் மற்றும் மீளளிக்கப்படாத கட்டணமாக 5,000.00 இ.ரூபாவை (ஐயாயிரம் இலங்கை ரூபா மாத்திரம்) ரொக்கப் பணத்தில் செலுத்துதல் வேண்டும். காணாமல் போன அல்லது தாமதமான ஒப்படைத்தலுக்கு பொறுப்பேற்கப்பட மாட்டாது.
7. 2024.02.20ஆம் திகதி 10:00 மணித்தியாலம் அல்லது அதற்கு முன்னராக பின்வரும் முகவரிக்கு விலைமனுக்கோரல் ஆவணத்தில் விபரிக்கப்பட்டவாறு விலைமனுப் பிணையுடன் உங்கள் விலைமனுக்களை ஒப்படைக்கவும்.
   **சிரேஷ்ட பெறுகை அதிகாரி,**
   **விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் மனித வள அபிவிருத்தி செயற்றிட்டம்,**
   **பீடாதிபதி அலுவலகம்,**
   **பிரயோக விஞ்ஞான பீடம்,**
   **ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்,**
   **கங்கொடவில, நுகேகொட.**

   பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்கள் இரு பிரதிகள் மூலப்பிரதி மற்றும் நகல்பிரதி என சமர்ப்பிக்கப்படல் வேண்டும். மூலப்பிரதி மற்றும் நகல்பிரதி ஆகியன தனித்தனியாக உள்ளிட்டு ''மூலப்பிரதி'' மற்றும் ''நகல்பிரதி'' என முறையே அடையாளமிடப்பட்டு முத்திரையிடப்படல் வேண்டும். அதன் பின்னர், இந்த இரு தபாலுறைகளும் இன்னொரு தபாலுறையில் உள்ளிட்டு, அதன் இடது பக்க மேல் மூலையில் "**STHRD/SJP/ASI/E9 -** ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம், பிரயோக விஞ்ஞானம்-1 பீடத்திற்கு ஆய்வுகூட உபகரணங்களை வழங்குதல், விநியோகித்தல் மற்றும் நிறுவுதலுக்கான பெறுகை" எனக் குறிப்பிடப்படல் வேண்டும்.
   விலைக்கோரல் முன்னோடிக் கூட்டமொன்று 2024-01-31ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு நுகேகொட, கங்கொடவில, ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் பிரயோக விஞ்ஞான பீடத்தின் பணிப்பாளர் சபை அறையில் இடம்பெறும்.
8. விலைமனுக்கள் அவைகளின் சமர்ப்பித்தலுக்கான இறுதி நேரம் முடிவடைந்ததும் தெரிவு செய்யப்பட்ட விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் உடன் திறக்கப்படும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்,**
**நுகேகொட.**
**திகதி: 2024-01-16.**

## விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

### உள்ளூராட்சித் திணைக்களம், வடமத்திய மாகாணம்

உலக வங்கி மற்றும் ஐரோப்பிய ஒன்றிய நிதியிடல்

**உள்ளூர் அபிவிருத்தி உதவித் திட்டம் (LDSP)**

**செயற்றிட்ட அடையாளம்: P 163305**

1. இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு உள்ளூர் அபிவிருத்தி உதவித் திட்டத்தின் செலவுக்கு உலக வங்கியிடமிருந்து கடனைப் பெற்றுள்ளது, மேலும் இதன் ஒரு பகுதியை பின்வரும் ஒப்பந்தங்களின் கீழான கொடுப்பனவுகளுக்கு செலுத்துவதற்கு விரும்புகிறது.
   - ➢ ராஜாங்கனை சந்தி புதிய கிராமிய சந்தைக் கட்டிடத்தொகுதியின் மிகுதி பூர்த்தியாக்கல் வேலைகள் (கட்டம் 01 மற்றும் கட்டம் 02)
   - ➢ இபலோகம பிரதேச சபையிலுள்ள ஹிரிபிட்டியகம கிராமிய சந்தைக் கட்டிடத்தின் மிகுதி வேலைகள்
   - ➢ கஹட்டகஸ்திகிலிய வாரச்சந்தையின் மிகுதி நிர்மாண வேலைகள்
   - ➢ பகுதியளவில் நிர்மாணிக்கப்பட்டுள்ள ரம்பேவ கிராமிய வங்கிக் கட்டிடத்தின் மிகுதி வேலைகள்
   - ➢ திம்புலாகல பிரதேச சபையிலுள்ள மன்னம்பிட்டிய முன்பள்ளி மற்றும் பகல் நேர பராமரிப்பு நிலையத்தின் மிகுதி பூர்த்தியாக்கல் வேலைகள்
   - ➢ லங்காபுர சிறுவர் பூங்காவின் மிகுதி பூர்த்தியாக்கல் வேலைகள்
2. பின்வரும் அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ள செயற்றிட்டங்களுக்காக தகுதியான மற்றும் தகுதிவாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து உள்ளூர் அபிவிருத்தி உதவித் திட்டத்தின் சார்பாக மாகாண செயற்றிட்ட பெறுகைக் குழுத் தலைவர் முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார்.
3. விலைக்கோரல்கள் தேசியபோட்டி ரீதியிலான விலைக்கோரல் நடைமுறையில் செயற்படுத்தப்படும்.
4. ஒப்பந்தத்தைக் கையளிக்க தகுதி பெறுவதற்கு வெற்றிகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியாளர் பட்டியலுக்கு உட்படாதவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தரத்திற்கு இயைபுடைய துறையில் CIDA பதிவைக் கொண்டிருத்தல் வேண்டும்.
5. ஒப்பந்தத்தைக் கையளிக்க தகுதி பெறுவதற்கான தகுதித் தேவைப்பாடுகள் விலைமனு ஆவணத்தில் வழங்கப்பட்டுள்ளன.
6. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் அனுராதபுரம், ஹரிஸ்சந்திர மாவத்தை, மாகாண சபைக் கட்டிடத் தொகுதி, உள்ளூராட்சித் திணைக்களம், பிரதி செயற்றிட்டப் பணிப்பாளர் / ஆணையாளரிடமிருந்து மேலதிக தகவல்களை வார நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி: 025-2234728, தொலைநகல்: 025-2234728 மின்னஞ்சல்: ncplg2020@gmail.com)
7. 2024-01-16ஆம் திகதி முதல் 2024-02-05ஆம் திகதி வரை மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை அட்டவணையில் காட்டப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்தி அனுராதபுரம், ஹரிஸ்சந்திர மாவத்தை, மாகாண சபைக் கட்டிடத் தொகுதி, உள்ளூராட்சித் திணைக்களம், பிரதி செயற்றிட்டப் பணிப்பாளர் / ஆணையாளரிடமிருந்து ஆங்கில மொழியிலான முழுமையான விலைமனு ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். கட்டணங்களை ரொக்கப் பணமாகவே செலுத்துதல் வேண்டும்.
8. நகல் பிரதிகளுடனான விலைமனுக்கள் 2024-02-06ஆம் திகதி மு.ப. 10.00 மணி அல்லது அதற்கு முன்பதாக பிரதி செயற்றிட்டப் பணிப்பாளர் / ஆணையாளர், உள்ளூராட்சித் திணைக்களம், மாகாண சபைக் கட்டிடத் தொகுதி, ஹரிஸ்சந்திர மாவத்தை, அனுராதபுரம் எனும் முகவரிக்கு ஒப்படைத்தல் வேண்டும். பிந்திய விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். சமுகம்தந்துள்ள விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் முடிவுறுத்தப்பட்டு உடன் திறக்கப்படும்.
9. விலைமனுக்கள் 77 நாட்கள் வரையில் செல்லுபடியாதல் வேண்டும்.
10. சகல விலைமனுக்களுடனும் பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ள இயைபுடைய திட்டங்களின் தொகைக்கான விலைமனுப் பிணை இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

| இல. | செயற்றிட்டத்தின் பெயர் | மதிப்பீட்டுக் கிரயச் செலவு மற்றும் ஒப்பந்தக் காலம் | CIDA தரம் மற்றும் விசேடத்துவம் | விலைக் கோரல் பிணைத் தொகை மற்றும் செல்லுபடிக் காலம் (வரையில்) | மீளளிக்கப் படாத கட்டணம் |
|---|---|---|---|---|---|
| 1 | ராஜாங்கனை சந்தி புதிய கிராமிய சந்தைக் கட்டிடத்தொகுதியின் மிகுதி பூர்த்தியாக்கல் வேலைகள் (கட்டம் 01 மற்றும் கட்டம் 02) | 24.61 மில். 180 நாட்கள் | C6 அல்லது அதற்கு மேல் கட்டிட நிர்மாணம் | 2024-05-21 400,000.00 | 1,000.00 |
| 2 | இபலோகம பிரதேச சபையிலுள்ள ஹிரிபிட்டியகம கிராமிய சந்தைக் கட்டிடத்தின் மிகுதி வேலைகள் | 14.56 மில். 150 நாட்கள் | C6 அல்லது அதற்கு மேல் கட்டிட நிர்மாணம் | 2024-05-28 200,000.00 | 10,000.00 |
| 3 | கஹட்டகஸ்திகிலிய வாரச்சந்தையின் மிகுதி நிர்மாண வேலைகள் | 17.51 மில். 150 நாட்கள் | C6 அல்லது அதற்கு மேல் கட்டிட நிர்மாணம் | 2024-05-28 250,000.00 | 10,000.00 |
| 4 | பகுதியளவில் நிர்மாணிக்கப்பட்டுள்ள ரம்பேவ கிராமிய வங்கிக் கட்டிடத்தின் மிகுதி வேலைகள் | 20.03 மில். 150 நாட்கள் | C6 அல்லது அதற்கு மேல் கட்டிட நிர்மாணம் | 2024-05-28 300,000.00 | 10,000.00 |
| 5 | திம்புலாகல பிரதேச சபையிலுள்ள மன்னம்பிட்டிய முன்பள்ளி மற்றும் பகல் நேர பராமரிப்பு நிலையத்தின் மிகுதி பூர்த்தியாக்கல் வேலைகள் | 4.28 மில். 120 நாட்கள் | C8 அல்லது அதற்கு மேல் கட்டிட நிர்மாணம் | 2024-05-28 50,000.00 | 5,000.00 |
| 6 | லங்காபுர சிறுவர் பூங்காவின் மிகுதி பூர்த்தியாக்கல் வேலைகள் | 4.12 மில். 120 நாட்கள் | C8 அல்லது அதற்கு மேல் கட்டிட நிர்மாணம் | 2024-05-28 50,000.00 | 5,000.00 |

**தலைவர்,**
**மாகாண செயற்றிட்டப் பெறுகைக் குழு,**
**உள்ளூர் அபிவிருத்தி உதவித் திட்டம் (LDSP),**
**மாகாண சபைகள் கட்டிடத் தொகுதி,**
**ஹரிஸ்சந்திர மாவத்தை, அனுராதபுரம்.**

# முன்னாள் தேர்வுக் குழுவினர் மீது அஞ்சலோ மத்தியூஸ் குற்றச்சாட்டு

சிம்பாப்வேயுக்கு எதிரான முதலாவது டி20 சர்வதேச போட்டியில் இலங்கை அணியை வெற்றி வரை அழைத்துச் சென்ற அனுபவ வீரர் அஞ்சலோ மத்தியூஸ், முந்தைய தேர்வுக் குழுவினர் 'நிகழ்ச்சி நிரல்களுடன்" செயற்பட்டதால் தமக்கு மட்டுப்படுத்தப் பட்ட ஓவர் போட்டிகளில் வாய்ப்புக் கிடைக்காமல் போனது என்று சாடியுள்ளார்.

மூன்று ஆண்டுகளின் பின்னர் டி20 அணிக்கு அழைக்கப்பட்ட மத்தியூஸ் நேற்று முன்தினம் (14) நடந்த சிம்பாப்வேயுக்கு எதிரான போட்டியில் 144 ஓட்ட வெற்றி இலக்கை துரத்தியபோது, அதிகபட்சமாக 38 பந்துகளில் 46 ஓட்டங்களை பெற்று ஆட்ட நாயகன் விருதை வென்றார்.

"கடந்த இரண்டு லங்கா பிரீமியர் லீக் பருவங்களிலும் நான் நன்றாக துடுப்பாட்டம் மற்றும் பந்துவீச்சில் ஈடுபட்டபோதும், துரதிருஷ்டவசமாக டி20 உலகக் கிண்ணத்திற்கு நான் தேர்வு செய்யப்படவில்லை என்பதோடு அதற்கான காரணமும் எனக்கு தரப்படவில்லை.

நிகழ்ச்சி நிரல்களுடன் முடிவுகளை எடுத்தால், இது போன்ற விடயங்கள் நடைபெறும். நாம் சம்பியன்ஸ் கிண்ணத்திற்குக் கூட தகுதி பெறவில்லை" என்று மத்தியூஸ் குறிப்பிட்டார்.

இந்நிலையில் உபுல் தரங்க தலைமையிலான புதிய தேர்வுக் குழுவின் வெளிப்படைத் தன்மையை 36 வயதான மத்தியூஸ் பாராட்டியுள்ளார்.

"என்னுடன் பேசிய புதிய தேர்வாளர்கள் தெளிவாக உள்ளனர். எதிர்காலம் பற்றிய எனது திட்டம் என்ன என்பதை கேட்டறிந்த அவர்கள், அவர்களின் திட்டங்கள் பற்றியும் கூறினார்கள். எம்மிடையே சிறந்த உரையாடல் ஒன்று இடம்பெற்றது. சில ஓவர்களை என்னால் வீச முடியுமாக இருந்தால், டி20 உலகக் கிண்ணத்திற்கான அவர்களின் திட்டத்தில் நான் இருப்பதாகக் கூறினார்கள். அணிக்கு எந்த வகையில் உதவ முடியுமாக இருந்தாலும் நான் அதனைச் செய்வேன் என்று கூறினேன்" என்றார்.

பிரமோத்ய விக்ரமசிங்க தலைமையிலான முந்தைய தேர்வுக் குழுவினரின் கீழ் மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் கிரிக்கெட்டில் வாய்ப்பு கிடைக்காமல் இருந்து வந்த மத்தியூஸ் இதற்கு முன்னர் 2021 ஆம் ஆண்டிலேயே டி20 சர்வதேச போட்டி ஒன்றில் ஆடியதோடு கடந்த ஒருநாள் உலகக் கிண்ணத்தின் பாதியிலேயே மாற்று வீரராக அணியில் விளையாட வாய்ப்புப் பெற்றார் என்பது குறிப்பிடத்தக்கது.







## பாடசாலை கால்பந்து:
# அரையிறுதிகள் ஜனவரி 20இல்



இலங்கை பாடசாலை கால்பந்து சம்மேளனத்தினால் நடத்தப்படும் பாடசாலைகளுக்கு இடையிலான ரினோன் ஜனாதிபதி கிண்ண கால்பந்து தொடரின் அரையிறுதியில் யாழ். புனித பத்திரிசியார் மற்றும் ஹமீட் அல் ஹுஸைனியா கல்லூரியும் கொழும்பு சாஹிரா மற்றும் கொழும்பு புனித ஜோசப் கல்லூரியும் மோதவுள்ளன.

இதில் கொழும்புக்கு வெளியில் இருந்து அரையிறுதிக்கு தகுதி பெற்ற ஒரே அணியான புனித பத்திரிசியார் கல்லூரி கடந்த சனிக்கிழமை (13) நடைபெற்ற அரையிறுதியில் களுத்துறை முஸ்லிம் மத்திய கல்லூரியை 3–1 என்ற கோல் வித்தியாசத்தில் வீழ்த்தியது.

அன்றைய தினம் நடந்த இரண்டாவது காலிறுதிப் போட்டியில் இளவாலை புனித என்றியரசர் கல்லூரியை 2–0 என்ற கோல் வித்தியாசத்தில் தோற்கடித்தது. தொடர்ந்து நேற்று முன்தினம் நடந்த காலிறுதிப் போட்டியில் றோயல் கல்லூரியை கொழும்பு சாஹிரா 1–0 எனவும் நீர்கொழும்பு புனித மரியால் கல்லூரியை புனித ஜோசப் கல்லூரி பெனால்டி சூட் அவுட் முறையில் 3–1 என்ற கோல்களாலும் தோற்கடித்தது.

# இலங்கை இளையோர் அணி பயிற்சிப் போட்டியில் வெற்றி



19 வயதுக்கு உட்பட்ட உலகக் கிண்ணப் போட்டியில் ஆடுவதற்கு தென்னாபிரிக்கா சென்றுள்ள இலங்கை இளையோர் அணி நேற்று முன்தினம் (14) நடந்த பங்களாதேஷுக்கு எதிரான முதலாவது பயிற்சிப் போட்டியில் 112 ஓட்டங்களால் டக்வர்த் லுவிஸ் முறையில் வெற்றியீட்டியது.

பிரிட்டோரியாவில் நடைபெற்ற இந்தப் போட்டி சீரற்ற காலநிலையால் 49 ஓவர்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டபோது முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை 9 விக்கெட் இழப்புக்கு 238 ஓட்டங்களை பெற்றது. ஆரம்ப வீரர் புலிந்து பெரேரா 50 ஓட்டங்களை பெற்றார்.

இந்நிலையில் பதிலெடுத்தாடிய பங்களாதேஷ் அணி 36.2 ஓவர்களில் மழை குறுக்கிடும்போது 9 விக்கெட் இழப்புக்கு 119 ஓட்டங்களையே பெற்றிருந்ததால் டகவர்த் லுவிஸ் முறையில் அந்த அணி தோல்வியை சந்தித்தது. இதன்போது வேகப்பந்து வீச்சாளர் விஷேன் ஹலம்பகே 3 விக்கெட்டுகளை வீழ்த்தினார். இலங்கை இளையோர் அணி நாளை தனது இரண்டாவது மற்றும் கடைசி பயிற்சிப் போட்டியில் இந்திய அணியை எதிர்கொள்ளவுள்ளது.



சாஹிரா கல்லூரி ஹொக்கி அணி ஏ பிரிவுக்கு தரமுயர்த்தப்பட்டதற்காக 18 வயதுக்குட்பட்ட ஹொக்கி அணியினருக்கு ஹாக்கி குழு ஏற்பாடு செய்த பாராட்டு வைப்பவம் கல்லூரி அதிபர் ரிஸ்வி மரிக்கார் தலைமையில் கொழும்பில் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக இலங்கைக்கான இந்தோனேசியாவின் தூதுவர் தேவி குஸ்தினா டொபின் சாஹிரா கல்லூரி ஹொக்கி அணியின் சாதனையை பாராட்டி உடன் அணியின் தலைவர் ஷமில் கமலுக்கு விருது வழங்கிவைப்பதை காணலாம். (படம்: ருஸைக் பாரூக்)

# இந்திய இரணுவத்திற்கு மாலைதீவு காலக்கெடு




மாலைதீவு ஜனாதிபதி மொஹமட் முய்சு, மார்ச் 15ஆம் திகதிக்குள் இந்திய இராணுவத் துருப்புகள் நாட்டைவிட்டு வெளியேற வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

இந்திய அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்திய பின் அந்தக் காலக்கெடு முடிவு செய்யப்பட்டதாக ஜனாதிபதியின் உதவியாளர் கூறினார். மாலைதீவில் இந்திய இராணுவத்தின் சுமார் 89 வீரர்கள் உள்ளனர்.

அவர்கள் மனிதாபிமான, மருத்துவச் சேவைகளை வழங்குவதற்காக இருப்பதாகவும், அவர்கள் அங்கேயே தொடர்வது பற்றி இருநாட்டுக்கும் இணக்கமான முடிவை ஆராய்வதாகவும் இந்திய வெளியுறவு அமைச்சு தெரிவித்தது.

மீண்டும் பேச்சுவார்த்தை நடத்தப்படும் என்றும் அது கூறியது. மாலைதீவு, இந்தியாவின் முக்கிய அண்டை நாடாகக் கருதுகிறது. ஆனால் ஜனாதிபதி முய்சுவின் அரசாங்கம் சீனாவுடன் நெருங்கிய உறவை நாடுகிறது.

# நகருக்குள் புகுந்த எரிமலைக் குழப்பு



ஐஸ்லாந்தின் ரெய்க்ஜேன்ஸ் தீபகற்பத்தில் உள்ள எரிமலை வெடித்ததில் கிரிண்டாவிக் எனும் நகருக்குள் எரிமலைக் குழம்பு புகுந்துள்ளது.

அந்த மீன்பிடி நகரத்தின் குடியிருப்பாளர்கள் அனைவருமே அங்கிருந்து வெளியேற்றப்பட்டதாகத் தகவல்கள் கூறுகின்றன.

கடந்த மாதமும் இந்த எரிமலை வெடித்ததை அடுத்து மலையைச் சுற்றித் தடுப்புச் சுவர்கள் அமைக்கப்பட்டிருந்தன. சீறிவந்த எரிமலைக் குழம்பை அந்தத் தடுப்புகளால் முழுமையாகத் தடுத்து நிறுத்த இயலவில்லை.

எரிமலைக் குழம்பு பெருகிவந்ததால் அந்த நகருக்குச் செல்லும் முக்கிய பாதை துண்டிக்கப்பட்டுள்ளது. எரிமலைக் குழம்பால் நகரின் வீடுகளும் கட்டடங்களும் தீப்பிடித்ததாகக் கூறப்பட்டது.

# பலூன்கள் மூலம் தாய்வான் மக்களை அச்சுறுத்த முயற்சி



சீனா எமது வான் பரப்புக்கு பலூன்களை அனுப்புவதன் மூலம் பொது மக்களின் மன உறுதியைப் பாதிக்கும் வகையில் அச்சுறுத்த முயற்சி செய்வதாக தாய்வான் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

சர்வதேச பயணிகள் விமானப் போக்குவரத்துக்கு இந்த பலூன்கள் அனுப்பிவைக்கப்படும் பாதைகள் பெரும் இடையூறாகவும் அச்சுறுத்தலாகவும் அமைந்திருப்பதாகக் குறிப்பிட்டுள்ள தாய்வான் பாதுகாப்பு அமைச்சு, விமானங்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தத் தேவையான உடனடி நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறும் சம்பந்தப்பட்ட தரப்புக்கு ஆலோசனை வழங்கியுள்ளது.

இது தொடர்பில் பாதுகாப்பு அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில், பலூன்கள் அனுப்பி வைக்கப்படுவதன் நோக்கம் தெளிவாகத் தெரியவில்லை. என்றாலும் இவ்விடயத்தை பாதிப்புக்கள் ஏற்படாத வகையில் அமைதியாகவும் பகுத்தறிவுடனும் கையாளுவது அவசியம் என்றும் குறிப்பிட்டுள்ளது.

# சர்வதேச செய்திகள்

# இஸ்ரேலின் தொடரும் உக்கிர தாக்குதலில் காசாவில் உயிரிழப்பு 24,000ஐ தாண்டியது

## சீன வெளியுறவு அமைச்சரும் பிராந்தியத்திற்கு பயணம்



காசாவில் இஸ்ரேல் தொடர்ந்து நடத்தும் வான் மற்றும் பீரங்கி தாக்குதல்களில் நேற்றைய (15) தினத்திலும் பலஸ்தீனர்கள் பலர் கொல்லப்பட்ட நிலையில் அங்கு உயிரிழப்பு எண்ணிக்கை 24,000ஐ தாண்டி இருப்பதோடு மேலும் 8,000க்கும் அதிகமானோர் காணாமல்போயுள்ளனர்.

கடந்த ஒக்டோபர் 7 ஆம் திகதி ஆரம்பமான இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் இடையிலான போர் தற்போது 100 நாட்களைத் தாண்டி நீடிப்பதோடு மேற்குக் கரையிலும் கொந்தளிப்பு சூழல் இருந்து வருகிறது. அதேபோன்று லெபனான் எல்லையில் மோதல்கள் மற்றும் செங்கடலில் யெமன் ஹூத்தி கிளர்ச்சியாளர்களின் தாக்குதல்கள் இந்தப் போர் பிராந்தியம் எங்கும் பரவும் நெருக்கிடியை ஏற்படுத்தியுள்ளது.

மறுபுறம் இந்தப் போரினால் காசாவில் 2.4 மில்லியன் மக்களும் பாரிய மனிதாபிமான நெருக்கடி ஒன்றை எதிர்கொண்டிருப்பதோடு அங்குள்ள 90 வீதமான மக்கள் தமது வீடுகளை விட்டு வெளியேறியுள்ளனர்.

இந்நிலையில் காசாவெங்கும் இடம்பெற்ற உக்கிர வான் மற்றும் பீரங்கி தாக்குதல்களில் மேலும் 60க்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டதாக காசா சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. கடந்த ஞாயிறு இரவு மகளிர் பாடசாலை ஒன்று மற்றும் பல டஜன் வீடுகள் தாக்கப்பட்டதாக காசா அரச ஊடகம் கூறியது.

இதில் தெற்கு நகரங்களான கான் யூனிஸ் மற்றும் ரபா அதேபோன்று காசா நகரைச் சூழவுள்ள பகுதியில் நேற்று தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளன.

இதேவேளை கடந்த 24 மணி நேரத்தில் குறைந்தது 132 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டதாகவும் குறைந்தது 252 பேர் காயமடைந்திருப்பதாகவும் காசாவின் சுகாதார அமைச்சு நேற்று கூறியது. "பாதிக்கப்பட்ட கணிசமானவர்கள் தொடர்ந்து இடிபாடுகளுக்கு கீழும், வீதிகளிலும் அம்புலன்ஸ்களிலும் உள்ளனர். சிவில் பாதுகாப்பு குழுக்களுக்கு அவர்களை அடைய முடியாமல் உள்ளது" என்று அந்த அமைச்சு பேஸ்புக் பதிவில் குறிப்பிட்டுள்ளது.

இதன்படி கடந்த ஒக்டோபர் 7 ஆம் திகதி தொடக்கம் காசாவில் உயிரிழந்தவர்கள் எண்ணிக்கை 24,100ஆக அதிகரித்துள்ளது.

நான்கு மாதங்களாக நீடிக்கும் இந்த தொடர்ச்சியான தாக்குதல்களில் காசாவில் கொல்லப்பட்ட சிறுவர்கள் எண்ணிக்கை 10,400 ஆக அதிகரித்திருப்பதோடு குறைந்தது 60,317 பேர் காயமடைந்துள்ளனர்.

மத்திய காசாவின் அல் அக்ஸா மருத்துவமனைக்கு கடந்த ஞாயிறன்று கழுதை வண்டியில் சடலங்கள் குவிக்கப்பட்டு கொண்டுவரப்பட்டன.

தனது மனைவிக்கு சிகிச்சை வழங்கப்படும் அவசர சிகிச்சை பிரிவுக்கு வெளியில் காத்திருந்த ஹிஷாம் அபூ சுவே, பொதுமக்களுக்கு பாதுகாப்பு இருக்கும் என்று தமது குடும்பம் நம்பி வந்ததாக தெரிவித்தார். "நாம் அமைதியாக இருந்து கொண்டிருக்கும்போதே ஏவுகணை வந்து தாக்கியது" என்று அவர் ஏ.எப்.பி. செய்தி நிறுவனத்திடம் தெரிவித்தார்.

காசாவில் உள்ள மக்கள் நரகத்தில் வாழ்கிறார்கள் என்று உலக சுகாதார அமைப்பின் தலைவர் டெட்ரோஸ் அதனொம் கெப்ரியேசுஸ் கூறினார். அங்கு வேகமாக பஞ்சம் உருவெடுத்து வருவதாக ஐ.நா முன்னதாகக் கூறியதை எதிரொலிப்பதாக இது இருந்தது.

"தீவிர நாட்பட்ட நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் கவனிப்பு இல்லாததால் இறக்கின்றனர். குறைந்த அளவான சுத்தமான நீர் அல்லது துப்புர இன்றி மிகக் குறுகிய இடத்தில் அதிகமாக குவிக்கப்பட்டிருக்கும் மக்களிடையே நோய்கள் பரவி வருகின்றன" என்று கெப்ரியேசுஸ் கூறினார்.

போர் காரணமாக தப்பிச் செல்லும் பெரும்பாலான மக்கள் தற்போது காசாவின் எகிப்து எல்லையை ஒட்டிய ரபா நகரில் தஞ்சமடைந்துள்ளனர். அந்தப் பகுதி தற்போது காசாவின் அதிக சனநெரிசல் மிக்க இடமாக மாறியுள்ளது.

"உணவு இல்லை, நீர் இல்லை, வெப்பமூட்டும் கருவி இல்லை. நாம் குளிரினால் இறந்து வருகிறோம்" என்று வடக்கு காசாவில் இருந்து ரபா நகரில் இடம்பெயர்ந்துள்ள முஹமது கஹில் தெரிவித்தார்.

கடந்த ஒக்டோபர் 7 ஆம் திகதி இஸ்ரேல் மீது பலஸ்தீன போராளிகள் நடத்திய தாக்குதலின் போது கடத்தப்பட்ட சுமார் 250 பணயக்கைதிகளில் தொடர்ந்தும் 132 பேர் ஹமாஸ் பிடியில் இருப்பதாக நம்பப்படுகிறது. இவர்களில் குறைந்தது 25 பேர் கொல்லப்பட்டிருப்பதாக சந்தேகிக்கப்படுகிறது.

இந்நிலையில் தமது பிடியில் இருக்கும் மூன்று பணயக்கைதிகளின் வீடியோ ஒன்றை ஹமாஸ் நேற்று முன்தினம் வெளியிட்டது. அதில் அவர்கள் பலஸ்தீனத்தின் மீதான தாக்குதலை நிறுத்தும்படி இஸ்ரேல் அரசை வலியுறுத்தியுள்ளனர்.

37 விநாடிகள் கொண்ட அந்த வீடியோவில் 26 வயது நோவா அர்கமானி, 53 வயது யாசி ஷரபி மற்றும் 38 வயது இடாய் சிவிர்ஸ்கி ஹிப்ரு மொழியில், தாம் திரும்பி வருவதற்கு நடவடிக்கை எடுக்கும்படி இஸ்ரேலிய நிர்வாகத்தை கேட்டுள்ளனர். இந்த வீடியோ முடிவில், "அவர்களின் நிலை பற்றி நாளை நாம் தெரியப்படுத்துவோம்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த வீடியோ எப்போது எடுக்கப்பட்டது என்பது உறுதி செய்யப்படவில்லை.

இந்நிலையில் காசா மீதான இஸ்ரேலிய குண்டு வீச்சுக்கு மத்தியில் சில பணயக்கைதிகளுடனான தொடர்பை இழந்துவிட்டதாக ஹமாஸ் அமைப்பு ஞாயிறன்று (14) கூறியது. அவர்கள் கொல்லப்பட்டிருக்கக் கூடும் என்றும் அது குறிப்பிட்டது.

இஸ்ரேல் மற்றும் லெபனான் எல்லையில் ஹிஸ்புல்லா மற்றும் இஸ்ரேலிய படைகள் இடையே தொடர்ந்து பரஸ்பரம் தாக்குதல்கள் இடம்பெற்று வருகின்றன. கடந்த ஞாயிற்றுக் கிழமை இடம்பெற்ற ஏவுகணை தாக்குதல் ஒன்றில் இரு இஸ்ரேலிய பொதுமக்கள் கொல்லப்பட்டதாக மருத்துவ வட்டாரம் குறிப்பிட்டதோடு லெபனானில் இருந்து எல்லை கடந்து வந்த மூன்று போராளிகள் துப்பாக்கிச் சண்டையில் கொல்லப்பட்டதாக இஸ்ரேல் இராணுவம் கூறியது.

காசாவில் இஸ்ரேல் எந்த உண்மையான வெற்றியையும் அடையாத நிலையில் அது சண்டையை முடிவுக்குக் கொண்டுவந்து இராஜதந்திர தீர்வுக்கான பேச்சுவார்த்தைக்கு தள்ளப்பட்டிருப்பதாக ஹிஸ்புல்லா தலைவர் ஹசன் நஸ்ரல்லா தெரிவித்துள்ளார்.

பதற்றத்தை தவிர்க்கும் மற்றொரு முயற்சியாக சீன வெளியுறவு அமைச்சர் வாங் யீ எகிப்து சென்றுள்ளார். அமைதி மற்றும் பலஸ்தீன நாட்டுக்கான சர்வதேச மாநாடு ஒன்றுக்கு அவர் அழைப்பு விடுத்துள்ளார். இந்த சுற்றுப்பயணத்தில் வாங் யீ, ஜோர்தான், இஸ்ரேல், மேற்குக் கரை மற்றும் ஐக்கிய அரபு இராச்சியத்திற்கு பயணிக்கிறார்.

இதேவேளை யெமன் ஹூத்தி கிளர்ச்சியாளர் பகுதியில் இருந்து அமெரிக்க போர் கப்பலை நோக்கி வீசப்பட்ட ஏவுணை ஒன்றை சுட்டு வீழ்த்தியதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

செங்கடலில் நிலைகொண்டிருக்கும் யு.எஸ்.எஸ். லபூன் கப்பலை நோக்கி வந்த கப்பல் எதிர்ப்பு ஏவுகணையை அமெரிக்கா போர் விமானம் மூலம் சுட்டுவீழ்த்தியதாக குறிப்பிட்டுள்ளது.

பலஸ்தீனத்திற்கு ஆதரவாக செங்கடலில் செல்லும் கப்பல்கள் மீது தாக்குதல் நடத்தும் ஹூத்திக்களின் நிலைகள் மீது அமெரிக்கா மற்றும் பிரிட்டன் தாக்குதல்களை நடத்திய நிலையிலேயே இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கடந்த நவம்பரில் இஸ்ரேலுடன் தொடர்பு பட்ட கெலக்சி லீடர் கப்பலை கைப்பற்றியது தொடக்கம் ஹூத்திக்கள் குறைந்தது 26 கப்பல்களை இலக்கு வைத்து தாக்குதல் நடத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 ஜனவரி மாதம் 16ம் திகதி செவ்வாய்க்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.